பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

tamilnenjam.com

நவம்பர் 2025







## தையல் காரர் செய்யுள் காரராக ஆனார்...

நேர்காணல்

## திரு சங்கரபாண்டியன்

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

உதயம் 1972 – நவம்பர் 2025

647

நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸுர் ரஹ்மான்

பாவேந்தல் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

பாவலர்மணி தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் ஈழபாரதி

வடிவமைப்பு :

அமின் மொஹமெட்

ஆயிஷா சகீலா

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...

**இராம வேல்முருகன்**
எண் 12 புங்கஞ்சேரி முதன்மைச் சாலை
வலங்கைமான் 612804
திருவாரூர் மாவட்டம்
தமிழ்நாடு , இந்தியா
தொடர்பு எண் +91 9952529619 ( கட்செவி )
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின்கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

நெஞ்சோடு நெஞ்சம்

அன்புத்தமிழ் நெஞ்சங்களுக்கு என் அன்பான வணக்கம்!

எல்லோரும் நலமாக இருப்பீர்களென நம்புகிறேன். புதுமணங்கமழும் புத்தம் புது நவம்பர் 'தமிழ்நெஞ்சம்' இதழுடன் உங்களை சந்திக்க வந்துள்ளேன்.

நாம் செய்யும் சில நல்ல காரியங்களை சிலசமயம் இறைவன் மறைவாகவே வைத்திருப்பான். அவன் நாட்டப்படியே அவற்றை வெளிப்படுத்தவும் அவன் ஒரு நேரத்தை நியமித்திருப்பான். இது இறைவன் நம் பொறுமைக்கு வைக்கும் சோதனையாகவும் கூட இருக்கலாம். நாம் பொறுமையாக இருக்கும் பட்சத்தில்,நாம் செய்த நல்வினைகள் நம் நிழலாக நம்மைத் தொடர்ந்து வரும் என்பது திண்ணம். பிரதிபலன் பாராது நாம் பிறருக்கு செய்யும் நன்மையும் அவ்வாறே காலம் கனிந்து வருகையில், நாம் எதிர்பாரா தருணங்களில் குடையாக விரிந்து நிழல் தரும். ஆகவே உலகத்தின் பார்வை எப்படியிருந்தாலும், உதவியைப் பெறுபவர்கள் கூட மறந்தே போனாலும், யாருக்கும் உதவி செய்வதில் தயக்கம் காட்டாதீர்கள் என்ற வேண்டுகோளை அன்பர்களான உங்களிடம் முன்வைக்கிறேன்.

இம்மாதம் 19 ஆம் திகதி சர்வதேச ஆண்கள் தினம். பெண்களை மகளிர் தினத்தில் கொண்டாடுவது போல் ஆண்களையும் கொண்டாட வேண்டியதில்லை தான். ஆனால் அவர்களுக்குள்ளும் அழகிய மனதொன்று இருப்பதை, பொறுப்புணர்ச்சி இருப்பதை புரிந்து கொண்டாலே போதும். அந்த புரிந்துணர்வின் சக்தியில் உலகம் சீராக இயங்கும்.

உங்கள் இரசனைக்கேற்றவாறு பல அம்சங்களை சுமந்து வந்திருக்கும் நமது இதழில் உள்ள குறைநிறைகளை ஒரு மடல் மூலமாவது தெரியப் படுத்துங்கள்! உங்கள் கருத்தும், அடுத்த டிசம்பர் மாத இதழை அலங்கரிக்கட்டுமே! மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்!

எல்லோருக்கும் வாழ்த்துகள்!

என்றென்றும் அன்புடன்
தமிழ்நெஞ்சம் அமின்
(ஆசிரியர்)

பட விநயம் : கூகுள்

# தேவதை



அலெக்ஸ் ஆபீஸ் வந்து விட்டானே தவிர மனம் ஒரு நிலையில் இல்லை. வந்ததில் இருந்து வேலை ஓடவில்லை..

காலையில் அப்பா ஊரில் இருந்து வந்திருந்தார். அவர் வந்தாலே இந்த ப்ரச்சனையும் வந்து விடும். அவருக்கு அவர் தங்கை பெண்ணை அலெக்ஸ் கல்யாணம் செய்து கொள்ளவில்லை என்று ஆத்திரம். அதிலும் கல்யாணம் ஆகி இரண்டு வருடங்கள் ஆகியும் ரோசிக்கு குழந்தை பிறக்கவில்லை என்பதால் ஆத்திரம் இன்னும் அதிகமாகிக் கொண்டு இருந்தது. வரும் போதே அலெக்ஸுக்கு வேறு பெண் பார்த்து முடிக்க வேண்டும்... பேரக் குழந்தையை கொஞ்ச வேண்டும் என்று சொல்லிக் கொண்டே தான் வந்தார்.

மருமகளை அழவைத்து விட்டு தன் சகோதரியை பார்க்க போய் விட்டார். அழும் மனைவியை சமாதானப்படுத்தி விட்டு ஆபீஸ் வந்து விட்டான் அலெக்ஸ்.

அலெக்ஸ்.... ஊரில் படிக்கும்போதே அவன் வீட்டில் எப்போதும் நாய்களும், பூனைகளும், கோழி, வாத்து முதலிய வளர்ப்பு பிராணிகளும் நிறைந்திருக்கும். இதைத் தவிர ரோட்டில் அடிபட்டு கிடக்கும் எல்லா உயிரினத்தையும் காப்பாற்றுவது அவன் அன்றாட வேலை.

அப்படி ஒரு சந்தர்ப்பத்தில் தான் ரோஸியை சந்தித்தான். ரோட்டில் அடிபட்டு கிடந்த ஒரு கிளியை தூக்கிக்கொண்டு மிருக வைத்தியரிடம் ஓடும்போது யோசிக்காமல் பைக்கை எடுத்துக் கொண்டு வந்த அலெக்ஸை அப்போது சரியாக கவனிக்கவில்லை. ஆனால் அந்த சமயத்தில் அவன் நடந்துகொண்ட விதம் அவன் மேல் மிகுந்த மரியாதையை ஏற்படுத்தியது. அடுத்தடுத்த நாட்களில் கிளியைப் பற்றி அவன் விசாரித்த விதம், மற்றும் அவன் வீட்டில் உள்ள ப்ராணிகள் சரணாலயத்தைப் பற்றி கேள்விப்பட்டது இவை அவளை அவன் வீடு தேடி போக வைத்தது.

ப்ராணிகள் மேலிருந்த பாசம் இருவரையும் நெருக்கமடைய செய்தது. அவன் அம்மாவிற்கும் ரோஸியை மிகவும் பிடித்து போக அப்பாவின் எதிர்ப்பை மீறி ஒரு நன்னாளில் இருவரும் கல்யாணம் செய்து கொண்டார்கள்.

ஒரு வருடம் மிகவும் சந்தோஷமாக சென்றது. ஊரில் இருந்தவரை பிராணிகளின் துணை அவர்களை வேறு எதைப்பற்றியும் கவலைப்பட விடவில்லை. அலெக்ஸ் சென்னை கம்பெனியில் வேலை கிடைத்து

சென்னை வந்த பிறகு அடுத்த மூன்று மாதத்தில் ரோஸியும் அவனுடன் வந்து விட்டாள். கீஊரில் இருந்ததுபோல் பெரிய வீடாக இல்லாமல் அபார்ட்மெண்ட் வாசம்... செல்லப் பிராணிகள் பிறிவு ஆகியவை இருவரையும் கொஞ்சம் புரட்டித்தான் போட்டது. அதோடு குழந்தை இல்லாத சோகம் வேறு மனதை ரணமாக்கியது.. அதில் ஊசி ஏற்றுவது போல் மாமா பேசியது அவள் மனதை குதறியது. சரியாக மதியவேளையில் மாமாவிடம் இருந்து போன்.. ரோஸிம்மா கொஞ்சம் உடனே புறப்பட்டு வா..

எங்க மாமா இருக்கீங்க.. எனக்கு சரியா தெரியல்லம்மா.. இரு பக்கத்துல இருக்கற தம்பி கிட்ட போனைத் தறேன்.. இடத்தை கேட்டுக்கோ. அலெக்ஸையும் கூட்டிக்கிட்டு வந்துடு. சார் எங்க இருக்கீங்க?? வண்டலூர் கேளம்பாக்கம் ரோடுல இருக்கோம்மா.. உடனடியாக கூடுவாஞ்சேரியில் இருந்து வண்டலூர் வீட்டுக்கு அலெக்ஸை வரவழைத்து இருவருமாக மாமாவைத் தேடி, அடுத்த பதினைந்து நிமிடங்களில் அவரை அடைகின்றனர். ரத்தம் சொட்ட சொட்ட கிடக்கும் ஒரு மானை மடியில் ஏந்தியவராக மாமா. உடன் இருந்த நபர் போலீஸ் மற்றும் வனத்துறைக்கு புகார் கொடுத்து விட்டதாகவும் மோதிய வண்டியை பிடித்து வைத்து உள்ளதாகவும் தகவல் கொடுக்க.. மானின் உயிரை காப்பாற்ற வேண்டி செயல்பட ஆரம்பிக்கிறாள் ரோஸி.. ஆனாலும் பலனின்றி ரோஸியின் மடியில் அந்த மான்குட்டி மூச்சடங்கிய வேளை தன் அடிமடியில் ஒரு தேவதை புகுந்தது போல் சிலிர்ப்பு ரோஸிக்கு..... போலீஸூம் வனத்துறையினரும் வந்து முறையாக நிகழ்வுகளை பதிவு செய்த பிறகு நெஞ்சடர்ந்த சோகத்துடன் வீடு திரும்பியவர்களுக்கு மறுநாள் அந்த சந்தோஷ செய்தி கிட்டியது. அந்த குடும்பம் ஒரு தேவதையின் வரவுக்காக காத்திருக்கிறது.

**வெங்கட் க்ருஷ்ணா**

# துளிப்பா

பூனைக்குட்டி காத்திருக்கிறது
பசிக்காக தினமும் வேதனையோடு.

கடந்தகால வரலாற்று
தகவல்கள் சொல்கிறது நாட்காட்டி.

மரங்கள் நிறைந்த காட்டில்
தொடர்கிறது பெருங்கொள்ளை

மனதில் தோன்றும்
நிறைவேறாத ஆசைகள்
மாறுகிறது நோயாய்!

எறும்புகளின் வாழ்க்கையில்
நாள்தோறும் உழைப்போடு தொடருது !
ஒற்றுமை

யாருமற்ற வீட்டில் வாழ்ந்து வருகிறது
நம்பிக்கையோடு! வௌவால்.

கருப்பு வெள்ளை கலந்து
உருவாகிறது! நமது தலைமுறை.

அடிக்கோடிட்ட பக்கங்களை
படித்தவருக்கு வருகிறது மீண்டும் காதல்.

ஓய்வெடுக்க முடியாதபடி
சுழன்று கொண்டே இருக்கிறது பூமி.

மூன்றெழுத்து மந்திரமாய்
அனைவரையும் மகிழ்வித்து
மகிழ்வது அம்மா
திருவிழா கூட்டத்தில்
கண்ணீரோடு நிற்கும்
பெண்ணிடம் கைவரிசை

மக்கள் குறையை தீர்க்க
நாள்தோறும் போராடுகின்ற காவலர்கள்..



**ப.வெங்கட்ரமணன்**
குளித்தலை





**உமா ஸ்வாமிநாதன்,**
பெங்களூரு

# போதைப்பொருட்களும் எதிர்கால இளைஞர்களும்

சமீபத்தில் மிகவும் அதிகமாக சமூகத்திற்கும், தனிப்பட்ட மனித ஆரோக்கியத்திற்கும் சீர்குலைவை ஏற்படுத்தக் கூடிய விஷயங்களுள் இந்த போதைப் பழக்கமும் ஒன்று. இதனை சீர்படுத்த பல சட்ட விதிமுறைகள் மேற்கொள்ளப்பட்டாலும் இதனை முற்றாக ஒழிப்பது மிகப்பெரிய சவாலாக உள்ளது.

மனித சமூகத்தைச் சீர்கெடுப்பதில் போதைப்பொருள் உபயோகம் முதலிடம் வகிக்கிறது என்பது வருத்தமான விஷயம்.

போதைப்பொருளை, அறிந்தோ அறியாமலோ பயன்படுத்தும் போதும் விபரீதத்தில் கொண்டு விடுகிறது. உடலியல் மற்றும் உளவியல் ரீதியாக மிக அதிகளவில் அடிமைப்படுத்தக் கூடியதாக உள்ளது.

அறிவை மழுங்கச் செய்து சிந்திக்கும் திறனை அழித்து குடும்பம், சமூகத்தை தவறான பாதையில் இழுத்துச்சென்று விடும். வாழ்க்கைத் தரத்தை பாதிக்கும் . ஒரு நபரால், முழு குடும்பமும் பாதிக்கப்படுகிறது.

சிறுவர்களும் மாணவர்களும் கூட போதைக்கு அடிமைப்படுகிறார்கள்.

அடிமைப்படுத்தக்கூடிய இந்த போதைப் பொருட்கள், மனிதனின் நடத்தையில் மாற்றத்தினை கொண்டு

வரும், ஆரோக்கியத்துடன் மனநலமும் பாதிக்கப்படும்.

மேலும், இப்படி அடிமையாக இருப்பவர்கள் பொதுவாக பணப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அதற்காக அடுத்தது திருடுவதும் நடக்கும்.

ஆரம்பத்தில் ஆர்வம் தூண்டப்பட்டு போதைக்கு அடிமையான பின்னர் அதனை விட்டு வெளிவர முடியாமல், உடல் சோர்வையும் நோயையும் கொண்டு வந்து மாணவர்களின் கல்வியும் பாதிக்கும்..

அத்தோடு போதைக்கு அடிமையான நிலையில் எதை செய்கிறோம் என்று அறியாமல் பல சமூக சீர் கேடுகளுக்குள்ளாகின்றனர்.

போதைவஸ்து அதனை பழகாமல் இருக்க, அதை பற்றிய விழிப்புணர்வை மாணவர்களிடத்தில் ஏனையவரிடத்திலும் ஏற்படுத்துதல் அவசியமாகும்.

இளைஞர்களின் வாழ்வைச் சீரழிக்கிறது. இவர்கள் மட்டுமின்றி இவர்களின் குடும்பங்கள், இவர்களால் பாதிப்புக்கு உள்ளாகும் அப்பாவிப் பெண்கள், குழந்தைகள் என்று பலருடைய வாழ்வும் சீரழிகின்றது.

தனிமனித ஒழுக்கம் சீர்கெட்டு நாட்டின் முன்னேற்றப் பாதைக்கே தடையாக இருக்கிறது.

போதைப்பொருள் பயன்படுத்து பவர்களில் மூன்றில் ஒருவர் பெண் என்பது இன்னும் வேதனைக்குரிய அதிர்ச்சித் தகவல். போதைக்கு அடிமையாவோரில் அதிகம் படித்தவர்களும் இளைஞர்களும் ஆவர்.

இன்றைய மாணவ தலைமுறையினை சீர்கெடுக்கும் இந்த போதைப்பொருட்களை பற்றிய ஆர்வத்தை குறைத்து, தவறான வழியில் இட்டுசெல்லும் சூழலிடமிருந்தும் நபர்களிடம் இருந்தும் விலகி அது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி போதைக்கு அடிமையாதலிலிருந்து பாதுகாத்தல் அவசியம்.

போதைப் பொருளை ஒழிப்போம். மாணவ சமுதாயத்தை காப்போம்.



# கூகுள் குயில்

குகூள் குயிலே கூவாயோ
பச்சைக் கிளியே பேசாயோ
கொழும்பு போகும் பாதை தனை
கூகுள் மைப்பில் சொல்லாயோ

நான்கு திக்கும் நீயறிவாய்
நான் தேடிப் பார்த்தேன்
உனைக் காணவில்லை
பிச்சை இட்ட பிச்சையடி
கூகுள் மகளாய் நீ பிறந்தாய்

உன் பேச்சில் அல்லவோ
என் முகவரி மறந்தேன்
மூச்சுக்கு மூச்சு
முகவரி சொல்கிறாய்

கல்லணை தாண்டக் காவேரியோ
நான் உன்னைக்
காதலிக்கும் எதிலியோ
சொல்லடி என்னவளே

**சி . மேகவர்னன் (மார்க்கோணி)**
கனடா

குழந்தைகளின் நன்னடத்தையை அழிக்கும் வேகமான ஆயுதம்

# முன்மாதிரியின் (ரோல்மாடலின்) வீழ்ச்சி

குடும்பத்தில் குழந்தைகளின் நன்னடத்தையை அழிக்கும் வேகமான மற்றும் சக்திவாய்ந்த ஆயுதம் (ரோல்மாடலின் வீழ்ச்சி) ஆகும்.

(ரோல்மாடலின் வீழ்ச்சி) என்றால் என்ன?பிள்ளை வளர்ப்பானது, பின்பற்றல் மற்றும் பிரதிபலித்தல் என்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது. ஒரு குழந்தை பிறக்கும் போது, அதன் எல்லா புலன்களும் பெற்றோரை நோக்கியே கவனம் செலுத்துகின்றன. அதனால், குழந்தை அவர்களிடமிருந்து ஒவ்வொரு செயலையும், நடத்தையையும், வார்த்தையையும் உள் வாங்கிக் கொள்கிறது. எனவே குழந்தை பெற்றோரின் நல்லொழுக்கத்திற்கான கண்ணாடியாகிறது.

தாய் கோபப்படுபவராக இருந்தால், குழந்தையும் கோபப்படும். தந்தை திட்டுபவராகவோ அல்லது ஆபாசமான வார்த்தைகளைப் பேசுபவராகவோ இருந்தால், குழந்தையும் அதே வார்த்தைகளை திரும்பச் சொல்லும். பெற்றோரில் ஒருவரிடம் மகிழ்ச்சி மற்றும் சமூக அக்கறை போன்ற நேர்மறையான பண்புகள் இருந்தால், குழந்தையும் அதைப் போலவே தாக்கமடையும். எனவே, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு ஒரு நல்ல முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

பெற்றோர்கள் தமது குழந்தைகளுக்கு முன்னால் தங்கள் தனிப்பட்ட தன்மைகளையும், நன்னடத்தைகளையும் பேணுவதே சரியான வழி. அவர்கள் நல்ல ரோல்மாடல்களாக இருந்தால் தான் தாக்கம் நேர்மறையாக இருக்கும். பெற்றோரில் ஒருவரிடம் குறைபாடு அல்லது மோசமான பண்பு இருந்தால், குழந்தைகளுக்கு முன்னால் அந்த குறைபாட்டைக் காட்டாமல் இருப்பதே சரியானது.

‘நீங்கள் (பாவத்தில்) சிக்கினால், (அதைப் பகிரங்கமாக்காமல்) மறைத்துக் கொள்ளுங்கள்‘ என்ற நெறிமுறையைப் பின்பற்ற வேண்டும். ஏனெனில், பெற்றோர் இந்த விதியைப் பின்பற்றவில்லை என்றால், அவர்களின் குழந்தைகளைக் கெடுப்பதில் அவர்களும் பங்களிப்பார்கள்.

குடிப்பவர், சூதாட்டம், கஞ்சா போதைப் பொருட்கள், ஆபாச திரைப்படங்கள் பார்ப்பது, திட்டுதல், தூஷிப்பது அல்லது அல்லாஹ் தடை செய்துள்ள வேறு எந்த தீய செயல்களில் ஈடுபடுபவர் என பெற்றோரில் ஒருவர் இருந்தால், அந்த பாதிக்கப்பட்டவர் தன்னை மறைக்கவில்லை என்றால், அவரது குழந்தைகள் அதைக் காண்பார்கள், அதன் மூலம் பாதிக்கப்படுவார்கள்.

ஒரு தந்தை தனது வீட்டிலும், நண்பர்களிடமும் குடித்ததைப் பகிரங்கப் படுத்தினார், அதனால் அவரது ஆண் மற்றும் பெண் குழந்தைகள் அனைவரும் அவரைப் போலவே குடிக்க ஆரம்பித்தனர்.

ஒரு தாய் உறவுகளைக் கெடுக்க சூனியக் காரர்களுடன் பழகுவதை அறிந்தேன். அவளது மகளும் அவளது அடிச்சுவடுகளைப் பின்பற்ற ஆரம்பித்தாள்.

அதிக அளவில் சூதாடிய ஒரு தாத்தாவை நான் அறிவேன். அவருடைய மகனும் பேரனும் அவரைக் போலவே சூதாட ஆரம்பித்தார்கள்.

ஏனெனில், குழந்தை தன் பெற்றோரை கண்மூடித்தனமாக பின்பற்றும்.

சில தந்தையர் தங்கள் குழந்தைகளுக்கு முன்னால் பெண்களுடனான தவறான உறவுகளைப் பற்றி பேசி, அந்த உறவைப் பெருமையாகக் கூறுகிறார்கள். வேறு சிலர் பெருமையுடன் குடித்து, தங்கள் குழந்தைகளும் குடிக்கும் படி செய்கிறார்கள். பெற்றோரில் ஒருவர் குழந்தைகளுக்கு முன்னால் தீய செயல்களைச் செய்தால்,

முதலில், ரோல்மாடலாக இருப்பதை வீழ்த்தி குழந்தைகளின் நன்னடத்தையை அழிக்கிறார்கள்.

இரண்டாவதாக, அல்லாஹ்வின் முன்னால் அவர்களின் பாவம் இரட்டிப்பாகும்.

இந்தச் செயலால் அவர்கள் மூன்று குற்றங்களைச் செய்கிறார்கள்:

முதலாவது: அவர்கள் செய்யும் தீய செயல்.

இரண்டாவது: அதைப் பகிரங்கப் படுத்துதல். அதாவது அதை அறிவித்தல் மற்றும் மறைக்காதிருத்தல்.

மூன்றாவது: தாம் செய்யும் தீய செயல்களைப் பற்றி பேசுவதன் மூலமோ அல்லது தீய செயல்களைச் செய்யும் போது குழந்தைகள் அவர்களை வெளிப்படையாகப் பார்ப்பதன் மூலமோ, சந்ததிகளைக் கெடுப்பதில் பங்களிக்கிறார்கள்.

கெட்ட செயல்களை வெளிப்படையாகச் செய்வதன் மூலம் ஏற்படும் கல்வியியல் ரீதியான விளைவுகள் நல்லொழுக்கத்தை அழிப்பதில் மிக மோசமானவை என்று இறைத்தூதர் எச்சரித்துள்ளார்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘வெளிப்படையாகச் செய்பவர்களைத் தவிர, என் சமுதாயத்தினர் அனைவரும் மன்னிக்கப்படுவார்கள். வெளிப்படையாகச் செய்தல் என்பது, ஒரு மனிதன் இரவில் ஒரு செயலைச் செய்துவிட்டு, அல்லாஹ் அதை மறைத்திருக்க, காலையில் ‘நான் நேற்றிரவு இப்படி இப்படிச் செய்தேன்‘ என்று கூறுவது. அவன் அல்லாஹ் மறைத்து வைத்திருந்த நிலையில் இரவைக் கடத்த, காலையில் அல்லாஹ்வின் திரையை விலக்குகிறான்.‘

இதன் பொருள் என்னவென்றால், ஒரு மனிதன் கெட்ட செயலை மக்கள் முன் செய்வதுதான். பெற்றோரில் ஒருவர் தங்கள் பிள்ளைகளுக்கு முன் வெளிப்படையாக ஒரு கெட்ட செயலைச் செய்தால், இந்த நபிமொழியின் கூற்று அவரையும் உள்ளடக்கும்.

ஒரு தாய் தன் தாயையும் தந்தையையும் வெளிப்படையாகவே ஒதுக்கி வைத்தாள்; அவர்களைப் பற்றி இழிவாகப் பேசினாள். விளைவு, அவளது பிள்ளைகள் வளர்ந்தபோது, அவர்கள் அவளை ஒதுக்கி வைத்து அவளைப் பற்றி இழிவாகப் பேசினார்கள்; அவள் தன் பெற்றோரிடம் செய்ததை அவர்கள் தங்கள் தாயிடம் மீண்டும் செய்தார்கள். இது கெட்ட பழக்கவழக்கங்களை வெளிப்படுத்துவதன் விளைவுகளில் ஒன்றாகும்.

பிள்ளைகள் தங்கள் பெற்றோரின்



நடத்தையைப் பிரதிபலித்து தங்கள் வாழ்வில் திரும்பச் செய்கிறார்கள். இதனால்தான் முன்மாதிரி முக்கியமானது. சரியான வளர்ப்பு விதி என்னவெனில், நம்மிடம் உள்ள மிக அழகானதை நம் பிள்ளைகளுக்குக் காட்டுவதும், நம்மிடமுள்ள மிக மோசமான நடத்தைகளையும் பண்புகளையும் மறைக்க முயற்சிப்பதும் ஆகும்.

பல தாய்மார்களும் தந்தைகளும் தங்கள் பிள்ளைகளுக்கு ஒரு நல்ல வளர்ப்புச் சூழலை வழங்குவதற்காக, பிள்ளைகள் பிறந்த பிறகு அவர்கள் செய்து வந்த கெட்ட பழக்கவழக்கங்களை விட்டுவிட்டார்கள் என்று எனக்குத் தெரியும்.

குழந்தைகளில் பின்பற்றுதல் என்பது இயல்பானது. குழந்தை மூன்று மாத வயதிலிருந்து தன் பெற்றோரைப் பின்பற்றத் தொடங்குகிறது. மேலும் ஒரு கண்காணிப்பு கேமரா போல அவர்களைப் பின்பற்றுவதைத் தொடர்கிறது.

பிறகு தனிநபர் பாத்திரங்களில் நடிக்கும் கட்டத்திற்குச் செல்கிறது. அதாவது, சில விஷயங்களை கற்பனை செய்து, தனக்குள்ளேயே நடித்துப் பார்க்கும் மற்றும் பின்பற்றும். இது ஐந்து முதல் ஏழு வயதுக்கு இடையில் நடக்கும்.

பிறகு, ஒரு திருமண விழா அல்லது மருத்துவரின் கிளினிக் போன்றவற்றை தன் சகோதரர்கள் அல்லது நண்பர்களுடன் நடிப்பது போன்ற கூட்டுப் பின்பற்றுதல் கட்டத்திற்குச் செல்கிறது. இவ்வாறு பின்பற்றுதல் குழந்தையின் வாழ்வில் தொடர்கிறது.

குழந்தையின் நல்லொழுக்கத்தைப் பாதுகாக்க வழி, முன்மாதிரியைப் பாது காப்பதும், அதை இகழாமல் இருப்பதும்தான்.

குழந்தைகளுக்காக பிரார்த்திப்போம்.

**ஏ எம் முர்ஷிதா பேகம்**

அக்குறனை, கண்டி

இலங்கை

# தரையில் விழும் மழைத்துளி



கிளை அசைத்துப் பறக்கும்
ஓர் அழகிய பறவை
கண்கள் இரசிக்கும்
ஒரு மேகவோட்டம்
முகம் மறைக்கும் சில நிமிட
மதியழகு

ஆற்றோரம் முகம் குளிக்கும்
மீன் கும்பல்
பெருங்கடலில் மழை விடும்
நீர்க்குமிழி
புகைப்படமெடுக்க சிரித்து விட்ட
கைக்குழந்தையின்
எதேச்சையான ஒரு புன்னகை

இராவானில் இருள் கிழிக்கும்
ஓர் வால்வெள்ளி
விழி மறைத்துப் பறக்கும்
வீட்டுமுற்றத் தேன்சிட்டு

காத்திருந்து கண் மறைத்திடும் சில
எதிர்பார்ப்புகள் என
வாழ்க்கைக் கோட்டில் வந்தமரும்
பல நினைவுகள் மீண்டும் காணக்
கிடைப்பதில்லை என்பதை
ஏற்றுக் கொள்ளும் இதயத்தின்
சிந்தனைக்கு சிகரம் கொடுக்கவே
இத்தனை அமைதியான இழப்புகள்...

**சேஹு மொஹம்மது பெனாஸிரா**

# என் கவிதை தூறல்கள்

நீறுபூத்த நெருப்பாய்
மறைந்திருக்கும்
சாதிய வெறி
என்ன சனம் நீங்க
என்ற கேள்வியில்...

யானைக்கு பிடித்தது
மனிதனுக்கும் பிடித்தது
மதம்

அவசர அவசரமாய்
நல்லவனாய்
மாறிக் கொண்டிருந்தார்கள்
தேர்தல் காலம்

விழிகளின் மோதல்
இதயத்தில்
காதல் மழை

எல்லோரிடத்தும் ஏமாந்தவன்
எல்லோரையும்
ஏமாற்றியப் பொழுது
அவனை
ஏமாற்றுக்காரன் என்றார்கள்

**செ. இலட்சுமணக்குமார்**
ஈரோடு

# தன்முனைக் கவிதைகள்

பட்டாசுகள் வெடிக்கலாம்
நேரக் கட்டுப்பாடுகள் உண்டு
பாதுகாப்பு நடவடிக்கை இதுவே
சிறார்கள் கேட்பதில்லை

திண்ணையில் ஓய்வெடுக்கிறார்
வயோதிகத் தாத்தா
தலைப்பக்கம் பாட்டி
வெற்றிலை இடிக்கிறாள்

மீன் சந்தையில்
விற்பனைக் கூடுகின்றன
அம்மனுக்குப் படையல்
ஆடி ஞாயிறுக்கிழமை

கள்ளப் பணம்
சொகுசு வாழ்க்கை
கொஞ்சக் காலம்
தண்டனை நிச்சயம்

பிரம்மன் படைப்பில்
நேர்ந்தது கவனக்குறைவு
படைப்பில் தோன்றினார்கள்
வரிசையில் திருநங்கைகள்

சொத்துத் தகராறு
வழக்குத்தொடர்கின்றது
வழக்கறிஞர் இல்லம்
நான்கு மாடிகளானது

கணவனின் குறட்டை
மனைவியின்உறக்கம்
பாதிப்பு அடைந்தது
விவாகரத்து கிடைத்தது

புரிதல் வேண்டும்
விட்டுக்கொடுத்தல் அவசியம்
தம்பதியர்கள் வாழ்வில்
சீரும் சிறப்புமுண்டு

காதலியின் பரிசு
கருப்புக் குடையானது
சூறாவளியில் சிக்கியது
காணாமல் போனது

**கவிஞர் =இரா.சீ.பாலகுமார் M.A**
சந்தோசபுரம் .சென்னை--600073.

# நான் யார்?..



நான் யார்?..
என்ற வினா
தினம் என்னை
குடைந்து விளையாடுகிறது

காலமாற்றங்கள் போல்
தினம் மாறிக்கொள்ளும்
இயற்கை போல்
என்னுள் பல மாறுதல்கள்
சில போது பிரமிக்கிறேன்
அவ்வப்போது அயர்ந்தும் விடுகிறேன்
நான் யாரென்று
அறிய முற்படும் போதெல்லாம்

கார் மேகம்
கண்ணீர் சிந்தும் தருணங்களில்
துள்ளி விளையாடி கூச்சலிடுகிறேன்
அதே...
அடைமழை
பெரும் வெள்ளமென
உருவெடுக்கையில்
கூட்டத்தோடு கூட்டமாய் ஏசிக்கொள்கிறேன்
மீண்டும்
வெள்ளத்தில் வீடுகள்
மிதந்திடுகையில்
வெயிலை வேண்டுகிறேன்

மழையில்லா உஷ்ணங்களில்
குளிப்பாட்டும் வியர்வையை
பொரிந்தும் தள்ளுகிறேன்

இருப்பதில் திருப்தியில்லை
இல்லாமையை தேடிய பயணம்
நான் யார்?என்பதை
உணர்த்த மறுக்கிறதா?
மறக்கிறதா?

இளைப்பாறத்தான்
இங்கே வந்தேன்
இயல்பு மறந்து
நிலைஇருப்பிடம் தேடுகிறேன்

**ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான்**
புல்மோட்டை
இலங்கை

# இயற்கை

தேனமுதை இறைக்கின்ற
  மாமழையோர் வரமே!!
தெம்மாங்கு இசைக்கின்ற
  பூங்குயிலின் சுரமே!!
தென்பாண்டி முத்துக்கள்
  கோர்த்தெடுத்த சரமே!!
தென்றலோடு கைகுலுக்கும்
  இளந்தென்னை மரமே!!

ஆடியாடி அசைந்து வரும்
  நந்தவனத் தேரு!!
ஆழ்கடலில் சங்கமிக்க
  ஆர்ப்பரிக்கும் ஆறு!!
புன்னகையை சிந்துவது
  பூவினத்தின் சீரு!!
மொட்டவிழும் அரும்புகளின்
  நேரம் என்ன கூறு!!



ஆகாய வீதியிலே
  நட்சத்திர கூட்டம்!!
அணியணியாய் சுடர்விட்டு
  விசித்திரம் காட்டும்!!
பருவத்தின் எழுச்சிதனை
  பௌர்ணமி கூட்டும்!!
ஏழு வண்ண உடையணிந்து
  வானவில்லின் ஆட்டம்!!

இலையுதிரும் கிளைகலெல்லாம்
  மீண்டும் அங்கே துளிர்க்கும்!!
இரவினிலே புல்நுனியில்
  பனித்துளிகள் சிரிக்கும்!!
விடிந்தவுடன் ஓடி ஒளிந்து
  தன் முகத்தை மறைக்கும்!!
சூரியனும் சந்திரனும்
  தன் கடமை முடிக்கும்!!

அலைகள்கூட கோபங்கொண்டு
  கொந்தளித்து அடங்கும்!!
கருவில் வாழும் உயிர்களுக்கும்
  உணவு கொண்டு வழங்கும்!!
தேனீக்கள் சேமிப்பது
  மருந்தாக விளங்கும்!!
இயற்கையோட சுழற்சியிலே
  உலகபந்தின் இயக்கம்!!

**லீ. லியாகத்அலி.**




# அப்பாவின் ஊன்றுகோல்

**கவிதைத் தொகுப்பு :** நா மயிலவன்

**முதல் பதிப்பு ஆகஸ்ட் :** 2025

**பக்கம் :** 80

**விலை ரூபாய் :** 100

**வெளியீடு :** ஸ்ரீ சக்தி வெளியீடு
மகாலிங்கபுரம் பொள்ளாச்சி

**தொடர்புக்கு :** 9865261110

---

ஒரு நத்தையின் நடை பயணம் நாயுருவி
மௌனத்தின் மொழி
மகரந்தச் சேர்க்கை
பழுத்த இலையின் புன்னகை

ஆகிய கவிதைத் தொகுப்புகளை வெளியிட்ட மயிலவன் அவர்கள் தலைமை ஆசிரியர் பணியில் இருந்து ஓய்வு பெற்றவர்.

'அப்பாவின் ஊன்றுகோல் எனது பூஜை அறைப் பொக்கிஷங்களில் ஒன்று. நான் பெற்ற பட்டங்களுக்கு சாட்சி. நம்பிக்கை நட்சத்திரம். உழைப்பின் ஊற்று. முன்னேற்றத்தின் முன்னோடி. அப்பாவின் மூன்றாவது கால். நடந்து செல்லும் பாதையில் உள்ள மேடு பள்ளங்களைக் காட்டி தட்டுத் தடுமாறி கீழே விழாமல் தாங்கும் துணைவன். அது அவருக்கு ஒரு வழிகாட்டி" என்று தனது முன்னுரையில் ஆசிரியர் குறிப்பிட்டிருப்பதைப் போலவே தன்னை வளர்த்து ஆளாக்கி இந்த உலகிற்கு நல்லதொரு குடிமகனாக உலக விட்ட தந்தைக்கு இந்த நூலை சமர்ப்பணம் செய்திருக்கிறார் ஆசிரியர். எளிமையான மொழியிலும் வலிமையான கருத்துக்களை புகுத்தி நகைச்சுவையுடனும் தொடர்ந்து மனதில் ஊறும் அன்பிலும் காதலிலும் தன்னை நிலைத்துக் கொண்டு காற்றாய் நீராய் அவசியமானதொரு எழுத்துச் சித்திரத்தை அப்பாவின் ஊன்றுகோலில் எழுதி இருக்கிறார் ஆசிரியர்.

உழைப்பு ஒன்றே மனிதனை மேன்மைப்படுத்தும் மிகச்சிறந்த ஆயுதம் என்பதையும் கல்வியின் வழியே தனது எல்லா கனவுகளையும் நிறைவேற்றிக் கொள்ள மனிதனுக்கு நிறைய வாய்ப்புகள் கிடைக்கும் என்பதையும் தொடர்ந்து உழைத்துக் கொண்டே இருப்பவர்களே உற்சாகமாக இருப்பார்கள் என்பதையும் நூலின் கவிதைகள் கோடிட்டுக் காட்டுகின்றன.

ஒவ்வொரு பிள்ளைகளும் தங்களது

தங்களை வளர்த்து ஆளாக்குவதற்கு அவர்கள் பட்ட இன்னல்களையும் உணர்ந்துகொள்வதற்கு அவர்கள் பெற்றோர்களாக மாறும்போதே அந்த வலியும் வேதனையும் தெரியும்

என்பார்கள்.. தொடர்ந்து எதிர்வரும் தலைமுறையினருக்கு அறிவுரையாகவும் எழுத்தாகவும் எழுதி வைத்தாலும் தான் படும் அனுபவங்களால் மட்டுமே ஒவ்வொரு மனிதனும் பிறரின் வேதனையை அறிய முடிகிறது. அந்த வகையில் இந்த நூலிலும் தனது பெற்றோர் பெற்ற துன்பங்களையும் பிள்ளைகளை வளர்ப்பதற்கு அவர்கள் கொடுத்த உழைப்பினையும் மிகச் சிறப்பான வரிகளில் எடுத்து இயம்புகிறார் மயிலவன் அவர்கள்.

பணி ஓய்வு பெற்று இருபது ஆண்டுகளாகியும் தனது மனைவியின் மீது காட்டும் பேரன்பும் பெருங்காதலும் நூலில் நல்லதொரு காதல் கவிதைகளை அவரை எழுத வைத்திருக்கிறது. ஆம் காதலுக்கு வயதில்லை தானே. காற்றும் காதலும் எப்போதும் நமக்குள் ஓடிக் கொண்டே இருந்தால் மட்டுமே வாழ்வில் நிலைத்திருக்க முடியும் என்பதை கவிஞர் இந்த நூலில் எழுதி இருக்கும் காதல் கவிதைகள் நிரூபித்து இருக்கின்றன.

நூலின் நிறைய கவிதைகள் தனது தந்தையின் நினைவுகளைப் போற்றும் வண்ணமும் தன்னை ஆளாக்குவதற்கு அவர் எவ்வளவு தூரம் உழைத்தார் என்பதையும் அதை கவிஞர் எப்படி புரிந்து கொண்டார் என்பதையும் அழகாக எடுத்துரைக்கின்றன. வெயிலின் அருமை நிழலில் தான் தெரியும் என்பார்கள். அதே போல் பெற்றோர்களினுடைய உழைப்பும் வழிகாட்டுதலும் அவர்கள் உயிருடன் இருக்கும் போது நாம் உணர்ந்து கொள்வதை விட அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்த பிறகு அதை எண்ணி எண்ணி உணர்ந்து வேதனைப்படுவதே அதிகம். அத்தகு அனுபவங்களை நூலின் நிறைய கவிதைகள் நமக்குள் கண்ணீரையும் வரவழைத்து அவரவர் பெற்றோர் மீதான பாசத்தையும் நேசத்தையும் உணர்த்தி விடுகின்றன.

அன்பு, பாசம், காதல், நட்பு, உழைப்பு, விவசாயம், நாட்டுப்பற்று, தேசத்தின் மீதான தொடர்ச்சியான அக்கறை, இயற்கையின் மீதான நேசம், சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கான ஆசை, நடைபயண நண்பர்கள் மீதான நட்பு, கால்நடைகள் வளர்ப்பதன் அவசியம், சமையலறைக் கருவிகள் இன்று சமையலில் ஏற்படுத்தும் தாக்கத்தின் மீதான எதிர்பார்ப்பு, தீண்டாமையின் மீதான கடுங்கோபம், தேர்தல் அரசியலின் மீதான ரௌத்திரம் என நூலின் கவிதைகள் பல்வேறு தளங்களை தொட்டுச் செல்கின்றன

பெரும்பாலும் கவிஞர்களுக்கு கடவுள் மீது நம்பிக்கை குறைவாகவே காணப்படும். ஏனென்றால் அவர்கள் உழைப்பையும் உழைக்கும் மக்களையும் கடவுளாக வணங்குபவர்கள். நிகழ்காலத்தின் மனிதர்களை அவர்கள் நேசிப்பவர்கள். கண்ணுக்குத் தெரியாத கடவுள் மீது காட்டும் கருணையை விட கண்ணெதிரே இருக்கும் மனிதர்கள் மீது காட்டும் பேரன்பே உலகத்தின் சுழற்சியை சமமாக இயக்கவல்லது என்பதை கவிஞர்கள் அவ்வப்போது உணர்த்திக் கொண்டே இருப்பார்கள்.

**கடவுளைக் கண்டதில்லை என்று**
**பொய் சொல்லாதீர்கள் எல்லோரும்**
**கடவுளைப் பாருங்கள்**
**அப்பா அம்மா உருவில்**

என்ற இவரது கவிதையே அதற்கு சிறந்ததொரு காட்சியாக நிலைத்து விடுகிறது.

**தேர்தல் வரட்டும்**
**சேலையும் கொலுசும்**
**அரிசியும் பருப்பும்**
**வீடு தேடி வரும்**
**அதுவரைக்கும்**
**கொஞ்சம்**
**அணைத்தே வை**
**பற்றியெரியும்**
**அடுப்பையும் வயிறையும்**

என்று சமகால அரசியல் மீது இவருக்கு இருக்கும் பெருங்கோபம் நம் எல்லோருக்கும் பற்றிக்கொள்ள வேண்டும் என்ற நெருப்புப் பொறியாக விழுந்திருக்கிறது இந்த நூலில்.

வாக்கு சேகரிப்பதற்காக இலவசங்களை அள்ளி வழங்கி வெற்றி பெற்றவுடன் செலவழித்த அனைத்தையும் மக்களிடமிருந்து சுரண்டும் அரசியல் வாதிகளுக்கும் இலவசங்களைத் தேடி ஓடும் மக்களுக்கும் இந்தக் கவிதை நல்லதொரு சவுக்கடி.

இன்றைய நவீன யுகம் பல்வேறு கருவிகளை மனிதர்களின் உழைப்பிற்காக கண்டுபிடித்து ஒப்படைத்தாலும் அவற்றின் நன்மை தீமைகளையும் மனிதர்கள் ஆராய்ந்து பார்த்தல் மிக அவசியம். ஒவ்வொரு வீடுகளிலும் மனிதர்களின் பொன்னான நேரத்தை திருடிக் கொண்டிருக்கும் தொலைக்காட்சியின் அவஸ்தைகளை அழகாகப் பட்டியலிடுகிறது ஒரு கவிதை. தேவைப்படும் நேரத்தில் கிடைக்காத உணவும் தேவைப்படும் போது கிடைக்காத நேசமும் பயனற்றுப் போகும் என்பதை தொலைக்காட்சித் தொடர்களின் வழியாக ஒவ்வொரு வீடுகளுக்குள்ளும் நடந்துவரும் அவலங்களை இந்த கவிதை தோலுரித்திருக்கிறது.

**அன்னத்திற்கு கல்யாணம்**
**நடக்குமா நடக்காதா**
**அதைப்பற்றிய கவலை**
**அவன் அவளுக்கு**
**உங்களுக்கு என்ன காப்பி**
**வேண்டி கிடக்குது**
**எனக்கல்ல**
**நண்பர் வந்திருக்கிறார்**
**காத்திருந்தோம்**
**எப்போதும் போல்**
**இடைவேளை விளம்பரத்திற்கு**
**நன்றி**
**தொடர் நாடக விளம்பரத்திற்கு**

இரவு நேரங்களில் ஒவ்வொரு வீடுகளிலும் விளம்பர இடை வேளைகளில் தான் நமக்கு உணவு கிடைக்கும் என்பதையும் ஒவ்வொரு தொடர்களும் பெண்களின் மனதிற்குள் மிகப்பெரிய ஆதிக்கத்தை செலுத்தி வருகின்றன என்பதையும் இந்தக் கவிதை எடுத்துக் காட்டுகிறது.

**வயிறு நிறைந்த புறா**
**வந்து போன அடையாளமாக**
**விட்டுச் செல்கிறது இறகை**
**உன்னிடம் தர**
**இறகைத் தவிர**
**ஒன்றுமில்லை**

இந்தக் கவிதையின் ரசனையை எண்ணிப் பார்க்கையில் கவிஞரின் அவதானிக்கும் பண்பும் இயற்கையை ரசிக்கும் பாங்கும் அழகே வெளிப்படுகின்றன. புறாவிற்கு உதவும் மனதிற்கு புறா செலுத்தும் நன்றியாகவும் இதை எடுத்துக் கொள்ளலாம். இறகைத் தவிர பரிசளிப்பதற்கு புறாவிடம் எதுவும் இல்லை என்பதல்ல அந்த இறகினையே அதனுடைய மிகச் சிறந்த பரிசாகவும் எடுத்துக்கொள்ளலாம்.

**ஊதாரியாய்**
**ஊர் சுற்றித்திரிந்த**
**என்னையும்**
**உழைக்க வைத்தது**
**உன் இறப்பு.**
**இருக்கும்போது சொன்னாய்**
**உழைக்கச் சொல்லி.**
**இப்போதுதான் தெரிகிறது**
**எனக்கு சோறு**
**எப்படிப் போட்டாய் என்று**

இந்தக் கவிதையே அப்பாவின் வழி காட்டுதலையும் வாழ்வின் கட்டமைப்பையும் தனது வாரிசுகளுக்காக அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகளையும் நாம் எப்படி புரிந்து கொண்டோம் என்பதையும் படம் பிடிக்கிறது.

கடன் கொடுத்த
கந்து வட்டிக்காரன்
அவனின் தன்மானத்தை
விட்டு கத்துகிறான்
வீதி முழுக்க வேடிக்கை
தன்மானம் ஏலம் போனது
வெளிநாடு போன பையன்
பணம் அனுப்பவில்லை
இரவில் படுத்தவர்
எழவே இல்லை
கந்துவட்டி காசில்
வெளிநாடு போனவன்
இறுதிச்சடங்குக்குக் கூட
வரவே இல்லை
கவரிமான் ஜாதி அவன்

*வட்டியின் கொடுமை வறுமையின் நாவை மேலும் மேலும் நெருப்புக்குள்ளாக்கி பொசுக்கி விடுகிறது என்பதையும் வெளி நாட்டு பயணங்கள் பெற்றோர்களின் இறுதிக் காலத்தை எப்படி எலலாம் தவிக்க விடுகிறது என்பதையும் இந்தக் கவிதை எடுத்துக் கூறுகிறது..*

அவள் கட்டி முடிந்த கூந்தலை
கலைத்துச் சென்றது காற்று.
காற்றுக்கும் நாகரீகத்தின் மீது
மோகமாம்.

*காதல் கவிதையில் தனது அன்பை முழுவதுமாக பரிமாறி இருக்கும் கவிஞருக்கு அவளின் நாகரீகத்தின் மீதும் ஏற்பட்டிருக்கும் மோகத்தை நம்மால் உணர முடிகிறது.*

*பழங்கால சமையல் முறைகளில் உரல் உலக்கை ஆட்டாங்கல் போன்றவை சிறப்பான இடம் பிடித்தன. அன்றைய பெண்களுக்கு சமையல் வேலையில் அதிகம் கை கொடுத்து உதவியவை இவை. மேலும் இவையே உணவின் ருசியையும் அதிகப்படுத்த உதவி செய்தன எனலாம். ஆனால் இன்று பெண்களும் வேலைக்குச் சென்று குடும்பத்தை பொருளாதாரத்தின் வழியாக உயர்த்திப் பிடிக்க வேண்டி ஓடிக் கொண்டிருப்பதால் சமையல் என்பதில் நேரத்தை குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். பாட்டிகள் செய்து கொடுத்த பலகாரங்களும் நிலக்கடலை உருண்டைகளும் எப்படி நமக்கு மனதிற்குள் இன்னும் இனித்துக் கொண்டிருக்கிறதோ அதேபோல இன்றைக்கும் கிடைக்குமா என்ற ஏக்கம் நமக்குள் எதிரொலப்பதை தவிர்க்க முடியாது. அதையே அந்த பொருட்களும் ஏங்கி நிற்பதாக சொல்லும் இந்த கவிதை அஃறிணைகளும் ஆவல் கொள்ளும் என்பதற்கு சாட்சியாகிறது.*

பேரன் பேத்தி எடுத்த எங்களுக்கு
ஆத்தாத்தாக் கிழவி இடித்து தந்த
நிலக்கடலை உருண்டை
மணம் நினைவில் நிற்க
உரலும் உலக்கையும்
ஏங்கி நிற்பதில்
ஆச்சரியம் இல்லை
பல நாள் பழகிய கிளி
பெயர் சொல்லி அழைக்கிறது
அம்மா அப்பா அக்கா
சொல்லிச் சொல்லி அழைக்கிறது.
சின்னப் பையன் திறந்து விட்டான்
பறந்து போன கிளியே
சுதந்திரக் காற்றை சுவாசிக்கிறது
'நன்றி' என்ற சொல்லை
மட்டும் கற்க மறந்தது

*இந்தக் கவிதை கிளிகளுக்காக மட்டுமே எழுதப்பட்டது அல்லவிடுதலையை வேண்டி காத்திருக்கும் ஒவ்வொரு மனிதரும் அதை அடைந்த பின்னர் அதற்கான தியாகத்தை எண்ணிப் பார்க்கிறார்களா என்பதையும் சொல்லிச் செல்கிறததுதானே.*

கண்ணே
உன் விழிகளை
சற்றே இமைத்துக் கொள்

சுட்டெரிக்கும் சூட்டிலிருந்து
சற்றே விலகிக் கொள்கிறேன்

காத்திருந்து காத்திருந்து கோபப்படும் காதலியை காட்சிப்படுத்துகிறாரா அல்லது சொன்னபடி இல்லாது மறந்து போன அல்லது நினைவில் தவறிப் போன அன்பின் கோபத்தை காட்சிப்படுத்துகிறாரா என்பது வாசிக்கும் மனநிலையைப் பொறுத்து ஒவ்வொருவருக்கும் மாறிக் கொண்டிருக்கும் அற்புதமான காதல் கவிதை இது.

ஆணவம் உள்ளவன்
ஆண்டவனை இழக்கிறான்
பொறாமைக்காரன் உறவை இழக்கிறான்
கோவக்காரன் அவனையே இழக்கிறான்
உனக்கு எப்பொழுதெல்லாம்
கோபம் வருகிறதோ
அப்போதெல்லாம் கேள்
புத்தன் ஆகிவிடு.

பேசுவதை விட கவனிப்பதிலும் கேட்பதிலும் அதிக ஆர்வம் கொள்ளுங்கள் என்பதற்காகவே இயற்கை மனிதனுக்கு காதையும் கண்ணையும் இரண்டாகப் படைத்திருக்கிறது என்பார்கள். ஆனால் இந்தியர்களாகிய நாம் பேசுவதிலேயே அதிக கவனத்தைச் செலுத்தி நமது ஆற்றலை இழந்து விடுகிறோம். அதுவே நமக்கான வாய்ப்புகளையும் தொலைத்து விட வழியமைத்து விடுகிறது. நின்று நிதானித்து கேளுங்கள் எல்லோருக்குள்ளும் புத்தன் வாசம் செய்கிறான் என்பது இந்தக் கவிதை நமக்கு கொடுக்கும் அமைதிச் சின்னம்.

வளர்ந்து கொண்டிருப்பது
செடிக்கு மகிழ்ச்சி.
நகர்ந்து கொண்டிருப்பது
நதிக்கு மகிழ்ச்சி
எரிந்து கொண்டிருப்பது
தீபத்திற்கு மகிழ்ச்சி
முயன்று கொண்டிருப்பது
மனிதனுக்கு மகிழ்ச்சி

என்று தான் எழுதிய கவிதையைப் போலவே கவிதையின் ஒவ்வொரு நுட்பத்திலும் முயன்று கற்றுக் கொள்ளும் இந்த கவிஞருக்கு எளிய மொழியும் அதற்குள் புகுத்திக் கொண்டிருக்கும் வலிமையான கருத்துக்களும் நல்லதொரு நடைச் சித்திரத்தை கடைவிரிக்கின்றன.

இலக்கியத்தின் தீரா பசி என்பது மனிதருக்குள் எப்போதும் அன்பையும் கருணையையும் விதைத்துச் செல்வதே. ஒரு நல்ல இலக்கியம் என்பது வாசிப்பவருக்குள் ஏதேனும் ஒரு சிறு தாக்கத்தையாவது ஏற்படுத்தி விட வேண்டும். நூலை வாசிப்பவர்களுக்கு இயற்கையின் மீதான நேசமும் சக மனிதர்களின் மீதான பாசமும் உறவுகளின் மீதான பந்தமும் தொடர்ந்து வருவதற்கு கவிதை வரிகள் வழிகாட்டக் கூடும். ஒவ்வொரு கவிஞனுக்குள்ளும் இந்த பரந்த உலகத்தின் அவலங்களை துரத்தி அடிக்கும் ஏதேனும் ஒரு கனவு இருந்து கொண்டே இருக்கும். அத்தகைய கனவுகளை எழுத்தாக எழுதி வைப்பவர்களும் உண்டு. செயல்பாடுகளுக்குள் சிறந்து விளங்குபவர்களும் உண்டு.

'நீண்ட நாட்களாக நான் மனிதனைத் தேடுகிறேன் மனிதத்தைத் தேடுகிறேன் மனிதருள் மனிதம் இல்லை எல்லோரும் மனிதனைப் போல் இருப்பதால் இன்னும் தேடுதல் நிறைவடையவில்லை"

என்ற இவரது கவிதையைப் போலவே இலக்கியத்தடத்தில் இவரது தேடல்கள் தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருக்கட்டும். அதுவே அவருக்கான வார்த்தைகளையும் எடுத்துக் கொடுத்து நல்ல நல்ல தொகுப்புகளுக்கு களம் அமைக்கும்.

**இளையவன் சிவா**

# அவளும் நானும்



'இன்னொரு ஜென்மங்கள் இருக்கும் எனில் நான் நட்போடு வலம் வர பள்ளி காலத்தையே பெற்று வர வேண்டும் ..'

பள்ளிக்காலமும் பாலிய சிநேகமும் என்றும் மறந்து போகாததும். யாருமே மறந்திடவும் நினைக் காததும். மீண்டும் கிடைக்காதா என்று ஏங்கக் கூடிய காலமது தான்.

மீண்டும் பள்ளிக்கு போகலாம் அங்கை நம்மை நாம் தேடலாம் எங்கோ கேட்கும் பாடல் எம்மையே தொலைந்திட செய்திடுமல்லவா ...

**'வரம் தரப்படும் என அறிந்தால்**

**திடமாய் கேட்பேன்**
**மீண்டும் ஒரு பள்ளிக்காலம்...'**

பள்ளிக்காலத்தில் பல நற்புகளின் வாசனை நேசத்தில் விழுவதும் அதில் என்னவோ பெண்களின் நட்புகள் எல்லாமே கடைசிவரை தொடர்வது என்பது அபுர்வம் தான்

ஆண்களின் நட்பினை காணும் போதெல்லாம் பார்க்கவே அத்தனை பிடித்தம் .எனக்கும் அதே போல நட்பு கிடைக்காதது கவலையும் அதே சமயம் பொறாமையாகவும் இருக்கும்.

ஆம் என் வாழ்விலும் என்னை அலங்கரித்த நேசங்கள் ஏறாளம். அத்தனையும் கனியாகாமலே கருகி போன மொட்டு போல இன்று காணாது போய் விட்டது.ஆனால் நினைவினை விட்டு நீங்கிடாமல் என்றும் என்னோடு தான் பயணமாகப்போகிறது.

*இப்போதைய நட்புகள் யாவுமே இணையத்தால் வந்தது தான் ஆனால் கண்களால் பார்த்து தோள் உரசி சண்டை இட்ட மறு நொடிய ஏதுமே ஆகாதது போல கதையாடியது பள்ளிக்கால நட்பு தானல்லவா!*

*இணையத்தில் உதித்தவைகளுக்கு பேசாதிருக்க சண்டை என்ற ஒன்றே தேவையில்லை .சில நாட்களுக்கு மௌன வாசம் தான். இருள் தேசம் தான் ..*

*ஏனென்றால் கண்களுக்கெற்றாததால் தான் அவ்வாறு ஆகிடுவதே.ஒரே இடத்தில் இருந்தால் பல கதைகளையெல்லாம் பேசிக்கொண்டே வேலைகளையும் கடத்தலாம் இணையத்தில் ஏதொரு தேவையை முடிக்கும் போதே ஏதோ சொல்லத்தெரியா சிணுக்கத்தை இணைய வடிவம் எம் உடலுக்கு மாற்றம் தந்து விடுகிறது. ஏதொரு கடுகடுப்பை இலவச இயல்பாக எம்முள் வைத்துக்கொண்டே சுற்றுகிறோம்.*

**இணையத்தில் வந்துதித்தவைகளையெல்லாம்**
**காணவேண்டும் என்றே**
**தினமும் பிரார்த்தனை செய்கிறேன் ...**

*என் சிறுவயதில் பள்ளிகாலத்தை அலங்கரித்த நட்புகளில் இருந்து ஒரு நட்பைத் தேர்ந்தெடுத்து என் மனக்குமறலை நெஞ்சாத்தி இதழில் பதிவிட்டு உலகெங்கும் உலா வரட்டுமென பாரம் இறக்க போகிறேன்.படித்து விட்டு பிரார்த்தனை செய்திட மறவாதீர்கள் ..*

**நெஞ்சத்தில் நேசமாய் வீழ்ந்த**
**நெஞ்சாத்தியே !**
**நீயும் நட்பாகி போனாய்**
**உன்னையே சுற்றி சுற்றி**
**என் நேரமும் ஆகியதால்**
**என்னையறியாமலே**
**உன்னில் கைதியாக்கி விட்டாய் ..**

*அவள் வீட்டுக்கு ஒரே பெண் சகோதரர்களுக்கும் தாய் தந்தையருக்கும் இளவரசி கருப்பானவள் தான் ஆனால் கண்களால் கவர்ந்து நெஞ்சில் குடிக்கொள்ளும் பேரழகி ..*

**கருமை சற்றென்று கண்களை கவர்கிறது**
**ஏனோ தெரியலையே!**
**நானும் தேடி தோற்கிறேனே...**

*அவளும் நானும் ஒரே வகுப்பு என்றாலும் பேசிக்கொள்வதோ ஒன்றாக எதற்குகேனும் செல்வதென்பதோ மிக அரிதாகவே இருக்கும். அவ்வாறிருந்தும் எவ்வாறு தான் எமக்குள் நெருக்கம் தொற்றிக்கொண்டு இடைவெளியை தகர்த்தியதோ தெரியவில்லை.*

*வகுப்பினில் பலர் இருந்தாலும் ஏதோ ஒருவரோடு தானே மிக நெருக்கத்தை மனதும் தந்து தொடர வைக்கும். அவ்வாறு தான் என்னோடான நட்புகள் யாவரும் வகுப்பேற ஏற எங்கோ கணாமல் போய் விடுவது வழக்கமாகியது. இது இறைவனது கோபமோ இல்லை பரிசோதனை தானோ தெரியவில்லை.*

**ஒவ்வொரு தரமும்**
**செத்து பிழைப்பேன் ..**

முத்தாய் நான் நினைத்ததுகள்
வெற்று சிப்பியாய் தோன்றும்..
வலியை அகற்றிடவே
தெரியாமலே ..
எத்தனையோ முறையோ
ஏமாந்து போனாலும்
ஏனோ உண்மை நேசமென்றுதான்
பாசமும் வைக்கிறேன்
ஏனோ தவறிப்போகிறது
தெரிய வில்லை..

*அவ்வாறு என் நெருங்கிய தோழி தரம் எட்டுக்கு உயர்வாகிய போது அரபுக்கல்லூரியை நோக்கி சென்று விட்டாள். எனக்கு தான் அவளது பிரிவை அவ்வளவு எளிதினில் ஏற்க முடியவில்லை.*

*புதிய வகுப்பு ஏதோ அந்நியமாகவே தெரிந்தது. பாடசாலை செல்லவே பிடித்தமே இருக்க வில்லை. உம்மாவின் கட்டுபாட்டிலும் கன்டிப்பிலும் செல்வதுண்டு. அவ்வாறு நாட்களும் நகர்ந்தது.வகுப்பில் எனதருகில் நாளும் யாரேனும் இருப்பதுண்டு. நாள் செல்ல செல்ல தொடராக எனதருகிலே அவள் இருக்க ஆரம்பிக்க பேச்சுகளும் சிரிப்பும் பொதுவென ஆரம்பித்த பழக்கத்தில் இடையில் தடையென வந்தது. ஊரெல்லாம் அம்மை நோயின் தாக்கம் பரவலாகிட அதன் பிடிக்குள் நானும் விழ நேர்ந்தது.*

*ஆரம்பத்தில் சிறு பருக்களாக தான் இருந்தது குமிழிகளைப்போல அது அழகாக தென்பட்டது.முதல் நாள் கையில் தென்பட்ட அச்சிறு பருக்களை வகுப்பறையில் பாடவேளையில் பென்சில் கூரால் குத்தியது நினைவிலிருக்கிறது.*

*அப்போது அக்கீ பரவிக்கொண்டிருக்கிறது நீ விளையாட்டுக்கு செய்யாதே குத்தத்தில் விழ நேர்ந்து பெரியம்மை போட போகிறது என்று அவள் சொன்னதற்கு நான் அவளது செல்ல கோபத்தை இரசித்த படி விளையாட்டை தொடர்ந்தது நினைவில் இன்றும் .(இதை எழுதும் போதே கண்ணீர் துளியாய் வருகிறாள் அவள் .)மறுநாள் எழுந்திருக்கவே முடியாதளவில் தேகமுழுதும் பனித்துளிகளால் நிறைந்து பெறும் கொப்புளங்கள் போல மாறி வலிகள் சூடி விட்டது. விழிகள் மட்டும் திறந்திருந்ததும். தாயவள் ஏதேதோ சேவையால் நீராடியதும் வேப்பிலை அரைத்து சாறு பருக்கியதும் மேனிக்கு தேய்த்ததும், மஞ்சள் நீரால் கழுவியதும் பன்னீரால் குளிப்பாட்டியதும் காட்சி கண்களுக்குள் தெரிகிறது .வேப்பிலை பருக்களை துளைத்து பெரும் புண்ணாக்கி பார்க்கவே உடல் சிலிர்க்க செய்ததும் நினைவில் உண்டு.தெரிந்த பாட்டியொன்று வேப்பிலையை பூசாதே என உம்மாவிடம் சொன்னதும் அதோடு விட்டதும் நினைவிலாடுகிறது. குணமாக மாதமாகியது. அம்மை வலி என்னை பாடாய் படுத்தியது. பெறும் வடுக்கள் அங்காங்கே தென்பட்டும் முகத்தில் மட்டும் சிறு மச்சம் போல குவிந்தும் கிடந்தது.*

அம்மை விட்டு சென்ற மிச்சமென
மச்சம் போல வடுக்கள்
காணவே சகிக்கவே முடியாதிருக்க
என்ன செய்வேன் ..

**மனிதகேலிக்குள்**
**அகன்று விட**
**தேடித்தொலைந்தன் மருந்தொன்றை …**

*மாதம் ஒன்று கடந்து பள்ளி சென்ற போது ஏனோ எனக்கு அந்நியத்தோடு தயக்கமும் நிறைந்திருந்தது. அப்போது அவள் தான் உரிமையோடு பேசி சிரிக்க வைத்து செல்ல சண்டையும் பிடித்தாள்..*

**இழிவாக காணும் …**
**மனிதத்திற்கு புரிவதில்லை**
**இறைவன் நினைத்தால் எதனையும் செய்திடுவான் என்று..**

*முகத்தினிலும் தளும்புகள் நிறைந்து அடையாளப்படுத்திருந்தது. நான் உன்னை தொட்டு சென்றேன் என அம்மை சொல்வது போலவே இருந்தது.*

*காணும் யாவருக்குமே கேள்வியாய் அதுவே தொடர அவள் தான் திமிராய் பதிலுரைத்து சந்தர்ப்பத்தை மாற்றி வைப்பாள் ..*

*தமிழ் பாட ஆசிரியை ஏன் உம்மா உங்க முகத்தில் குடிக்கொண்டார் என கேலி செய்ததும். பிடிக்காத ஆங்கில பாட ஆசிரியர் அன்பொழுக குணத்தை விசாரித்து மதிப்பில் சேர்ந்ததும்*

*சித்திர பாட ஆசிரியர் மருந்தாய் தேங்காய் தண்ணீரில் முகம் கழுவினால் அம்மை தளும்பு காணாது போகும் என்றதும் (அது உண்மை தான்) அழகிய வடிவமாய் என்னுள்.*

*எப்படியோ எம் அடாவடி கலாட்டா என எமக்குள் நாள் அலங்கரித்திட எமக்குள் பெரிய இடைவெளி குறைந்து நெருங்கம் கூடியது.*

*எம் நாட்களில் கேலி, கிண்டல் எனவும் தொடர எனது பேச்சு அவளோடு மட்டும் தான் என நீள நட்பும் வளர்ந்தாலும் .*

*அவளுக்கு பலர் உறவு எனக்கோ அவள் தான் உறவென தொடர்ந்தது.எத்தனை பேர்களிலும் ஒருவரை தான் மிக பொருத்தமானதாக்கி பார்த்திடும் மனம். அவளை தாண்டி வேறாருடனும் நெருங்கி விட மனமும் இடமளிக்காதது என் குற்றமோ ..?*

*பாடசாலையில் கண்காட்சி ஏற்பாடு நடக்க ஆயத்தம் நடந்ததில் விரும்பிய யாவரையும் ஏதேனும் எடுத்து வர சொல்லப்பட்டிருந்தமையால் தொடராய் மூன்றுநாளென்னவோ நடந்தது அதில் அவளும் டவர் (என்று தான் நினைவில்)செய்து கொண்டு வந்திருந்ததால் வரும் பார்வையாளர்களுக்கு அவளும் தகவல்களை சொல்லவென்று நின்று கொள்வாள் .அவ்வப்போது நானும் சேர்ந்து நின்று கொண்டதுமுண்டு ஆனால் வருபவர்களில் யாரேனையும் அவளுக்கு சோடி கட்டி கேலி செய்வதும் அவள் முறைத்து கொண்டு நிற்பதும். சிரிப்பில் அவளை கோவம் களைய வைப்பதும் உண்டு .வரும் நபர்களின் பார்வையால் தேர்வுகள் செய்த பொருள் பட்டியலில் அவள் பொருளும் சேர்ந்தது மகிழ்வெனக்கும்..*

*நானும் அவளும் அதிகமாக கூடும் இடங்களில் பாடசாலை ஆய்வு கூடத்திற்கு பின் பக்கம் எமக்கு பிடித்தம் எமது உணவு வேளை அங்கு தொடரும் வேப்பமரத்து நிழலும் புங்கை மரநிழலும் கிளுசிரிடியா மரநிழலும் அங்கு ஒன்றாய் சேர்ந்தே விழும்.குளிர்ச்சியாய் உணரத்தோன்றும்.*

காற்றிற்கு இசையும் மரக்கிளையே
நான் அசைவேன்
இவள் பேச்சுக்கே ..
பாடநேரத்தை அவ்விடத்தில் சென்று படிப்பதும் பிடித்தம்
அவளும் நானும் இணைந்தே செல்வோம் அரட்டையோடு சேர்ந்து.

மைதானத்தில் எல்லைகளை நான்கு புங்கை மரம் இடம் பிடித்திருக்கும். மழைக் காலத்தில் அடர்த்தியோடு செழித்திருக்கும். எங்களுக்கு தனிப்பிரியமான இடமென ஆகிவிடும்.மைதானத்திற்கு அடுத்ததாக பழைய கட்டிடங்கள் சிதைந்திருக்கும். அங்கு யாரையும் செல்லவிடாத படி பயமுறுத்தி வைக்கும் அதிபரின் பேச்சுகளை கடந்து அவளும் நானும் சென்றதும். ஏதோ ஊந்துதலில் உடல் சிலிர்த்து வெளியேறிய நாட்களும் அதனை நினைத்து வீழ்ந்து வீழ்ந்து வயிறு குழுங்க கண்ணீர் வெளியாகும் வரை சிரித்ததும் வகுப்பு சக தோழிகள் கேட்டதற்கு நடந்ததை மென்றுமெறுகூட்டி சொன்னதும் உண்டு ..நினைவை தட்டி எழுதும் போது நான் அக்காலத்திற்குள் பிரவேசித்து வருகிறேன்.

ஆசையாக இருக்கிறது மீண்டும் அந்த பனைமரத்தடியில் நொண்டிக்கோடு ,கிளிதட்டு விளையாடிடவும். எல்லாமே மறந்து இன்பமாய் சிரிப்பதற்கும்.

பாடவேளைக்கு பொருத்தமான ஆசான் வராத போதெல்லாம் கொப்பியில் நடுத்தாள் கிழித்தெடுத்து கிளி புறா மைனா என வெட்டி எடுத்து விளையாடியதும் திருடன் போலீஸ் விளையாடியதும் அதொரு அழகிய பொற்காலமே .

திங்கட்கிழமையும் வெள்ளிக்கிழமையும் காலைக்கூட்டமும் மீதி நாட்கள் உடற்பயிற்சியும் நிகழும். உடற்பயிற்சி எல்லோருமே செய்யதாக வேண்டும். மிவ்ஸிக் போடப்படும் அதற்கு இசைந்தே நாமும் அசைந்திட வேண்டும் .இன்றும் அதே ஒலியை கேட்கிறே போதெல்லாம் நான் தொலைந்து காற்றில் கரைந்து உணர்வில் செல்கிறேன் பாடசாலை மைதானத்திற்கு என்ன அங்கு அவளும் நானும் உடற்பயிற்சி செய்யாமல் காரணம் கூறி நிற்பதும் சேற்றையாடியதும் என்னுள் ..

எங்கே இருப்பாள் இப்போது எவ்வாறு பேசிட வேண்டும் தெரியவில்லை ..

‘அன்பின் தோழியே
நீ எங்கே
இருப்பாயோ தெரியலையே!
காண வேண்டுமே!
ஒரு தரமேனும்
கானல்நீர் போல
நினைப்போடு
ஆசைகள் தோற்று
நிற்கிறதடி தோழியே!‘

பாடசாலையில் இல்ல விளையாட்டு போட்டி காலம் மூன்று இல்லமென அறபா, மறுவா, சபா எனவும் நீலம், சிவப்பு, பச்சை என நிறங்களுள் இல்லத்தின் பெயருக்கு வருடமொன்றும் நிறங்கள் மாறும்.இல்லத்தின் பெயரிற்கு இம்மூன்று நிறத்தை மாற்றி கொடுக்கப்படும். எனக்கு தெரிந்து சபா இல்லமும் சிவப்பு நிறமும் வரும்போதெல்லாம் அந்த இல்லமே முதல் இடத்தை பெறுவதே வழமை எவ்வாறு இவ்வாறு என யோசிக்கவெல்லாம்

நேரமில்லை எம் அட்டகாசத்திற்கே நேரம் போதுவதில்லை ..

அவளும் நானும் ஒரே இல்லமெனவும் இருவரும் இல்ல பொறுப்பாளர்கள் சொல்லும் இடத்திற்கு செல்லாமலே அவள் சொல்லுமிடத்திற்கு செல்வோம்

நேரத்தை நமக்கானதாக மாற்றிக்கொள்வோம். இல்ல விளையாட்டு முழு நிகழ்வும் முடியும் வரை .எமக்கு கொண்டாட்டம் தான். ஆனாலும் தட்டு எறிவது குண்டு எறிவது ஈட்டி எறிவது அவளுக்கு இலகாகி போனதால் சேர்ந்து கொள்வாள் ..

எனது ஊரை அலங்கரிக்க அழகாய் இயற்கையாய் மண்திடல் உண்டு அதன் மேலும் விவசாயங்களாலும், பெருங்கடலும், ஓடை மற்றும் நாவல் பழ மரக்காடும் உண்டு நாவல் காட்டில் இராணுவ பயிற்சிகள் நிகழ்வதால் பலகாடுகள் அழிந்தே போய் விட்டது நினைக்கையில் மனக்குமறல். பாடசாலைக்கு பின்னாலும் கொஞ்ச தூரத்தில் திடல் பகுதி இருக்கிறது அதில் ஏறுவது கடினமாகவும் விளையாட்டாகவும் இருக்கும். அந்த இடத்தை ஒட்டி இல்ல அழைப்பு வந்தால் மட்டுமே செல்வோம். மணலில் ஏறி விளையாட மட்டுமே செல்வோம் .

அப்பக்கம் தான் அவளது வீடும் இருப்பதால் இல்ல குழுவிடத்திற்கு செல்லாது அவளது வீட்டுக்கு சென்று விடுவதும். எனது வீட்டு பக்கமும் பாடசாலையிற்குரிய பெரிய மைதானம் உண்டு குறிப்பிட்ட விளையாட்டுகளுக்காக இங்கு வருவதும் கடைசி நாள் பைனல் விளையாட்டில் மூன்று இல்லமும் தனக்கு பொருத்தமான ஏதொரு வடிவமைப்பில் இல்லம் அமைக்கும் அதில் அவளது சகோதரர்களால் அழகாய் குடியேறும் புதுவிதத்தில் ஓர் இல்லம் புள்ளி வழங்களில் இல்ல அமைப்பிற்கு எம் இல்லத்திற்கு முழு புள்ளியும் விழுவது சாத்தியமாகிடும். குறிப்பிட்ட விளையாட்டுகாக மைதானத்திற்கு வர நேர்கிற போது எனது வீட்டில் குடிக்கொள்வோம்.

**‘திடல் மணல் சரிய சரிய**
**குடல் குழுங்க சிரித்தமோ**
**மடல் மறந்தது போல இன்றாகிட**
**திறளாய் தொடருதே**
**நினைவுகள்‘**

நாட்களின் நகர்வில் வகுப்பேற்ற பரீட்சையும் வந்தது தேர்வுகளும் நிறைவேற வகுப்பேற்றமும் நிகழ்ந்ததோடு அவளும் அதிர்வைத் தந்தாள்.பாசத்திற்கு இருப்பிடம் பொருத்தமாக இல்லையோ என்னவோ அவளும் கதறளடிக்க காற்றாய் பறந்து விட தூசிப்போல எனை மாற்றி சென்று விட்டாள்.

என்னை மீண்டும் கலங்கடிப்பதற்காகவே இவ்வாறோ என நினைக்குமளவில் தான் அவளும் குர்ஆன் மதுரஸா அரபுக்கல்லூரியை நோக்கி பயணப்படுவதாக என்னிடம் சொல்லாமலே சென்றிருந்தாள்.

வருந்துவேன் என்று நினைத்தாளோ இல்லை பிரியவே முடியாது அழுவோம் என்று நினைத்தாளோ தெரியவில்லை

**‘பெண்ணே ஏனடி சொல்லாது சென்றாய்**
**அள்ளிக்கொள்ளவே முடியவில்லை**

**வருத்தங்களை**
**நிறுத்திக்கொள்ளவும்**
**முடியவில்லை**
**சொல்லிக் கொள்ளவும்**
**நீ இல்லை**
**கேட்காது ஏனடி சென்றாய்‘**

*வருத்தம் தான் என்றாலும் இனி யாருக்கும் நட்பிடம் முழு இடம் தரப்போவதில்லையென உறுதியும் கொண்டேன். ஆனால் அந்த உறுதியை நிலைநிறுத்திட தான் இயலவில்லை. வகுப்பேற்றம் தோழிகள் என கடந்தது தான்.*

**அவளை மட்டும் நான் காணவே நேரவில்லை ஒரே ஊரென்றாலும்**
**தூரமென்றதில் வேறு வேறான இடத்தில் தான் நாமாகிருந்தோம்.**

*நினைவிருக்கிறது நானும் தங்கையும் தந்தையோடு கந்திரிச்சோறு எடுக்க சென்றது .ம் அது கடற்தொழிலாளர்கள் சேர்ந்து எதற்காகவோ செய்தது ஏன் செய்தது என்று நினைவில் நிற்க வில்லை என்பதற்கு அன்றைய நிகழ்வு எதற்கென்று எனக்கு தெரிய வில்லை என்பது தான் உண்மை.*

*வாப்பாவோடு நடை பயணம் என்பது எனக்கு மிகப்பிரியம் என்ன கேட்டாலும் பொறுமையோடு கதை சொல்வார் அது எனக்கு பிடித்தம்.*

*அத்தோடு வாப்பாவின் நடைக்கு ஈடு கொடுத்து நடந்திட முடியாது. ஓடோடி செல்ல வேண்டும்.*

*விளையாட்டாய் தண்ணீர் தேங்கிய இடங்களை பார்வை இட்டு நின்று விட்ட போது வாப்பா தூரமாக சென்று அழைப்பதும் நாம் ஓடி செல்வதும் அதில் கருங்களில் இடரி வீழ்ந்து முலங்காலை தேய்த்து அழுவதுமே நடப்பதும் இரவில் தூக்கத்தில் புறளும் போது கால் அசைக்கா வலி தரும் போது சிணுங்கி விடுகையில் தாயவள் தந்தையை‘ பார்த்து பக்குவமா கூட்டி போய் வரமுடியாதா‘ என ஏசுவதும் தந்தையார் காலுக்கு மருந்து பூச ஏதேனும் வாங்கி வர அவரது நண்பரின் மனைவியிடம்(தாதி பெண்) சென்று வாங்கி வருவதும் உம்மா பூசி விடுவதும் வழமையாகும் .*

*அன்று செல்லும் போது அவளும் வந்தாள் நான் அவளைக்கண்டேன். அவள் என்னை பார்க்கவே இல்லை பேச ஆசையாக இருந்தது பார்ப்பாளென அவளையே பார்த்திருந்தேன்.இப்போது பார்க்கமாட்டாளா என பல முறை அவளை பார்த்து நின்றேன். பார்க்கவே இல்லை ஏமாற்றமாக இருந்தது மனதுக்குள் பெறும் வலியை தந்து விட்டாள் .அவளை அதன் பிறகு காணவே நேரவில்லை .*

‘தோழியே ..
ஒரு முறையேனும்
என்னை திரும்பி பாரேனடி
மொத்த உயிரோட்டமும்
உன் பார்வையில்
புத்துணர்ச்சி பெற்று விடட்டும்

**தோற்றதடி என் எதிர்ப்பார்ப்பு**
**மறுத்தது ஏனடி தோழியே**
**காலம் கடந்து கண்டதால் உருவம் சிதைந்து போனதோ**
**மறந்து போனாயோ**
**கண்டுக்கொள்ளாத தளவில் நான் மாறி விட்டனோ**
**வருத்தத்தை பரிசாக்கினாய் ஏனோ ..'**

*உயர்தரம் கற்று வர சிறு தூர பஸ் பயணம் அதில் எப்போதும் வரும் பஸ்ஸில் பாடல்களும் புத்துணர்ச்சி தரும் அப்போது என்னை கவரவென சில பாடல்கள் உண்டு படிக்கும் காலத்தில் கவிதையை நேசிப்பவளாக மட்டுமே இருந்தேன்.*

*ஆனாலும் வரிகளுக்குள் வரிகளின் அர்த்தம் தேடியே நான் லயிப்பேன் அப்போதெல்லாம் சிலர் பாடலை அர்த்தம் அறியாமலே முனங்குவதுண்டு.அப்போது எனக்குள் எழும் கோவத்திற்று ஈடொன்றுமாகாது. வரிகள் பிடித்தாலும் அவளோடு நான்( என் ஊர் பாடசாலையில் பதின்னொன்று வரை தான் இருந்தது) அவளோடு படிக்கும் போது அவள் பாடலை முனுமுனுப்பாள். ஆனால் எந்த காலத்திலும் பாடலை நான் முனுமுனுக்க முழுதாய் மெனக்கெட்டு பாடம் செய்தது கிடையாது.*

*அது ஏனோ எனக்கு பிடிக்க வில்லை ஆனால் நான் சென்று வரும்போது பஸ்ஸில் பாடல் வரிசையில்*

*வெண்மேகம் பெண்ணாக உருவானதோ பாடலை கேட்க நேரும்போதெல்லாம் அவளது நியாபாகம் தீண்டும்.அவளுக்கு பிடித்தம் என்று அடிக்கடி முனுமுனுப்பாள் அப்போதெல்லாம் நான் சிடுசிடுப்பேன்.இப்போதெல்லாம் அமைதியாகி போகிறேன்.*

**'வெண்மேகத்தோடு..**
**கலந்தவள் அவளோ ..?**
**என் நேரம் அவளின் நினைவை**
**மீட்டுது ஏனோ..?**
**சற்றென தேடியும் பொற்றென வீழ்கிறேன் நானே...!**
**முகிலினமே!**
**முகவரி தொலைத்தது நானே..**
**தேடிகொண்டு வாராயோ**
**என்னிடமே..'**

*எனதறையில் ஜன்னலை எனக்கு பிடித்தம். ஜன்னலை தாண்டி தெரியும் அந்த வானத்தை பார்வை இடும் போதும் சரி ஜன்னலை கடந்து தெரியும் மரங்களுக்கும் மட்டுமே எனது வலிகளை கொட்டிடுவதும் யாருமே தெரியா வண்ணமே நினைவோடு பேசிடுவதும் பழகி போய் விட்டது ..மழைக்காலமெல்லாம் சில்மிசம் என்னுள் புத்துணர்ச்சி பெற ஜன்னலை திறந்து வைத்துக்கொண்டு கூரையிலிருந்து வடியும் நீரை கையிலேந்தி ஏதேனும் முனுமுனுப்பதோடு அவளையும் நினைவில் அள்ளிக்கொள்வேன்..*

*பாடசாலையில் மழையென்றால் நாமிருவருவம் வாசலில் வந்து நின்று கொண்டு கூரை நீரை பிடித்து மாறி மாறி தெளிப்பதும். விழும் நீர் துளிகளை எண்ணி தோற்று சிரிப்பதும் நிழலாடும் ..*

தூறல் நீரே..
மண்ணில் வந்தே தேனோ
நினைவை மீட்டுகிறாய்
கானல் போக்கிட
நீ யேனும்
உதவிடுவாயோ ...

*காலம் கடந்தது யாருக்காகவும் காலம் காத்திருக்குமா அதே இடத்தில் காலமும் விரைய நேரமும் நகர்ந்தது. நான் உயர்தரம் படித்துக்கொண்டிருந்தேன் .அன்று வீட்டில் நானும் இளைய சகோதரியும் இருந்தோம் மற்றவர்கள் பயணம் சென்றிருந்தனர்.*

*அந்நாள் மாலைநேரம் வீட்டு முற்றத்தை பூச்செடிகளால் அலங்கரித்துக்கொண்டிருந்தேன் ஊர் மர்க்கஸ் பள்ளியில் ஜனாஸா அறிவித்தல் சொல்ல சப்தம் தூரமாக கேட்கும் என்பதால் செவியை கூர்த்தீட்டிக் கொண்டு கேட்டேன். செவியில் வீழ்ந்ததை கிரகிக்கவே முடியாளவில் இடியென நெஞ்சத்தில் வலி. தரையோடு மடிந்தது கால்கள், கண்களில் வெள்ளப்பெருக்கு இடைவிடாத படி. உடலிலே உணர்வற்று ஜடமாகி போனேன்.பூமி பிளந்து நானும் மறைந்தாள் நன்றென நினைத்தேன் .*

பூமியே தாயே..!
பிளந்து விடு..
நானும் உன்னோடு ..
வந்து மண்ணோடு ...
மண்ணாகி விடுகிறேன் ..
புண்ணாகி போகும்
தடங்களை மணதிலிருந்து
நீக்க தெரியலையே ..

*என்னால் எதனையுமே கிரகிக்க முடியவில்லை. இது கனவாகாதா எனும் போராட்டத்திற்குள் சகோதரியின் உழுக்களில் அசைந்ததும் ஓவென வாய்ப்பொத்தி அழுததும் நினைவில் இன்றும்.*

நான் கதறும் சத்தம்
உன்னை சேராதடி தோழியே!
நீ கொடுத்த தோள்
சுகந்தம் நெஞ்சில் தடமேறி
என்னில் நடமாடுதடி ..

*ஆம் சில நாள் முன் தான் தகவல் பரவிருந்தது ஊருக்குள் அவளுக்கு திருமண ஏற்பாடும் அவள் சகோதரனது வீட்டுக்கு தாயோடு சென்றபோது வீதியிலே மயங்கியதாகவும். வைத்திய சாலையில் அனுமதித்த போது அவள் அடிக்கடி தலைவலி என்பதும் பனடோலுடன் கடப்பதும். கிறுமி மூளையை சுற்றி விட்டதென்றும் அவள் கோமாக்கு சென்று விட்டதாகவும்.*

*கேள்வி பட்ட நாள் முதலாய் பிரார்த்தனை செய்தேன் குணமாகி வரவேண்டுமென்று. மரணசேதியாய் வந்ததேனோ தெரியவில்லை அழுகை நின்று விடவில்லை இன்றும். அவளது தாயும் தந்தையுமே துடித்து போயிருக்க கூடும் அவளை ஒற்றை பெண் என்று தாங்கினார்களே எப்படி தான் தாங்கினார்களோ தெரியவில்லை.அல்லாஹ் போதுமானவனே*

*பொறுமையை நிறைக்க வேண்டுமே..*

**நீ இல்லை என்பதை**
**ஜீரணிக்க முடியலையே**
**விதி விளைப்பை**
**யாரால் மாற்றிட முடியுமோ..**

*மரணம் என்பது யாவருக்கும் நிச்சயிக்கப்பட்டது தான் ஆனால் சட்டென்று மனதால் ஏற்கவே முடிவதில்லை. அவர்கள் இனி வரப்போவதே இல்லை இனி எம்மால் பார்க்கவே முடியாது, நாம் பேசுவதை கேட்கமாட்டார்கள், பதில் தரமாட்டார்கள் என்பதை ஏனோ ஊகிக்கும் போதே மனம் ரணவேதனையில் மூழ்கி தவிக்கும்.அதுப்போல தான் அவளது மரணத்தை ஜீரணிக்க முடியாது தவித்தேன்.*

*அவள் இல்லை ஆனால் நினைவில் வளமாகிறாள்.*

*நினைவை தாண்டியும் அவள் என் இரவில் மூடிய இமை தாண்டி உள்வருகிறாள் கனவில் ஏதேதோ பேசுகிறாள் ஆனால் நான் கண் திறக்கையில் மறைந்து விடுவாள். கனாவென்றது அறிதாலும் அந்த விம்பம் கனவாக உணர்த்தியதில்லை.*

*மரணித்தவர்கள் கனவில் வருவதற்கு காரணமென்னவோ தெரியவில்லை. இரவும் வரும் கனவும் வரும். அவளும் வருவாள் விடியலில் மறைவாள். வீட்டில் சொன்னபோது ஆகாது கூடாதென தண்ணீர் ஓதி எடுத்து தெளித்தனர். தூங்கும் முன் கழுவ சொன்னார்கள்.*

*அதன் பின் அவள் கனவில் வருவதில்லை. ஏனோ எனக்கே கடினமானதாகி போனது.*

*ஆனால் கனா வரும் போதெல்லாம் யாஸீன் சூறாவை ஓதி பிரார்த்தனை செய்வேன். அவளுக்கும் எனக்கும் நட்பை தாண்டி உறவென்றே ஏதுமில்லாமல் எவ்வாறு என் கனவில் வரவேண்டும் என கேள்விகள் உதித்தாலும் விடை தெரியவில்லை*

*இப்போதும் அவ்வப்போது கனவில் வருவாள் ஏதேதோ கேட்பள் சண்டைபோடுவாள் மாயமாகுவாள் தான்.*

*இப்போதெல்லாம் யாரிடமும் சொல்வதில்லை. அப்படி பார்ப்பேதனும் மகிழ்ச்சி தான். அவளுக்காக பிரார்த்தனை நீளும்.*

*அவளும் நானும் வாழ்கிறோம் நினைவின் வழியிலே என்றுமே யாருமே யாருடைய கனவை திருட முடியாது . கனாக்களுக்கான அர்த்தங்கள் என்ன ஏதென்று அறிவது எப்படி யூசுப் நபி போல இங்கு யார் இருப்பதென்றலாம் இந்த கனவொன்றுக்காக யாருமே தேடப்போவதில்லை தானே.*

*ம் கனவின் வழிக்கூட இறைவன் ஏதொன்றை உணர்த்துவதுமுண்டு தான் ஆனால் தெரியவில்லை ஏன் எதற்கென்று கடக்கிறேன் இறைவனிடமே ஒப்படைத்து ..*

**கனவே கலையாதே**
**காலம் கடந்தாலும்**
**நினைவுகள் ஒன்றும்**
**ஒழியாதே ..**

**சஹ்னாஸ் பேகம்**
**முதலைப்பாளி, புத்தளம்**

# எப்பத்தா வருவீக...!

## (கிராமியக்கவிதை)

எப்பொழுதும் உனது நினைவுகள் வாட்டுதே
இராப்பகலாய் தூக்கமின்றித் தவிக்கிறேனே
நீங்களும் எப்பத்தான் வருவீகதெரியலையே
தார்ரோட்டில் நின்னு எதிர்பார்த்திருக்கின்றேன்

அத்தைமகள் என்னைப் பாத்திட வருவீகளா
அயிரைமீனு ஆக்கி வச்சிருக்கேன் வந்திடுவியா
வயிறாற சாப்பிட்டு என்தோளில்  சாய்திடையா
களைப்பும் தீருமே காதலில் திளைத்திடுவோமே

கழுத்தில் மூன்று முடிச்சுபோட்டாலேப் போதுமே
நானும் காலமெல்லாம்  பொண்டாட்டி ஆயிடுவேனே
ஆவணியும் பொறந்தாச்சு முகூர்த்தநாள் வந்தாச்சு
கண்ணாலம் செஞ்சிக்கலாம்இல்லறம் பாத்திடலாம்

சீர்வரிசையும்  நிறையவே பெத்தவங்களும் தந்திடுவாங்க
முறைமாமனுக்கு பவுனும் ரொக்கமும் நிச்சயமுண்டு
வரும் பாதையினைப்  பார்த்திருக்கின்றேன் வந்துவிடு
எப்பத்தா வருவீக தவமாய்த்  தவித்திருக்கேன்

**இரா.சீ.பாலகுமார்.M.A**
சந்தோசபுரம்
சென்னை--600073

# கலாச்சாரப் பொக்கிஷங்கள்



வேட்டியும் துண்டுமாக அந்த எளிமையான மனிதர் சென்னை கடற்கரையில் அமர்ந்தபடி பஹவத் கீதாவை படித்துக் கொண்டிருந்தார்.

அந்த சமயம் ஒரு இளைஞன் அவர் அருகில் வந்து, "இந்த விஞ்ஞான யுகத்தில் இன்னுமா இதையெல்லாம் படித்துக் கொண்டிருக்கிறீர்கள்? மனிதன் நிலவில் காலடி எடுத்து வைத்து விட்டான். நீங்கள் என்னடா என்றால் இன்னும் ராமாயணம், மஹாபாரதம் என்று அந்தக் காலத்திலேயே நின்று கொண்டிருக்கிறீர்களே" என்றான் ஏளனமாக.

அதற்கு அவர், "நீ பஹவத் கீதை படித்திருக்கியா, உனக்கு அது பற்றி தெரியுமா?" என்று கேட்க, அதற்கு பதில் ஏதும் சொல்லாமல் மேலே தொடர்ந்தான்.

"இதையெல்லாம் படித்தால் என்ன ஆகும்? என்ன லாபம்? நான் விக்ரம் சாராபாய் என்னும் பெரிய விஞ்ஞான ஆராய்ச்சிக்கூடத்தில் ஒரு விஞ்ஞானி. இதெல்லாம் சுத்த வேஸ்ட்"

அதைக் கேட்ட அந்த கனவான் தனக்குள் புன்னகைத்துக் கொண்டார். அந்தச் சமயத்தில் இரண்டு பெரிய உயர் ரகக் கார்கள் அவர்கள் அருகில் வந்து நின்றன.

ஒரு காரிலிருந்து ராணுவர் வீரர் ஒருவரும், மறு காரிலிருந்து பாதுகாப்புப்படை கமாண்ட்டொக்களும் இறங்கினார்கள். ராணுவவீரர் காரின் பின் கதவைப் பணிவுடன் திறந்து விட்டு ராணுவ மரியாதையுடன் சல்யூட் அடித்தார். பகவத்கீதை படித்துக் கொண்டிருந்த அந்த கனவான் காரின் பின் இருக்கையில் ஏறி அமர்ந்தவுடன், கார் மெல்ல நகரத் தொடங்கியது.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அந்த இளைஞன் அதிர்ச்சியில் உறைந்து போயிருந்தான். அதிலிருந்து மீண்டு கார் அருகில் ஓடிச் சென்று "சார்... சார்.. தாங்கள் யார்?" என்று பதட்டத்துடன் வினவ,

நிதானமான புன்னகையுடன் கனவான் பதிலளிதார். "நான் தான் விக்ரம் சாராபாய்".

அந்த இளைஞன் யார் தெரியுமா.. அவர்தான் டாக்டர் அப்துல் கலாம்.

அதன்பின் டாக்டர் அப்துல் கலாம் ராமாயணம், மஹாபாரதம், பகவத் கீதா எல்லாம் படிக்கத் துவங்கினார். அனைத்தும் படித்து அறிந்தபின் இனி ஒரு போதும் அசைவ உணவைத் தொடுவதில்லை என உறுதி பூண்டார். பஹவத் கீதை கதை அல்ல "கீதா ஒரு விஞ்ஞானம்" என்று தன் சுயசரிதையில் குறிப்பிடுகிறார்.

நம் இதிகாசங்கள் நம் கலாச்சாரப் பொக்கிஷங்கள் அவற்றை நாம் போற்றுவோம்... பாதுகாப்போம்.

**நடேஷ் கன்னா**

கல்லிடைக்குறிச்சி

# வள்ளுவனின் கற்பியல் கற்பனைகளும், தன்முனை இயைபுக்கவிதைகளும்

(ஒரே அதிகாரத்தில் மட்டும் - 5 குறட்பாக்கள்)

**அதிகாரம் 129. புணர்ச்சி விதும்பல்**

**குறள்.**

உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்குஇல் காமத்திற்கு உண்டு **(1281)**

**பொருள்:**

*நினைத்தபோதும் மகிழ்தல், கண்ட போதும் மகிழ்தல் காமத்திற்கு உண்டு, கள்ளுக்குக் கிடையாது.*

**தன்முனை இயைபுக் கவிதை**

நினைத்தாலும் கண்டாலும்,
மாது தருவாள் மயக்கம் /
குடித்தபோது தன் அளவே ,
மது தருமே மயக்கம் //

**குறள்:**

எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்,
பழிகாணேன் கண்ட இடத்து **(1285)**

**பொருள்:**

*கண்ணுக்கு மையிடும் போது, மைதீட்டும் குச்சியைக் கண்களால் பார்க்க முடியாது. என் காதலனைக் கண்ட போது அவன் குற்றங்கள் தெரிவதில்லை.*

**தன்முனை இயைபுக் கவிதை:**

கண்ணுக்கு மைதீட்ட
மைக்குச்சி தெரியாது/
காதலனைக் கண் தீண்ட
குற்றமேதும் அறியாது //

**குறள்:**

ஊடற்கண் சென்றேன்மன் தோழி அது மறந்து
கூடற்கண் சென்றதுஎன் நெஞ்சு **(1284)**

**பொருள் :**

*தோழி, என்னவருடன் ஊடலாம் என்று நினைத்து நின்றேன், என் நெஞ்சம் அவர் பின்னே செல்கிறதே!*

**தன்முனை இயைபுக் கவிதை**

போகாமல் நின்றாள்,
பொய்க்கோபம் கொஞ்சம் /
போய்த்தானே ஒட்டியது
பெண்மகளின் நெஞ்சம் /

**குறள் :**

காணுங்கால் காணேன் தவறுஆய காணாக்கால்
காணேன் தவறுஅல் லவை (1286)

**பொருள்:**

*காதலனைக் கண்டபோது அவரிடம் குற்றம் கண்டுபிடிக்கத் தெரியவில்லை.*
*காணாத நேரத்தில் அவரிடம் நல்லவை கண்டுபிடிக்கத் தெரியவில்லை.*

**தன்முனை இயைபுக் கவிதை**

கண்ட போது காணேன்,
காதலனிடம் குற்றம் /,
காணாத போது கண்டேன்,
நன்மையல்லா முற்றும் //,

**குறள்:**

*உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரே போல்,*
*பொய்த்தல் அறிந்துஎன் புலந்து (1287)*

**பொருள்:**

*ஓடும் வெள்ளம் நீரில் பாய்பவரை இழுத்துச் செல்லும் என அறிந்தும் நீரில் பாய்கிறார்கள். ஊடுவதால் பயனில்லை என்பதை அறிந்தும் ஏன் ஊடுகிறேன். ?*

**தன்முனை இயைபுக் கவிதை**

அடங்காத நீரோட்டம்,
ஆளை இழுத்துச் செல்லும்,
அன்புநெஞ்சின் கோபம்,
அவரிடமா செல்லும்?

**திருமதி. இரா.இராஜாமணி.**
ஈரோடு

# குப்பை



வீடு முழுக்க எப்ப பார்த்தாலும் குப்பையைப் போட்டு வைப்பா..

கேட்டா நோட்டுக்கு அட்டை போட்டேன்மா... பென்சில் சீவின...பேனாவுக்கு இங்கு ஊத்தின... பாட்டில் காலி ஆயிடுச்சு... தப்பா எழுதிட்டேன் அதனால நோட்ல அந்த பக்கத்தை கிழிச்சுட்டேன் என்று தான் குப்பை போட்டதற்குக் காரணம் சொல்லுவாள். பள்ளிக்கூடம் முடிந்து வரும் பொழுது அவ்வப்பொழுது வாங்கித் தரும் தின்பண்டக் கவர்கள் வேறு வீட்டுக்குள் அங்கும் இங்கும் ஆக இறைந்து கிடக்கும்.

சீவி சீவி சிறி யதாக மாறிப்போன பென்சில்களும் இன்னும் கொஞ்சம் முயன்றால் நான் வண்ணம் தருவேன் என்பது போல உரு வத்தில் குறுகி காணப்படும் வண்ணப் பென்சில்களும் அனேகம் வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கும். விடுமுறை காலத்தில் தன்வியிடம் பலமுறை சொல்லியது உண்டு. உன் புத்தகப் பை, புத்தக அலமாரியை தூய்மைப்படுத்து என்று. அவளது துணி துவைக்கும் அலமாரி எப்பொழுதும் சிதறியப்படியே கிடக்கும். தினமும் பயன் படுத்தும் துணிகளை மடித்து சிதறாமல் வைத்தால் என்ன.. காலையில் பள்ளி செல்லும் அவசரத்தில் சாக்ஸ், சிம்மீஸ் உள்ளிட்ட பொருட்களும் உள்ளாடைகளும் அங்கங்கு கலைந்த படியே கிடைக்கும். வீட்டிற்குத் திரும்பிய பின்பாவது கலைந்த பொருட்களை சரி செய் என்று சொன்னால் போமா வீட்டுப்பாடம் வேற எழுதணும் என்று சடைந்து கொள்வாள். பள்ளிக்கூடம் போற வழி தானே பாப்பா குப்பை கவரை தரேன் கொஞ்சம் வச்சிட்டு போறியா என்று கேட்டால் ஏம்மா பள்ளிக்கூடம் போகும்பொழுது யாராவது இப்படி குப்பைக் கவரை எடுத்துட்டு போவாங்களா? என்று கேள்வி கேட்டு மறுத்து விடுவாள்.

சமையலறையில் அன்றைய தினம் உணவுக்குப் பயன்படுத்திய வெங்காயம், பூண்டு ஆகியவற்றின் காய்ந்த சருகுகளும் அழுகிய அதன் பகுதிகளையும் காய்கறிகளின் மீதமான வீணான பாகங்களையும் மீந்து போன உணவுகள், சமையலுக்குப் பயன் படுத்தும் பொடிகளின் கவர்கள் பால், தயிர் வாங்கிய கவர், கடையில் முன்தினம் வாங்கிய தின் பண்டத்தின் காலி யான கவர், என சமையலறையில் முழுவதும் குப்பைகளாக நிறைந்து இருக்கும். பல நேரம் காலியான பெருங்காய டப்பா எண்ணெய் கவர்கள், சோப்புக் கவர்கள், ஷாம்பூ,,காலியான பற்பசை கழிவறை கழுவும் லிக்விட், மருந்து காலியான டப்பா என அனைத்தும் ஒரே கவரில் தஞ்சம் அடைந்திருக்கும் .

மாதாந்திர சேமிப்பு குப்பையான நாப்கின்களும் தவறாமல் குப்பை கவரில் இடம்பெற்று விடுகிறது. இதுபோக தினமும் வீடு கூட்டும் பொழுது வரும் மண் சிறு குப்பைகள் இவையும் அதில் அடங்கும். குளியல் அறையில் அவ்வப்பொழுது படியும் கூந்தல் கழிவு, குளியலறை குப்பைகளையும் செய்தித்தாளில் சேர்த்து மடித்து குப்பைகளில் இடம்பெற்று விடுகிறது.

நியாய விலைக் கடைகளில் வாங்கும் அரிசி, கோதுமை, பருப்பினை தூய்மை செய்யும் பொழுது அதன் கழிவுகளும் குப்பையில் அழையா விருந்தாளியாக இடம் பெற்று விடுகிறது. எப்படியோ மொத்தமாக குப்பைகளை ஒரே கவரில் கட்டி அலுவலகம் போகும் வழியில் உள்ள குப்பைக் கிடங்கில் போகும் பொழுது வீசிவிட்டு செல்வதுதான் பார்வதியின் வழக்கமான பணிகளில் ஒன்று.

சில நேரம் குப்பை எடுத்துச் செல்ல நேரம் இல்லாமல் இருக்கும்பொழுது துர்வாடை அடித்து இரண்டு மூன்று நாட்கள் குப்பை கவரிலேயே வெளியில் கிடக்கும். அதை வேறு கவருக்கு மாற்றும் பொழுது வெள்ளை நிறத்தில் புழுக்கள் நெளிந்து செல்லும். அதைக் கண்டு முகத்தைச் சுளித்தபடியே அடியில் ஒழுகியிருக்கும் நீரைத்துடைத்து விட்டு வேறு புதிய கவரில் போட்டு ஒரு வழியாக குப்பையை இடம் மாற்றினால் தான் நிம்மதியே வரும் அவளுக்கு.

தினமும் குப்பை வைக்காத நாட்களில் அந்த குப்பைக் கிடங்கு உள்ள இடத்தைக் கடந்து செல்லும் பொழுது தூய்மைப் பணியாளர்கள் தினமும் மக்கள் இப்படி வைத்துச் செல்லும் விதவிதமான குப்பைக் கவர்களைப் பிரித்து பச்சை, நீளம் என வேறுபட்ட நிறத்தில் உள்ள குப்பை தொட்டியில் தரம் பிரித்துப் போட்டுக் கொண்டிருந்தனர். எந்தவிதமான முகச்சுளிப்பும் இல்லாமல் தன் வேலையில் முனைப்பு காட்டும் அவர்களைப் பார்க்கும் பொழுது மனம் கொஞ்சம் வலிக்கத்தான் செய்தது. பல நேரம் சிதறிய கண்ணாடிக் குவளைகளைக் கவரில் அப்படியே போடும்பொழுது தூய்மை பணியாளர்களின் கையை அது பதம் பார்த்து விடுகிறது. தவறு என்று தெரிந்தும் நாம் செய்யும் துணிச்சலான செயல் எப்படி முகம் தெரியாத ஒருவரின் வாழ்வில் துன்பத்தை ஏற்படுத்தி விடுகிறது என்று மனம் வருந்தி புலம்பியப்படியே வந்தாள்.

ஒருவேளை மேலை நாடுகளில் உள்ளது போல நாம் நம் குப்பையை தரம் பிரிக்காமல் வைக்கும் பொழுது அந்தக் குப்பையை ஏற்றுக்கொள்ளாமல் அப்படியே நம் வீட்டின் முன்பாக திரும்ப வைத்துவிட்டுச் .சென்றுவிடுவார்கள் . அந்த நிலை நமக்கும் ஏற்பட்டால் என்னவாகும் என்று யோசித்தப்படியே வந்தாள்.

அடுத்த நாள் முதல் அவளது வீட்டின் குப்பைகளைத் தரம் பிரித்து வேறு வேறு வண்ணங்களில் குப்பைகளைப் பிரித்து வைக்க தன் குழந்தைக்கும் கற்றுக் கொடுத்தாள். இங்கு மாற்றம் என்பது நம்மிடம் இருந்து துவங்கினால் நலம் பயக்கும் என்று நினைத்தவாறு நிறைவான மனதோடு இருந்தாள். யாரோ ஒருவர் நமக்காக நம் ஆரோக்கியம் காக்க தன்னைப் பணயம் வைக்கும் பொழுது நாம் நம்மில் சிறிய மாற்றம் செய்தால் என்ன என்று மனம் மாறினாள்.

# சிகரங்கள்... சாதனைகள்...



கவிமணி இரஜகை நிலவன் - மும்பாய்



வாழ்க்கையின் முன்னேற்றத்தின் அடிப்படையே நம் குறிக்கோளில் அடங்கி யிருக்கிறது. உபயோகப்படாத மூளையும் இயங்காகாத இயந்திரமும் உருக்காத இரும்பும் துருபிடித்துப் போகும் என்பது இயற்கையானதே. எந்தப் பொருளுமே உபயோகப்படும் போது தான் அதனுடைய பயனை உணரமுடியும்.

அது போலவே நமது எண்ணங்கள் மூளையில் உதித்து வளரும் ஐடியாக்கள் தான் நம் வாழ்க்கையின் ஸ்திரத் தன்மையை உயர்த்தி நிறுத்தி வைக்கிறது.

உலகில் சாதனைகளை ஏற்படுத்தியவர்கள் ஒவ்வொருவரிடமும் கேட்கும் போது நான் எப்போதும் இந்த எண்ணத்தோடும் கனவுகளுடனும் இருந்த போது தான் என்னால் இந்தச் சாதனையைப் படைக்க முடிந்தது. என்று குறிப்பிடுகின்றர்கள்.

வள்ளுவரின் குறளில் சொல்வது போல உலகில் பெயரும் புகழோடும் வாழ்ந்து விட்டு செல்லா விடில் உன் வாழ்க்கைக்குரிய அர்த்தமே இல்லாமல் போய்விடும் என்கிறார்.

தோன்றலின் புகழோடு தோன்றுக அஃதிலார்

தோன்றலின் தோன்றாமை நன்று என்கிறார்.

எவரஸ்ட் சிகரத்தின் உச்சியைத் தொட்ட ஹிலாரி நேரடியாகவா அங்கே போய் அடைந்திருக்க முடியும்? எத்தனை முறை பனிப்பாறைகளில் சறுக்கி விழுந்து அடிபட்டு மனஉறுதியுடன் தன்னுடை யகுறிக்கோளை அடைந்திருப்பார்.

நாமும் நம்முள் வாழ்வின் குறிக்கோளின் எல்லையை அடைய கனவுகளுடன் முழு மனமுயற்சியுடனும் கற்பனைச் சிறகுடனும் நிகழ்கால உறுதியுடனும் வெற்றிப்படிகளைத் தேடி ஒவ்வொரு அடியெடுத்து வைக்கும் போது தான் வாழ்வின் குறிக்கோளை அடையமுடியும்.

சாதாரண குமஸ்தா வேலைக்கு போகிற ஒரு நண்பர் கார் வாங்க வேண்டும் என்று வெறும் கனவுகளுடனே வாழ்ந்து கொண்டிருந்தார். அவருக்கு கார் வாங்க வேண்டும். ஜாலியாக குடும்பத் தோடு சுற்ற வேண்டும் என்பது கனவுகளின் அலைகளிலே உழன்று கொண்டிருந்தது.

இன்னுமொரு கார்மெக்கானிக் ஷாப் பில் கடைநிலை ஊழியரும் கார் வாங்க கனவு கண்டார். இரவு பகல் பாராது அயராது உழைத்தார். தெரியாத புது விஷயங்களை கற்றுக் கொண்டார். தனியாக சின்னச் சின்ன ரிப்பேரிங் செய்து கொடுக்க ஆரம்பித்தார். கார் வாங்கி விற்று புரோக்கர் வேலை செய்தார். அடுத்த ஊர்களில் டிமாண்டான பொருள்களுக்கு உடனடியாக சப்ளை செய்து வருமானத்தை பெருக்கினார். எதிர் பார்க்காத வருமானம் ஒன்றுக்கு இரண்டாக அவரால் கார்கள் வாங்க முடிந்தது.

எனவே எப்போதும் நாம் ஒரு இலக்கை அடைய முயற்சி செய்யும் போது அதனுடைய செயற்பாடுகளுடன் அதை அடைவதற்கான கடின உழைப்பும் முழு முயற்சியும் நம் மனதில் கொழுந்து விட்டு எரிய விட வேண்டும். உண்ணும் போதும் உறங்கும் போதும் பயணம் செய்யும் போதும் நம் இலக்கை அடைய என்ன செய்ய வேண்டும் என்ற நினைவுகளுடனே நாம் செயல்பாடுகளை கணக்கிட்டுக் கொண்டே வந்தோமானால் நம்முடைய குறிக்கோளை சாதித்து விட முடியும்.

நம்மில் பலர் முயற்சிகளைத் தொடங்கி விட்டு சிறிய தோல்வியால் கூடத் துவண்டு போகிறார்கள். வெற்றியும் தோல்வியும் வீரனுக்கு அழகு. எனினும் வீரர்கள் தோல்வியைக் கண்டு துவண்டு போவ தில்லை. அதே சமயம் வெற்றியைக் கண்டு அமர்ந்து களித்துச் சோர்ந்து போவதுமில்லை. அடுத்த வெற்றிப் பாதைக்கு அடி கோலுகிறார்கள்.

நம்முடைய வாழ்க்கையில் நாமும் ஒரு போர்வீரன் தானே! எத்தனை பிரச்சினைகளையும் சிக்கலக்ளையும் நாம் எதிர்நோக்கவேண்டியுள்ளது. எனவே நம் குறிக்கோளில் வெற்றிபெற வருகின்ற தோல்வித் தடை கற்களைத் தகர்த்தெறியும் போது தான் நம்மால் வெற்றிப் படிகளில் வேகமாக ஏறிப் போக முடியும்.

உதாரணமாக தாமஸ் ஆல்வா எடிசன் கூட மின்சாரத்தை கண்டு பிடிக்கும் முன் ஆயிரம் முறை சோதனை செய்து தன் முயற்சியில் தோல்வி அடைந்த பின்னும்'நான் ஆயிரம் முறை தோல்வி அடையவில்லை வெற்றியே கண்டேன்' என்று கர்வப்பட்டுக் கொள்கிறார். எனவே தோல்விகளையும் கூட நம் வெற்றிக்கு சாதகமாக்கிக் கொள்ளும் போது தான் நாம் நம் முயற்சியில் முன்னேறிச் செல்ல முடியும்.

அன்று எடிசன் தோல்வியில் துவண்டு போயிருந்தால் இன்னும் நாம் கற்கால இருளில் மூழ்கிப் போய் சிம்னி விளக்கையேத் தேடிக் கொண்டு இருந்திருப்போம்.

இன்னும் விளையாட்டு வீரங்கனை பி.டி.உஷா தன்னுடைய கனவுகளோடு தினமும் பயிற்சி செய்து முழுமன முயற்சியோடு ஓடியதால் தான் இந்தியாவிற்கு சிறந்த வீராங்கனையாக திகழ்ந்ததோடு அவரால் தங்க மெடலும் பெற முடிந்தது. சாதனைகளும், கண்டு பிடிப்புகளும் சாதாரணமாக வந்து விடுவதில்லை.

கடும் உழைப்பாலும் தீவிரமான யோசனைகளாலும் அல்லும் பகலும் அயராத உழைப்பாலும் மட்டுமே சாதனை களை படைக்க முடியும் என்பதை ஏற்கனவே வந்த நம் சாதனையாளர்கள் நிரூபித்து விட்டுப் போயிருக்கிறார்கள்.

யாரோ ஒருவர் லாட்டரி சீட்டில் லட்சாதிபதியாகி விட்டதால் நானும் அதையே தொடர்வேன் என்றால் கண்டிப்பாக இவ்வுலக வாழ்விலேயே நமக்கு நரகம் தான் நிச்சயம்.

சிகரங்களைக் கண்டு பிடித்து தொட்டு மகிழ்ந்த ஒவ்வொருவரும் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும், சாதனைகளையும் படைத்த மாமேதைகளின் கடின உழைப்பையும் எப்போதும் நாம் கண் முன்னால் நிறுத்தி, முயற்சியே கனவுச் சிறகின் கற்பனையை விரித்து வாழ்ந்து, நிகழ்கால செயல்பாடுகளை விரைவில் மன உறுதியோடு பின் பற்றுவோமானால், நாமும் ஒரு சாதனையாளராக மாற முடியும் என்பது எப்போதுமே உறுதி.

அல்லும் பகலும் அயராது உழைத்து நம் குறிக்கோளை சென்றடைய நல்ல வழி வகுத்து வேகமாக செயல்பாடுகளை வெளிக் கொணர்வோமனால் வருகின்ற தடைக் கற்களை பொடிப் பொடியாக்கி வெற்றியின் தேவதையை எளிதில் தரிசிக்க முடியும்.




நமக்கிருக்க வேண்டிய ஒன்றுதான்.. நம்பிக்கை இல்லையேல் நம்மால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது. நம்பிக்கை தான் நம்மையும் நம் நாட்களையும் நகர்த்துகிறது. ஒவ்வொரு விடியலும் நம்பிக்கையில்தான். நாளைய கனவு என்பது இன்றைய நம்பிக்கையால் தான். இது ஒரு தொடர் ஓட்டம்.

இன்றோடு இது முடிந்து விடும் என்றால் நாளைய தினம் பற்றிய சிந்தனை நமக்கு வர வாய்ப்பு இல்லை. நம்பிக்கை என்பது உணர்வின் வெளிப்பாடுதான். ஒன்றின் மீது கொண்ட விருப்பமே அதீத நம்பிக்கையைத் தருகிறது. உண்மையில் இது எல்லோருக்கும் பிடித்தமான ஒன்று தான். இங்கே ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு வகை யான விருப்பம். இது நம்பிக்கையால் விளைகிறது. 'நம்பிக்கை கொள்ளும் போது மட்டுமே தேடல் தெளிவாகிறது'. விருப்பமில்லாத எதற்காகவும், யாரும் காத்திருப்பதில்லை. 'விருப்பமே தேடலைத் தருகிறது'. தேடலுக்கு நம்பிக்கை தேவையாகிறது.

நம்பிக்கை என்பது வயதுக்கு ஏற்றபடி இருப்பதில் வியப்பில்லை. குழந்தைகளின் நம்பிக்கை பெற்றவர்கள் மட்டும் தான். பெற்றவர்களே உலகம், எந்தப் பிரச்சனை யென்றாலும் பெற்றவர் களிடம் சொல்லும் போது பெற்றவர்கள் மேல் கொண்ட நம்பிக்கை தெளிவாகிறது. பெற்றவர்களிடம் குறிப்பாக தாயிடம் தான் மகள் எல்லா வற்றையும் கொட்டித் தீர்க்கிறாள். காரணம் தாய் தனக்கான ஆறுதல் என்பது அவளது அசைக்க முடியாத நம்பிக்கை.

தந்தையிடம் சில விசயங்களை சிலர் மறைக்கலாம். அதற்கு காரணம் தந்தையின் முடிவு தன் விருப்பத்திற்கு மாறாக இருக்கும் என்ற நம்பிக்கையும் தந்தை என்பவர் எப்போதும் எதையும் கண்டிக்கக்கூடியவர் என்ற புகுத்தப்பட்ட மாயையும் தான் நம்பிக்கையாக. உயிர்களிடத்து மேல்தான் நம்பிக்கை என்றில்லை. சில பொருட்களின் மீது கூட நம்பிக்கை பிறக்கிறது. அது விருப்ப விளைவு தான். பார்வையிங்கு பல வழிகளில் முடிவைத் தீர்மானிக்கிறது. 'படிப்பினையோ அனுபவமோ பலரது நம்பிக்கைகளுக்கு பதியம் போடுகிறது'.

ஒரு பாதுகாப்பு என்பதும் இங்கே உட்பொருளாக வெளிப்பாடாகிறது. இனம் புரியாத உணர்வு நம்பிக்கையை பலப்படுத்துகின்றன. பலவிதமான செயல் பாடுகளால் கிடைத்த அனுபவம் தான் நம்பிக்கையாய் நிற்கிறது. சில நேரங்களில் நம்பிக்கை என்பது நம்மையும் மீறிய அனிச்சை செயலாக தொடர்கிறது. நாளை நாம் இருப்போம் என்ற நம்பிக்கை தானே கடிகாரத்தில் அலாரம் வைக்க காரணமாகிறது.

நாம் போகும் ரயிலோ பேருந்தோ மகிழுந்தோ எதுவோ நாம் நினைத்த இடத்திற்கு போய்சேரும் என்ற நம்பிக்கையில் தானே பயணம் தொடர்கிறது. சில சமயங்களில் நம்பிக்கை வேறுவிதமாகவும் இருக்கும். ரசனைக்குரியதாகவும் இருக்கும். கனவுகளோ ஆசைகளோ நம்பிக்கை ஆடையைத் தான் கட்டி நிற்கின்றது.

விளையாட்டுக்குச் சொல்லுவார்கள் பிறந்ததேதி போல மறையும் தேதியும் தெரிந்து விட்டால், எல்லோரும் எப்படி

எப்படியோ வாழ்வை நடத்தியிருப்பார்கள்.

எதுவும் நிரந்தரமில்லை என்று சொன்னால் கூட நம்பிக்கை சிலவற்றை வாழ வைத்துக் கொண்டுதான் இருக்கிறது. நம்பிக்கை பொய்த்தாலும், நம்பியவனின் மனதை அது கட்டிக் காப்பாற்றுகிறது. முயற்சி இங்குதான் முகம் காட்டத் துவங்குகிறது. நம்பிக்கை சமயங்களில் தேடல்களை வளமாக்குகிறது. இயற்கையின் நியதிகளைப் போன்று நம்பிக்கையும் நிச்சயமான வழிகளில் தன்னை களமிறக்கிக் கொண்டு காப்பாற்றவும் செய்கிறது.

நம்பிக்கையென்பதும் தன்னம்பிக்கை யென்பதும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது தான். மற்றவன் மேல் வைப்பது நம்பிக்கை என்றால் உன் மேல் கொள்வது தன்னம்பிக்கை. தன்னம்பிக்கை கொண்டவனுக்கு நம்பிக்கை பெரிய விசயமல்ல. வரட்டும் எதையும் பார்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் தன்னம்பிக்கை கொண்ட ஒருவனுக்கு மட்டும்தான் வரும். 'ஒருவனின் தன் னம்பிக்கை மற்றவனின் நம்பிக்கையாகவும் ஆவது உண்டு'.

எல்லையிலே நின்று கொண்டு எது வந்தாலும் துணிந்து இறங்கும் போர் வீரனின் செயல் நம்பிக்கையில் தான் நிம்மதியிருப்பதாக, பாதுகாப்பு இருப்பதாக நாம் நம்புகின்றோம். நம்பிக்கை என்பது மிக பலமானதும் கூட.

தன்னம்பிக்கை கொண்டவனைத்தான் சிலர் ஐயத்தோடு பார்ப்பார்கள். இவனால் முடியுமா? என்ற ஐயத்தையும் இவனா! என்ற ஆச்சரியத்தையும் தன்னம்பிக்கை தந்து விடுகிறது. அனைத்துக் கேள்விகளுக்கும் நன்றாக பதில் எழுதியிருக்கிறேன் எனக்கு எப்படி மதிப்பெண் குறையும்? என்று தன்னம்பிக்கை கொண்டவனால் தான் மறு மதிப்பீடுக்கு விண்ணப்பிக்க முடியும். தன்னம்பிக்கை இருந்ததினால் தான் வெற்றியின் வாசல் திறக்கிறது. தன்னம்பிக்கையோடு களத்தில் இறங்குபவன் என்றும் தோற்பதில்லை.

நம்பிக்கையோ தன்னம்பிக்கையோ நல்ல வழியில் மட்டுமே இருக்க வேண்டும். 'கத்தியால் உயிரைக் காப்பாற்றவும் முடியும், உயிரை எடுக்கவும் முடியும். யாரிடம் கத்தி இருக்கிறது என்பதே இங்கு முக்கியம்'. தலைவன் மேல் தொண்டனுக்கும், தொண்டன் மேல் தலைவனுக்கும், புரிதல் மற்றும் நம்பிக்கை இருந்தால் மட்டுமே அரசியல்களம் அர்த்தமுள்ளதாகும். இங்கே நம்பிக்கை தொலையுமானால் பதவியும் அதிகாரமும் பறிபோகும். உண்மைக்கும் நம்பிக்கைக்கும் தொடர்பு உண்டு. உண்மையிருக்கும் இடத்தில் நம்பிக்கை குடியிருக்கும்.

ஒவ்வொரு செயலும் நம்பிக்கையோடு தான் பிறக்கிறது. வாழ்க்கையில் காரணம் இல்லாமல் நாம் யாரையும் சந்திப்பதில்லை. நமக்காக விதிக்கப்பட்ட ஒன்றுக்காக மட்டும் தான் நாம் இன்னமும் வாழ்கின்றோம் என்ற நம்பிக்கை வேண்டும். நமக்கான பணி முடிந்து விட்டால் நாமிருக்கப் போவது மில்லை.

இரவு பகலாக உழைத்துச் சேர்த்த பொன்னும் பொருளும் நமக்கான தில்லை. நம்ப வேண்டும். எதை நாம் ஆண்டு அனுபவிக்கிறாமோ அது மட்டுமே நம்முடையது. இது தான் உண்மை. இதை உணர நம்பிக்கை வேண்டும்'. 'கடவுள் வழிபாடு என்பது நம்பிக்கையின் உச்சம்' மதங்கள் வெவ்வேறானாலும், வழிபாட்டு முறை மாறியே இருந்தாலும், நம்பிக்கை மட்டுமே எங்கும் ஒன்றாக... அதுவே இறையாகிறது. தொழுதால் பயன் உண்டு என்பதே நம் நம்பிக்கை. அது ஒரு வகையான மனக் கடத்தி. மனதைப் பக்குவப்படுத்த ஒரு ஒப்புவிப்பு.

எந்த நோயானாலும் மருந்து பாதி மனது பாதி என்பார்கள். எதையும் மனதொப்பி செய்யும்போது அந்த செயல் வெற்றியாகிறது. நம்பிக்கை இருந்தால் மட்டுமே செயலை மனமொன்றி செய்ய முடியும். முடியுமா முடியாதா.. என மனம் ஊசலாடினால், செயல் வெற்றி பெறாது. நம்பிக்கை

கொண்டவனைத்தான் நாடும் வீடும் விரும்புகிறது. நம்பிக்கையோடு செய்யும் தியானம் வெற்றியாகிறது. நம்பிக்கை தரும் வார்த்தைகளே உரமாகிறது.

நம்பிக்கைக்கு வயது வரம்பு கிடையாது. முடியும் என்ற நம்பிக்கை இருக்கும் வரை உடல் தளர்ந்தாலும் உள்ளத் திண்மை யோடு வலம் வரலாம். நம்பிக்கை தளராமல் இருப்பதால் தான் சிலரால் தொடர்ந்து வெற்றி பெற முடிகிறது. தலைவன் மேல் கொண்ட நம்பிக்கையே தொண்டர்களைக் கட்டுக் கோப்போடு வைத்து பல வரலாறுகளைப் படைத்து வருகிறது.

நம்பிக்கை சமயங்களில் பொய்ப்பது போல தோன்றினாலும் வேறு வழியில் கண்டிப்பாக வெற்றியைப் பெற்றுத் தரும். ஒருவன் படகில் செல்கிறான். விபத்துக்குள்ளாகிறான். உடைந்த படகின் துணையோடு ஆளில்லாத கரை ஒதுங்குகின்றான்' நம்பிக்கையோடு, உடைந்த படகின் ஒருபாகத்தில் 'உதவி தேவை' என எழுதி பார்க்கும்படி வைக்கிறான்'.

யாரும் வரவில்லை. வேறு வழியின்றி வாழ வேண்டும் என்ற நம்பிக்கையோடு, நாட்களை நகர்த்த முற்பட்டு நம்பிக்கை யோடு காத்திருக்கின்றான். அவன் உணவு தேடச் சென்ற போது அவன் போட்டிருந்த குடிசையும் தீப்பிடித்து எறிந்து விடுகிறது. வரும்போது புகையை மட்டுமே காண்கிறான். அப்போது என்ன செய்வது என்று தெரியாத நேரத்தில் பெரிய கப்பல் ஒன்று வந்தது. அதில் உள்ளவர்கள் காப்பாற்றும் நோக்குடனே வந்ததாகச் சொல்ல, இவன் வியந்து போகின்றான்.

எப்படியெனக் கேட்கும்போது அவர்கள் சொன்னது, ஏதோ புகை வந்ததைப் பார்த்து, பிறகு தொலை நோக்கியில் பார்த்த போது 'உதவி தேவையென்ற பலகையைப் பார்த்தோம்' வந்தோம், என்று கூறவே நம்பிக்கை வீண் போகாததை உணர்கின்றோம். இதில் புகை காரணமானதும், அது வானோக்கி நகர்ந்ததும், அது மற்றவரை கவர்ந்ததும் 'இவன் செயலால் இல்லை என்றாலும்', நம்பிக்கையோடு எழுதி வைத்த பலகை முக்கிய பங்காகிறது. ஆக 'நம்பிக்கை கொண்டவன் தோற்கக் கூடாது என்று இயற்கையே உதவியதும் நம்பிக்கைக்கு விளக்கேற்றி வைக்கிறது'.

காலத்தின் ஒவ்வொரு பக்கமும் இயற்கையின் ஒவ்வொரு பக்கமும் நம்பிக்கையால் விளைந்தவை தான். விதை மரமாகும் வரை நம்பிக்கையோடு காத்திருக்க வேண்டும். மேகம் கூடினால் மழை, இயற்கையும், நம்பிக்கை தான். விளக்கு ஏற்றினால் வெளிச்சம் வரும். காரண காரியமுடனே நம்பிக்கை பிறக்கிறது. 'எதையும் யாருக்காகவும் இழக்கலாம் நம்பிக்கையை மட்டும் இழந்து விடக்கூடாது' நாளை என்பது இன்றைய நம்பிக்கையில்தான். புரிந்து கொண்டால் வாழ்க்கை வளமாகவே இருக்கும்.

நம்ப வேண்டியதை நம்ப வேண்டும். அதற்கு நல்லறிவு துணை வேண்டும். நம்பி கைகொடுத்தால் தூக்கி விட ஆளுண்டு. உழைப்பை நீகொள். உணர்வில் நம்பிக்கை தீபமேற்று. நம்பிக்கை கை கொடுக்கும். உழைப்பும் அறிவும் நம்பிக்கையின் கைகள். உழைக்காமல் முன்னேற முடியாது. நம்பிக்கையோடு இருப்பவனுக்கு நல்லது கிடைக்கும். கிடைப்பதை நன்றெனக் கொள்வதும் நம்பிக்கையே.

ஒருரூபாய் செலவு செய்து ஒரு கோடி வரும் என உழைப்பின்றி உயர நினைக்காதே அப்படி நினைப்பவர் களுக்கு இருப்பது நம்பிக்கை யில்லை. பேராசை.. பேராசை பெரு நட்டம். நம்பிக்கையோடு நல்லெண்ணத்தோடு நாளும் உழைத்தால் உடல் நலிந்தபோது உன் சம்பாத்தியம் உன்னை உட்கார வைத்துச் சோறுபோடும். இது தான் நம்பிக்கை. ஓடியாடி உழைக்கும் காலத்தில் உட்கார்ந்து விட்டால் வயதான காலத்தில் வறுமையில் தான் உலவ வேண்டும். நம்பிக்கை, இடம் பொருள் ஏவலோடு காலத்தையும் கணக்கில் கொண்டிருப்பதே ஆகும். நம்புவோம். நல்லது நடக்கட்டும்.

**பரணி சுப சேகர்,** மதுரை, தமிழ்நாடு.

# புதுக்கவிதைகள்

1.
கடவுளுக்கு நீங்களாகவே
ஒரு உருவம் கொடுத்துவிட்ட படியால்
கடவுள் உங்கள் எதிரில் இருந்தாலும்
உங்கள் கண்களுக்கு தெரிவதில்லை

2.
கரை சேர முடியாது என்று
தெரிந்தும் தொட்டு செல்லும்
அலை போலத்தான்
நம் மனதின் ஆசைகள்

3.
குறை இல்லாத வாழ்க்கையை
தேடாதே அது இதுவரைக்கும்
யாருக்கும் கிடைத்ததில்லை

4.
சிலவற்றை தெரிந்து கொண்டால்
தெளிவாக இருப்பீர்கள்
பலவற்றை தெரியாமல் இருந்தால்
நிம்மதியாக இருப்பீர்கள்

5.
பிரச்சனைகளுக்கு சரியான தீர்வு
மற்றவர்களிடம் சொல்லாமல்
இறைவனிடம் மட்டும் சொல்வது
சிறந்த தீர்வாக அமையும்

6.
கடந்து சென்றவை அனைத்தும்
பாதைகள் அல்ல
நாம் கற்றுக் கொண்ட பாடங்கள்

7.
சில இடத்துக்கு நாம போறது
புண்ணியம்
சில இடத்துக்கு போகாமல் இருப்பது
கண்ணியம்.

8.
கடன் பட்டு பெற்ற பட்டம்
இறுதியில் கடன் அடைக்க
மட்டும்தான் பயன்படுகிறது

**நடேஷ் கன்னா**
கல்லிடை குறிச்சி. 627416

# வெண்மதியே என்றன் வெகுமதியாய் வந்தாயே

வெண்மதியே என்றன் வெகுமதியாய் வந்தாயே
மனதார அன்பினையும் அள்ளித் தருபவளே
தாலிக் கட்டினேன் மணவாழ்வு மலர்ந்ததே
நீயும் நானும் சேர்ந்து இணையராகினோம்
சொக்கத்தங்கம் மேனியினைப் பெற்றாய்
பேச்சினில் கனிவு கேட்டிடவே செய்கிறதே
அன்ன நடை பயிலுகிறாய் நளினமாகிறதே
காந்த விழிப் பார்வையினால் ஈர்த்தவளே
உன்னை மணந்ததால் செல்வமும் கூடியதே
வரவுக்குள் செலவினை சிக்கனப் படுத்துகிறாய்
சொந்த பந்தங்களை பரிவுடன்நேசிக்கிறாய்
புரிதலை உணர்ந்தாய் விட்டுக் கொடுக்கிறாய்
வாரிசுகள் இரண்டு அளவுடன் ஈன்றெடுத்தாய்
பாசம் நேசம் கொண்டு வளர்க்கின்றாய்
சொத்தும் ஆபரணங்களும் நிறைவுடன் கொண்டாய்
நிறைவோடு நிலமிதில்பல்லாண்டுகள் வாழலாம்

**கவிஞர் இரா. சீ. பாலகுமார்.**,M.A.,
சந்தோசபுரம், சென்னை - 600073.



# ஹைக்கூ கவிதைகள்



1
இசைக் குறிப்புகள்
பத்திரமாகக் கொண்டு சேர்த்தது
காலை ஈரக்காற்று

2
தீப்(ம்)பழம்
உண்ணத் தேடி வந்தது
விட்டில்

3
வகுப்பறை
அடுக்கப்பட்டிருக்கின்றன
எத்தனையோ கனவுகள்

4
அன்னமில்லாவிட்டால் என்ன?
உண்பதற்கு
அழகிய நிலா இருக்கிறது

5
நடுங்கும் கைகள்
காட்டிக்கொடுக்கின்றன
ஏழையின் பசியை

6
அவமானம் இல்லை
குளிர்ச்சிதான்
வானத்தின் எச்சில் பூமிக்கு

7
வெறிச்சோடிய வீதி
கதைபேசிக் கொள்ளும்
மரங்களும் கிளிகளும்

8
ஓய்வூதியமோ?
ஒரு தடவை பறத்தல்
பழுத்துதிரும் இலைக்கு

9
விடியல் நேரம்
பரவசம் தருகிறது
கோலமிடும் வளையோசை

10
கல்யாண வீடு
இரட்டைச் செலவு
மொய்யும் செருப்பும்

**Dr. ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர், இலங்கை



# அன்பெனப் படுவது...

என்ன பொழப்புடா இது நாய்ப் பொழப்பு என்று சிலர் வெலை செய்யும் போது அலுத்துக் கொள்வார்கள். என்னுடைய பொழப்பும் நாய்களைப் புடிக்கிற பொழப்பு தான். ஆனால் ஒரு நாள் கூட நான் அதற்காக அலுத்துக் கொண்டது இல்லை., நாய் புடிக்கும் மாநகராட்சி லாரியில் கையில் சுருக்குக் கயிறோடு சும்மா ஸ்டைலா நின்னு வந்தேன்னா, எமன் தான் பாசக் கயிரோடு வந்துட்டானு தெருவில் இருக்கும் நாய்கள் பம்மிப் பதுங்கி வாலை சுரிட்டிக்கினு ஓடி ஒளியும்..

அதுங்க அப்படி பயந்து ஓடுவதப் பார்க்கும் போது எனக்கு பேரானந்தமாக இருக்கும். சில நாய்கள் திமிரோடு என்னைப் பார்த்து முறைக்கும் போது எங்கிருந்து தான் எனக்குக் கோபம் வருமோ தெரியாது, தலைக்கு மேலே கையைத் தூக்கி சுருக்குக் கயிரை ஒரு சுத்து சுத்தி சுழட்டி முறைக்கும் அந்த நாயின் மீது எறிஞ்சேன்னா, சும்மா கில்லி மாதிரி தலைவர் நம்ப பாசக் கயித்துலே மாட்டிக்கினு ஒரு துள்ளு துள்ளுவாரு பாருங்க அப்படி ஒரு துள்ளலா இருக்கும்.

கடைசியா உயிர் போகும் போது மரண ஓலமுன்னு சொல்லுவாங்க பாருங்க அப்படி மரண ஓலமிட்டு கத்தும், அந்தக் கத்தல் தான் என் கோபத்த தணிக்கும். சுருக்கு கயித்துல மாட்டிக்கின அந்த நாயின் வாயக் கட்டி ஒரே இழுவா இழுத்து வண்டியிலே தூக்கிப் போட்டு வாய்க் கட்ட நேக்கா அவுத்து வண்டிக்குள்ள போடும் போது உண்மையிலே ஒரு கம்பீரமான பெருமிதம் எனக்குள் வரும் பாருங்க, அந்த சுகமே ஒரு தனி அலாதியானது.

வண்டியில் விழுந்த அந்த நாய் அப்படியும் இப்படியுமா வண்டிக்குள்ள ஓடி.. ஓடி....கடைசியிலே விதி விட்ட வழியினு உக்காந்திடும். அப்போ அந்த நாயப் பாக்கும் போது ரொம்ப பரிதாபமா இருக்கும். எங்கிட்டயா உன் வேலய காட்டுற, தொழில்ல நா சுத்தம்னு எனக்குள் சொல்லிக்

கொண்டு எனக்கு நானே சபாஷ்ன்னு என்னைத் தட்டிக் கொள்வேன்.

இதுல இன்னொரு வேடிக்க இன்னான்னா? பொதுவா ஒரு ஏரியாவுல இருந்து இன்னொரு ஏரியாவுக்குப் புது நாய் ஒன்னு வந்தா அந்த ஏரியாவுல இருக்கும் எல்லா நாய்களும் ஒன்னா சேர்ந்து அந்தப் புது நாயப் பாத்து கொலைக்கும் பாருங்க அப்படி ஒரு கொலைப்பா இருக்கும். கொலச்சி விரட்டி விரட்டி அடிக்கும். தப்பித்தவறி அந்த நாய் மாட்டிக்கினா எல்லா நாய்களும் ஒன்னா சேந்து கடிச்சி கொதறி எடுத்துடும்.

ஆனாப் பாருங்க, இந்த நாய் வண்டியிலே அப்படிப்பட்ட நாய்கள் மாட்டிக்கினா ஒன்னப் பார்த்து ஒன்னு கொஞ்ச நேரம் உறுமினு இருக்கும், அதன் பிறகு நாம எல்லோரும் ஒன்னா மாட்டிக்கினோமுன்னு தெரிஞ்சி பயந்து போய் கம்பிக்கு வெளியே பரிதாபமாகப் வேடிக்கைப் பார்த்துக்கினு போகும். அப்புறம் அதுங்களுக்குள்ள சண்டையே வராது.

மிருக வதைத் தடுப்புச் சட்டத்தின் படி தெரு நாய்களைப் பிடித்து புளுகிராஸ்; ஆஸ்பத்திரியில் சேர்த்துவிடுவோம். அவர்கள் ஒவ்வொரு நாயையும் பிடித்து மயக்க ஊசியப் போட்டு அதுங்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு ஆபரேசன் பன்னி அதே வண்டியில் ஏற்றி அனுப்பிடுவாங்க. எங்காவது ஒரு மைதானத்துல அதுங்கள விரட்டி விட்டுட்டு வந்துடுவோம். இது தான் நம்ப தொழிலு.

அன்னிக்கு அப்படித் தான் வேலைக்குப் போயி ஆபிசுக்கு பக்கத்தில் இருக்கிற டீக் கடையில் டீக் குடிச்சினு இருக்குற, பெரிய ஆபீசர் உன்னக் கூட்டியாரச் சொன்னாருன்னு சொல்லி கூட வேல பாக்குற கோவிந்தன் வந்து கூப்பிட்டடான். இன்னாத்துக்கு கூப்புட்டாருன்னு நெனச்சிக்கினே ஓட்டமும் நடையுமா ஓடி அவரு முன்னால போய் நின்னேன்.

‘வடிவேலு ஒரு கம்பளெயின்ட் வந்து இருக்கு அக்ரகாரத்து மேலத் தெருவுலே தெரு நாய்களின் தொல்லை அதிகமா இருக்குதாம். தெருக்காரங்க எல்லாம் ஒன்னா கையெழுத்துப் போட்டு கம்ப்டிளயின்ட் குடுத்து இருக்குறாங்க, அது பத்தாதுன்னு பேப்பர்ல வேற எழுதிட்டாங்க, மேல இருந்து என்னா ஏதுன்னு பாக்கச் சொல்லி உத்தரவு, நீ போயி அது இன்னான்னு பாத்துட்டு வந்துடு...’ என்றார் அதிகாரி.

‘சார்... போன மாசம் தான் அந்த ஏரியவுல இருக்குற எல்லாத் தெரு நாய்களையும் மொத்தமா புடிமுச்சினு போயி ஆபரேசன் பன்னி விட்டோம், மறுபடியும் போவனுமா? போனா சும்மா வேஸ்ட்டுதான் சார்... ஒரு நாய்கூட மாட்டாது’

‘யோவ் நாய்கள் மாட்டுதோ இல்லையோ, வண்டிய எடுத்துனு போய் ஒரு சுத்து சுத்திட்டு வா... நாய் புடிக்க வந்தாங்கன்னு பேராவது இருக்கும். அந்த ஏரியா வார்டு மெம்பர்ல இருந்து, கவுன்சிலர் வரைக்கும் தினமும் போனப் போட்டுக் கேக்குறாங்க, அப்படி அனுப்பலேன்னா எம்.எல்.ஏ, எம்.பி, வரைக்கும் போவோமுன்னு மெரட்டல் வேற, எதுக்கும் வண்டி எடுத்துனு போய் ஒரு சுத்து சுத்திட்டு வா.. போ...ல் என்றார்.

பெரிய ஆபீசர் சொன்ன மாதிரி, வண்டிய எடுத்துக்குனு அக்ரகாரத் தெருவை அலசிப் பாத்துட்டோம், ஒரு நாய் கூட கண்ணுல மாட்ல, அக்ரகார நாலுத் தெருவையும் சுத்தி...சுத்தி... வந்தது தான் மிச்சம். சோர்ந்துப் போய் வண்டியிலே திரும்பும் போது, ஒரு சந்துலே செவிலிக் கலர் நாய் ஒன்னு வண்டியப் பாத்துட்டு பதுங்கி... பதுங்கி போறதப் பாரத்து சட்டுனு கையிலே இருக்கிற கயித்தோட நானும் பதுங்கி பதுங்கிப் போய்

கப்புனு அந்த நாய்க் கழுத்துல சுருக்கு கயித்தைப் போட்டு புடிச்சி வண்டியிலே போட்டுனு புளுகிராஸ் ஆபிசுக்கு வண்டிய விட்டேன்.

குய்யோ முறையோன்னு கொலச்ச அந்த நாய் கொஞ்ச நேரத்துல கம்முன்னு வெளியே வேடிக்கை பாத்துனு வந்தது, 'என்னைப் பார்த்தா பதுங்குற, இன்னும் கொஞ்ச நேரத்துல உனக்கு ஆபரேசன் தலைவான்னுல் மனசுல சொல்லிக்கினு, அது ஆணா, பெண்ணான்னு பார்த்தேன். அது ஆண் நாய் தான்.

வண்டி போய்க்கொண்டிருந்தது. வண்டியில் கூண்டுக்கு அந்தப் பக்கம் அந்த நாயும், இந்தப் பக்கம் நான் மட்டும் தான் இருந்தோம். காலைல வேலைக்கு வரும் போது என் மனைவி பேசிய பேச்சி திடீர்ன்னு ஞாபத்துக்கு வந்திருச்சி.

கண்ணில் கண்ணீரோடு, 'ஏய்யா, நமக்கு குழந்தையே பொறக்காதா? நானும் வேண்டாத தெய்வம் இல்ல, போகாத கோயில் இல்ல, முழுங்காத மாத்திரை மருந்துகள் இல்ல, நமக்கு கல்யாணமாயி பத்து வருசத்துக்கு மேல ஆச்சி, என் வயித்துல ஒரு புழு பூச்சி உண்டாக மாட்டேங்குது, பாக்குறவங்க எல்லாம் இன்னுமா கொழந்த பொறக்கலேன்னு கேட்டு நச்சரிக்கறாங்க, எந்த ஒரு விஷேசத்துக்கும் சொந்தகாரங்க வீட்டுக்கும், அக்கம் பக்கம் கூட போக முடியலே, ரொம்ப அவமானமா இருக்குதுனு' அவள் சொன்னதும், ச்சீன்னு என்னையே நான் வெறுத்துக் கொண்டேன். ஏன் மேல் எனக்கு வெறுப்பு உண்டானது.

'குறை உனக்கு இல்லேம்மா, என் உடம்புல தான் இருக்குது அதற்கு நீ என்ன பன்ன முடியும்னு அவக் கண்ணுல இருந்து வந்த கண்ணீர தொடச்சிட்டு வேலைக்கு வந்துவிட்டேன்.

என் உடம்புல குறைய வச்சிக்கினு என்னக் கட்டிக்கிட்ட பாவத்துக்காக அந்தப் பொண்ணு இப்படி அவமானப் படுதேன்னு என் மனம் மிகவும் வேதனைப் பட்டது. ச்சே... கடவுள் என்னை ஏன் இப்படி விளங்காம படச்சிட்டான்னு மனசுக்குள் விரக்தியா நெனைச்ச போது எனக்குள் பளிச்சின்னு ஒரு எண்ணம் வந்தது.

போன ஜென்மத்துல என்ன பாவம் பன்னேனோ இப்படி மலடாப் போய் கட்டிய பொண்டாட்டிய அவமானப்பட வைக்கிற நிலைக்கு வந்துட்டேன், அதற்குப் பிரயாச்சித்தமா இந்த நாயை விட்டுடலாம். அதாவது சந்தோசமா இருந்து குட்டிகளைப் பெத்து தன் இனத்த விருத்தி பன்னட்டும்னு மனசுல நினைத்துக் கொண்டு அந்த நாயைப் பார்ததேன்.

என் பார்வையில் இப்போது கொலை வெறியோ, வெறுப்பு உணர்ச்சியோ, பழி தீர்க்கும் எண்ணமோ, இல்லாததை உணர்ந்த அந்த நாயும் என்னைப் பாசத்துடன் பார்த்தது. அதற்கு அடையாளமா சினேகமா தன் வாலை ஆட்டி குழைந்து... குழைந்து...; முன்னங்காலை கம்பியின் மீது வைத்து நட்போடு பிராண்டியது.

'டிரைவர் வண்டியை நிறுத்து... நிறுத்து... ன்னு' கத்தி வண்டியை நிக்க வெச்சி அந்த நாயை வெளியே விட்டேன். சுதந்திர உணர்வு என்ன என்பது அடிமைப் பட்டவனுக்கு மட்டும் தான் தெரியும், அதைப் போல இந்த நாயும் ஒரே தாவா தாவி குதிச்சி வெளியே ஓடியது. சிறிது தூரம் ஓடிய அந்த நாய் என்னைத் திரும்பிப் பார்த்தது, அது ஏன் அப்படிப் பார்த்தது?

'நன்றி உணர்ச்சியிலா? இல்ல, சுய நலத்தால் கடமையை செய்யத் தவறிய என் செயலுக்கா?'

**தங்க. ஆரோக்கியதாசன்**

# நிம்மதியின் குரல்



எனது கடுமையான வேலைப்பளுவின் சோர்வினை ஐந்து நிமிடத்திற்குள் போக்கி விடும் சுவையான சூடான இஞ்சி டீ கிடைக்குமிடம் திருச்செந்தூர் பேருந்து நிலையத்திற்குள் இருக்கும் 'குமரன் பேக்கரி'. தஞ்சாவூர் புறவழிப் பேருந்து இன்னும் பேருந்து நிலையத்திற்குள் வரவில்லை என்பதை உறுதி செய்து விட்டு பேக்கரிக்குள் நுழைந்தேன்.

'அண்ணே ஒரு இஞ்சி டீ.'

'இங்க ஒரு லெமன் டீ.'

'இந்த டேபிளுக்கு சர்க்கரை கம்மியா ஒரு டீ'.

'இங்க ஒரு பிளாக் டீ.'

'அப்பப்பா! டீ மாஸ்டருக்கு தான் எத்தனை நிர்ப்பந்தங்கள்!' காற்றலைகளில் மிதந்து வந்த 'எங்கே நிம்மதி' என்ற பாடலின் வரிகள் எனக்காகவே எழுதப்பட்டிருப்பதைப் போல நினைத்துக் கொண்டிருந்த அதே நேரத்தில்,

'எனக்கென்ன பத்து கையா இருக்கு? ரெண்டு நிமிஷம் பொறுங்க' என்று லேசாகக் கடிந்து கொண்டு புன்னகை மாறாத முகத்துடன் இருந்தவருக்கு அதே பாடல் வரிகள் உற்சாகத்தை தான் அளித்தது போலும்.

குரலில் அவ்வளவு ஒரு தெளிவு. சூழ்நிலைகள் அவர் மீது தரும் அழுத்தத்தை பொறுப்படுத்தாமல் இரு கைகளுக்கும் இடையில் கிலோமீட்டர் கணக்கில் இருக்கும் தூரத்தில் ஒரு துளிக்கூட கீழே சிந்தாமல் கால்கடுக்க நின்று டீ ஆற்றிக் கொண்டிருந்த டீ மாஸ்டரை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஐந்து நிமிடங்கள் கண்களை மூடி நிதானித்து ஒவ்வொரு பருகலிலும் மாஸ்டரின் உற்சாகத்தை என் மனதிலும்

ஏற்றுக்கொள்ள முயற்சித்தேன்.

‘ஈர்ப்பு விதி’ எனப்படும் லா ஆஃப் அட்ராக்சன் பதிவுகளை நான் விரும்பி பார்ப்பதுண்டு. (பார்ப்பதோடு மட்டும் நிறுத்திக் கொள்கிறேன்) அதில் ஒரு பதிவில், தண்ணீருக்கு நிறைய சக்தி உண்டென்றும், நீர் ஆகாரத்திற்கு முன்பு எந்த ஒரு நல்ல வாக்கியத்தை தொடர்ந்து சொல்வதனால் நம்மால் அதே மனநிலையை அடைய முடியும் என்றும் நம்மைச் சுற்றி இருப்பவர்களிடமும் அதே மனநிலை உருவாக்க முடியும் என்று பார்த்திருக்கிறேன்.

டீ மாஸ்டரின் மகிழ்ச்சியான மனநிலை தண்ணீர் மூலமாக என்னையும் ஆக்கிரமித்துக் கொள்ளும் என்ற நம்பிக்கையில் அவரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு வெளியே செல்ல முயன்றபொழுது கை தவறி என் மொபைல் கீழே விழுந்தது. அதை எடுப்பதற்காக குனிந்த பொழுதுதான் அவரது கால்களை முதல் முறையாகக் கவனித்தேன்.

நீண்ட நேரம் நின்றுகொண்டே வேலை பார்ப்பதால் ஏற்படும் விரிசுருள் சிறை நோய் (சிலந்தி பின்னல்) எனப்படும் வெரிகோஸில்ஸால் பாதிக்கப்பட்டிருந்தார். அப்படிப்பட்ட சூழலிலும் மகிழ்ச்சியை விரும்பும் அவரது பக்குவமான மனநிலை மீண்டும் என்னை வியப்பில் ஆழ்த்தியது.

அப்பொழுது ‘பளிச்’ லைட் வெளிச்சத்துடன் தூத்துக்குடி மதுரை மார்க்கமாக தஞ்சாவூர் செல்லும் புறவழிப் பேருந்து வேகமாக பேருந்து நிலையத்திற்குள் நுழைந்தது. பேருந்தின் பிரகாசத்தில் துளிக் கூட ஓட்டுநர் முகத்திலோ நடத்துனரின் முகத்திலோ பிரதிபலிக்கவில்லை.

‘அண்ணே! ஒரு கப் டீயாவது குடிச்சிட்டு போவோம்னே. ரொம்ப பசிக்குது’ என்று சோர்வான குரலில் நடத்துனர் கூறவே,

‘ஏற்கனவே அஞ்சு நிமிஷம் லேட். இன்னும் கொஞ்ச நேரம் பொறுத்துக்கோ மேலகரந்தையில ஒரேடியா சாப்பாடே சாப்பிட்டுருவோம்’ என்று கூறிவிட்டு பேருந்தை இயக்க ஆயத்தமானபோது, பெரியவர்கள் சிறியவர்கள் நண்டு சிண்டுகள் என ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு கூட்டமாக பேருந்திற்குள் ஏறினார்கள்.

அவர்கள் ஒவ்வொருவரின் கைகளிலும் வடை, பஜ்ஜி என பேருந்து முழுவதும் ‘கம்’ என வாசம் வீசியது. ஏற்கனவே பசியில் இருந்த நடத்துனர் அவரது கைகளையே பார்த்துக் கொண்டு நின்றார்.

‘தாத்தா வரல.’

‘ஆமா ஆமா. இன்னும் தாத்தா வரல’ என்று பொடிசுகள் சத்தம் போடவே,

‘இதோ வந்துட்டேன்’ என்று கனத்த குரலில் ஒருவர் சூடான டீ கப்பை கைகளில் ஏந்தியவாறு பேருந்திற்குள் நுழைந்தார். வெள்ளை வேட்டி, லேசான காபித்தூள் நிறச்சட்டை, முறுக்கிய மீசை, பஞ்சுமிட்டாய் முடி என ஒரு சினிமா பட வில்லன் போல இருந்தார்.

‘சீக்கிரம் ஏறுங்கய்யா. வண்டி ஏற்கனவே லேட்’ என்று ஓட்டுநர் அவசரப்படுத்தவே,

‘பொறுங்கய்யா. இப்ப என்ன பஸ் முழுக்க எங்க குடும்பம் தான் இருக்கு. அது போக ரெண்டு மூனு பேர் தான். அப்புறம் ஏன் இப்படி பறக்குறீங்க?’ என்று சிரித்துக்கொண்டு இருக்கையில் அமர, அவரது குடும்பத்தினர் அனைவரும்,‘ஹைய்யா.டீ கீழ சிந்தாம எடுத்துக்கிட்டு வந்துட்டாங்க. சூப்பர்’ என்று பலமாக கைத்தட்டவே, ஓட்டுனரின் முகத்திலும் நடத்துனரின் முகத்திலும் லேசாக புன்னகை மலரத் தொடங்கியது.

‘வீரபாண்டியபட்டணத்துல நடக்கப்போற

பொருட்காட்சியை பாக்க போறோமே!‘ என்று நடத்துனரிடம் கூறிக்கொண்டு ஆறு முழு டிக்கெட்டும் அஞ்சு அரை டிக்கெட்டும் எடுத்தார்.

வண்டி பேருந்து நிலையத்தை விட்டு வெளியேற ஆயத்தமானபோது, திடீரென அந்த பெரியவர், ‘ஏ ஐயா வண்டிய ஒரு ரெண்டு நிமிஷம் ஓரங்கட்டுங்க. பெரிய டிவியில நம்ம தலைவர் பாட்டு ஓடுது’ என்று மீண்டும் கனத்த குரலில் கூறவே, நான் அவரை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தேன்.

‘ஏற்கனவே அஞ்சு நிமிஷம்...’ என ஓட்டுனர் சற்று தயங்கினார்.

‘இப்படி ஓடிக்கிட்டே இருந்து என்னத்த கண்டீங்க? பெரிய பெரிய சந்தோசம்தான் கெடைக்கணும்னு காத்துக் கொண்டிருந்தோம்னா வாழ்க்கையில எப்பவும் நிம்மதியே இருக்காது. இந்த மாதிரி சின்னச் சின்ன விஷயத்தையும் அனுபவிக்கக் கத்துக்கோங்க. ரெண்டு நிமிசத்துல ஒன்னும் ஆகாது. என்னம்மா நான் சொல்றது கரெக்ட் தான?’ என்று என்னை நோக்கி அந்த பெரியவர் திரும்பினார்.

நான் லேசாக புன்னகைத்து தலையசைத்தேன். ஓட்டுனரும் நடத்துனரும் அந்த குடும்பத்தினர் பகிர்ந்தளித்த வடை பஜ்ஜியை சாப்பிட்டுக் கொண்டே, அவர்களுடன் இணைந்து ‘அதோ அந்த பறவை போல வாழ வேண்டும்’ என்று பாடிக் கொண்டிருந்தனர்.

என் மனதிலும் நிம்மதியின் குரல் மெதுவாக ஒலிக்கத் தொடங்கியது.

**ஏ சாந்தி பிரபு**

தூத்துக்குடி

# தேனீ

நாளும் வேலை செய்திடும்
நல்ல உழைப்பாளி நீயன்றோ
வாழும் மனிதர் யாவருக்கும்
வல்ல தேனைத் தருகின்றாய்

உன்னைப் போல கூடுகட்ட
என்னால் என்றும் முடியாது
பூவில் அமர்ந்து தேனெடுக்கும்
புதுமை எனக்குத் தெரியாது

தேனீ எங்கள் நண்பராம்
தேவை அவையும் பூமிக்கு
ஒற்றுமை குணமாய் வாழ்கின்ற
உயர்ந்த தேனீயை வாழ்த்திடுவோம்.

**யோ.புரட்சி**



# தன்முனைக் கவிதைகள் (காதல் மயக்கம்)

1.
மழைத் துளி தொடுகிறதே
ஆசை கரைந்து ஓடுகிறதே
நினைவுகளில் மனம் மிதக்கின்றதே
கண்களில் உலகம் மறைகின்றதே

2.
நிழல்கள் இணைந்த பொழுது
நேரம் நின்று போனது
மனங்கள் இரண்டும் பேசியதற்கு
மழை மட்டுமே சாட்சி

3.
செவ்விதழ் சிரிப்பின் சிணுங்கலில்
நிமிடம் நகராமல் நின்றது/உன்னைக் கண்டது முதல்
என்னையே மறந்து போனேன்

4.
தென்றல் இசை பாட
 மனதில் குளிரூட்டியது முழுமதி
மௌனமாய் காதல் கதைகளை
இசைவாய் பேசிட வருவாயா?

பான்ஸ்லே.



**மாலதி சந்திரசேகரன்**

# ஹைக்கூ கவிதைகள்

உச்சிப் பகல்
குளிர்ந்த காற்றை அனுப்புகிறது
எங்கோ பெய்த மழை

கூடடையும் குருவி
சட்டெனக் கீழே விழும்
கௌவிய வைக்கோல்

குடிசை வீடு
தண்ணீர் பானைக்குள் அசைகிறது
லாந்தர் விளக்கின் ஒளி

கட்டப்பட்ட பசு
அடிக்கடி வயலுக்கு செல்கிறது
அதன் பார்வை

தியானத்தில் துறவி
கவனத்தைக் கலைக்கவே இல்லை
மடியில் ஏறிய பாம்பு

உடைந்த பாலம்
ஆற்றின் குறுக்கே விழுகிறது
வெளிச்சக் கோடு

ஆடும் ஊஞ்சல்
அக்கரையைத் தொட்டு வரும்
நிற்பவர் பார்வை

புதிதாய் புத்தர் சிலை
தெளிவாகத் தெரிந்து விடுகிறது
நில ஆக்கிரமிப்பு

மக்கள் குடியிருப்பு
காலைத் தொட்டு இழுக்கும்
தொட்டாற் சிணுங்கி

மேகமில்லா நீலவானம்
இடையிடை அழகு சேர்க்கும்
செடியில் வெடித்த பருத்தி

**வஃபீரா வஃபி**

# மதில்கொஞ்சும் மரகதல்யாழே

இளமை மது
 சுந்தரம் சூழே
இரு விழிகள்
 மந்திரக் கோலே

மதி கொஞ்சும்
 மரகத யாழே
மடைத் திறந்த
 மனதின் தாழே

இளம் மயிலாள்
 இந்திரன் வேலே
ஒளி மிளிரும்
 நிலவின் பாலே

மணம் பரப்பும்
 சந்தனக் காடே
எனது மொத்த
 கவிதைகள் ஏடே

கருணை வரைந்த
 காதல் தீவே
கடவுள் படைத்த
 அழகியப் பூவே

**லீ. லியாகத் அலி.**



# துளி துளியாய் துளிப்பா

*காய்ந்த மரம்*
*கொஞ்சம் துளிர்க்கிறது*
*கவிதை*

*கவிதை நூல்*
*அவையில் அரங்கேறியது*
*நிதிநிலை அறிக்கை*

*ஆண்டுவிழா கவியரங்கம்*
*நிகழ்ந்து கொண்டிருக்கிறது*
*லாவணி அரசியல்*

*மூன்றடிகளில்*
*முடிந்து விடுகிறது*
*செய்தி*

**செ. இலட்சுமணக்குமார்**
ஈரோடு

சம்பாஷனை வெண்பா

# யார்க்கும் அறிவுரை இங்கெதற்கு



ஏடி
.
ஒன்றிரண்டு நாளாவே
உங்கள காணலையே
என்னதான் ஆயிடுச்சி
ஏதேதோ - எண்ணிட்டேன்
எங்கிட்டக் கூட
எதையுமே சொல்லாம
எங்குதான் போனீர்
இயம்பு?
.
அமின்
.
ஒண்ணுமே இல்லைங்க
உங்களிடஞ் சொல்லாம
நண்பனோட வீட்டுக்கு
நான்போனேன் - ரெண்டுநாளா
அங்கவொரு கஸ்டம்
அதைத்தீர்த்து வைக்கத்தான்
இங்கிருந்து போய்வந்தேன்
யான்.
.
ஏடி
.
அப்படி என்ன
அவருக்கு இடர்பாடோ
செப்புங்கள் ஐயா
சிலவற்றை - எப்படியோ
என்னால் முடிந்தவொரு
யோசனையைச் சொல்கிறேன்
நண்பர் பயன்பெறுவார்
நம்பு.

அமின்
.
பெண்ணிரண்டும் ஆணிரண்டும்
பெற்றெடுத்து நண்பரவர்க்
கண்ணிரண் டாய்வளர்த்துக்
காப்பாற்றி - நன்றாக
யாண்டும் மகிழ
இனியவரன் தேடினால்
வேண்டாமென் றார்களாம்
வெந்து.
.
ஏடி
.
எங்கவீட்டில் கூட
இதுபோல இரண்டுபேர்
அங்குபோல்கல் யாணமே
ஆகவில்லை - எங்குபோய்ப்
பார்த்தாலும் இந்தப்
பரிதாபம் தானையா
ஆர்த்தென்ன சொல்வேன்
அதற்கு?
.
அமின்
.
ஏணிப் படியாய்
இணையராய் வாழாமல்
ஏனிப் படிசெய்தே
ஏய்க்கின்றார் - காணின்
மனமெல்லாம் புண்ணாய்
மழுங்கியது எந்தன்
இனமெல்லாம் என்னாகும்
என்று

.

ஏடி

.

உண்மையைச் சொன்னீர்கள்
ஒவ்வோர் குடும்பமும்
எண்ணம்போல் வாழ
இயலாமல் - பெண்பிளையும்
ஆண்பிளையும் இங்கே
அவரவர் இட்டத்தில்
ஏன்செல்கின் றாரோ
இயம்பு?

.

அமின்

.

வேண்டாம் எனவும்
வெறுக்கும் அளவுக்கும்
ஆண்டாண்டாய்ச் சொல்லி
அழிகின்றார் - காண்பவர்கள்
எல்லாரும் கேட்பதெல்லாம்
ஏனாம் மணம்முடிக்க
வில்லையென்ப தன்றோ
வினை.

.

ஏடி

.

இப்படியே வாழ்வை
இணையன்றி மாற்றினால்
எப்படி வையம்
இனிவளரும் - முப்போதும்
தன்னந் தனியாய்த்
தவிப்பில் இருப்பதெல்லாம்
என்னவென்று சொல்வதோ
இங்கு...?

.

அமின்

.

ஆனாலும் கொஞ்சம்
அதில்நியாயம் உள்ளதென
நானாக எண்ணுகிறேன்
நண்பனே - தேனாக
இந்த இளமையில்
எல்லா சுமைகளையும்
வந்தாலும் இன்லன்றோ
வாழ்வு.

.

ஏடி

.

என்னாய்யா நீங்களே
இப்படில்லாம் பேசுறீங்க
இன்ன வயதில்
இவையெல்லாம் - கொண்டாடி
நன்றாக வாழ்தல்
நலமா; இணையற்ற
துன்பம் நலமாசொல்
துய்த்து.

.


அமின்

.

நல்லதொரு வேலை
நகங்கடிக்காச் சம்பளம்
இல்லம் முழுமைபெற
ஏற்றயிவை - இல்லாமல்
செய்யும் திருமணம்
சீர்பெறுமா என்றுணர்ந்தே
தொய்கின்றார் நெஞ்சம்
துவண்டு.

.





.
ஏடி
.
உண்மைதான் என்றாலும்
உள்ள இளமையெல்லாம்
கண்ணிமைக்கும் நேரம்
கடந்துவிட்டால் - மண்ணுலகில்
பெண்ணுக்காண் கிட்டுவதும்
பெண்தேடிக் கட்டுவதும்
கண்டகனா போலாகும்
காண்.
.
அமின்
.
தேதி குறித்துத்
திருமணத்தைச் செய்தாலும்
நீதிமன்றம் செல்வோர்
நிறைந்துள்ளார் - பாதிபேரின்
எல்லாரின் வாழ்க்கையும்
இப்படியே பாழடைந்தால்
தொல்லைதான் நாளும்
தொடர்ந்து.

.
ஏடி
.
உண்மையென் றாலும்
உலகத்தார் பேச்செல்லாம்
புண்படுத்தி நெஞ்சம்
புழுங்கவைக்கும் - மண்ணுலகில்
எந்தப் பருவத்தில்
என்னென்ன உள்ளனவோ
அந்தப் பருவம்
அழகு.
.
அமின்
.
ஒற்றைவரு மானத்தில்
ஓரா யிரம்செலவைக்
கற்றறையாய்ச் செய்தல்
கடினமன்றோ - இற்றை
நிலையில் இளைஞர்
நிதானமாக எண்ணி
வலையில் விழாதுள்ளார்
வந்து

.
ஏடி
.
அப்படித் தானே
அனைத்துக் குடும்பமும்
இப்போதும் இங்கே
இருக்கிறது - தப்பென
இப்போது சொன்னால்
என்னாகும்; அக்குடும்பம்
எப்படி உண்ணும்
இயம்பு?.
.
அமின்
.
அவரவர் வாழ்வை
அவரவர் தேற்றி
அவரவர் வாழ்தல்
அழகே - அவரின்றி
இன்னொருவர் கையை
எதிர்பார்த்து வாழ்வதெல்லாம்
என்னென்று சொல்வேன்
இதை?

.
ஏடி
.
எண்ணிநாம் பார்த்தால்
இதுவும் நிதர்சனம்தான்
என்னறாலும் எங்கோ
இடிக்கிறதே - உண்மையை
நானுணர இன்னுமே
நாளாகும் ஐயாஉடன்
தேனுரையைக் கேட்டேன்
தெளிந்து.
.
அமின்
.
ஆர்க்குமறி வோடே
அனைவரும் உள்ளதனால்
யார்க்கும் அறிவுரை
இங்கெதற்கு - பார்ப்பதை
நுண்ணியநல் நோக்குடன்
நோக்கினால் இவ்வுலகில்
எண்ணியவை எல்லாமும்
இன்பு.





# உளி பேசும் மொழி



**நெல்லை க. சோமசுந்தரி**

கவிஞர். எழுத்தாளர் தொல்லியல் ஆர்வலர்

சென்னை, தமிழ்நாடு


## 32

ஆதி அந்தமற்று ஜோதி வடிவினில் எழுந்தருளியுள்ள அண்ணாமலையாரின் ஆலயமானது, கலைக்கூடங்களின் பொக்கிஷம் என்றால் மிகையாகாது. கலைகளில் முதன்மையானதும், அனைத்துக் கலைகளுக்கும் முன்னோடியுமான ஓவியக் கலையானது பல்வேறு காலகட்டங்களில், பல பரிமாணங்களைக் கடந்து இன்று வரை அதன் தனித்தன்மையுடன் சிறப்புற்று விளங்குகிறது. பழங்காலத்திலேயே தொன்மையான நம் பூர்வீக குடிகள் தாங்கள் வசித்த குகைகளிலும், பாறைகளிலும் மனதில் நினைக்கின்ற எண்ணங்களையும், உணர்வுகளையும், பிற மனிதர்களுக்கு வெளிப்படுத்தச் சித்திரங்களாகத் தீட்டி மகிழ்ந்தனர் என தொல்லியல் ஆய்வு கூறுகிறது. அவ்வளவு சிறப்பு வாய்ந்த ஓவியக்கலையின் உதவியுடன் பல நூற்றாண்டுகளுக்கு முன் நம் அண்ணாமலையாரின் ஆலயத்தின் திருக்கல்யாண மண்டபத்தின் சுற்றுச் சுவர்கள் மற்றும் மேற்கூரையின் அடித்தளமான விதானத்தில் பல்வேறு வகையான வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இங்குள்ள ஓவியங்களில் ஆலய விதானங்களையே ஒரு ரத்தின கம்பளமாக்கி, அதில் செடிகள், கொடிகள், பூக்கள் யாவற்றையும் வண்ண மயமான சித்திரத்தில் வரைந்து ஓவியர்கள் படர விட்டுள்ளனர். அதில் கருப்பு வண்ணம் கொண்டு சித்திரத்தை வரைந்து அதனுள் பிற வண்ணங்களை ஏற்றுவதே



ஓவியக்கலைஞர்களின் அக்காலப்பாணியாக, இவர்களின் வண்ணச் சேர்க்கையில் கருமை பளிச்சிடும் நிறமானது முதன்மையாக உள்ளது. அவ்வோவியங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான கருத்தைப் பிரதிபலிப்பதாகவும் அமைந்துள்ளது.

அவற்றில், இரண்டு வில் வீரர்கள் அன்னப்பறவை மற்றும் கிளியின் மீது அமர்ந்து ஒருவர்க்கொருவர் போரிடுவதைப் போல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. செவ்வக வடிவில் வரையப்பட்டுள்ள இவ்வோவியத்தினைச் சுற்றிலும் பூ மற்றும் இலைகளுடன் கூடிய கொடி ஒன்று அவ்வோவியத்தினைச் சுற்றி அரண்களாக வரையப்பட்டுள்ளது. அதில் பல வண்ணங்கள் பயன்படுத்தப்பட்டு ஒவ்வொரு பொருள்கள், உயிருள்ள மனிதர்கள் மற்றும் பறவைகளின் மிகச் சிறிய பாகமும், தனித்தன்மையுடன் வெளிப்படும்படி இதில் தீட்டப்பட்டுள்ளது. அவ்வீரர்களின் தலையில் கிரீடங்கள் பொருத்தப்பட்டதிலிருந்து



அவர்கள் இருவரும் அரச மரபினைச் சார்ந்தவர்களாகக் கருதலாம். ஒவ்வொருவரின் கிரீடம் மற்றும் அவர்கள் அணிந்திருக்கும் உடைகளின் வடிவமைப்பு வேறுபடுத்திக் காட்டப்பட்டிருப்பதால் அவர்கள் வேறு வேறு அரச குலத்தைச் சார்ந்தவர்களாகவோ அல்லது வேற்று நாட்டு அரசர்களாகவோ இருப்பார்கள் என்பதனை நம்மால் அறிய முடிகிறது. அவ்வாறாகவே பறவைகளின் நுண்ணிய பாகங்களான கால் விரல்களின் நகங்கள் கூட மிகத் துல்லியமாகவும், நுட்பமாகவும் வேறு வேறு வண்ணங்களைக் கொண்டு தீட்டப்பட்டுள்ளது. அவ்வழியே, மற்றொரு ஓவியத்தில் சிங்கம் ஒன்று யானையுடன் சண்டையிடுவது போன்று தீட்டப்பட்டுள்ளது. இந்த ஓவியத்தில் சிங்கத்தின் முகத்தில் கொப்பளிக்கும் கோபமும், யானை தன் துதிக்கைக் கொண்டு, சிங்கத்தின் கால்களை இழுத்து அதன் சினத்தினை வெளிப்படுத்தும் படியும் மிகத் தெளிவாக அதன் உணர்வுகள் ஓவியத்தில் வெளிக்கொணரப்பட்டுள்ளது. பாகங்கள் எவ்வாறு இருக்குமோ, அவ்வாறே அதனைத் தத்ரூபமாக, இன்றைய நவீன புகைப்படக் கருவியின் துணை கொண்டு உண்மைக் காட்சிகளை எடுக்கப்பட்ட படம் போல மிக நேர்த்தியாக இந்த ஓவியமானது தீட்டப்பட்டுள்ளது.

மேலும் அதனை ஒட்டி நட்ட நடுவில் சக்கரம் போன்ற வட்ட வடிவமான அமைப்பில் சிறிய, சற்று பெரிய வெவ்வேறு அளவுகளைக் கொண்டு சுற்றிலும் படிக் கட்டுகள் போன்ற வடிவமைப்பில் வரையப் பட்டுள்ளது. இவ்வோவியத்தில் இரு பரிமாணத்தில் வரையப்பட்டிருப்பினும், அதனை உற்று நோக்கும் போது முப் பரிமாணத்தில் காட்சியளிக்கிறது. இவ் வோவியமானது மேல் விதானத்தில் வரையப்பட்டுள்ளதால், அக்காட்சியானது வட்ட வடிவ கிணறு ஒன்று மேல் நோக்கி நிலையில் அமைக்கப்பட்டதைப் போன்று காட்சியளிப்பது மட்டுமன்றி பார்க்கும் நம் கண்களுக்கு அது வியப்பாக உள்ளது. இந்த ஓவியங்கள் மேற்கூரையின் அடித்தளமான கோயில் விதானத்தில் வரையப்பட்டுள்ளது. அதாவது மண்டபத்தின் மேல் தளத்தில் வரையப் பட்டுள்ளது. மூன்று வெவ்வேறு சூழல்களை வெளிப்படுத்தும் ஓவியங்களுக்கு, இது மேலும் சிறப்பு சேர்க்கிறது. ஓவியங்கள் சுவர்களில் வரைவதே கடினமான ஒன்றாக இருக்கும் போது, அதிலும், மேற்புறச்சுவரில் வரைவதென்பது மிகவும் கடினமானது. மேலும், அவ்வோவியங்கள் அனைத்தும் மிகப்பெரிய நுட்பத்துடனும், பலமெனக்கடல்களுடன் முழு அர்ப்பணிப்புடனும் வரையப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தும் விதமாக இன்றும்



அவ்விரண்டு விலங்குகளின் உடல் மொழியும் இரண்டும் ஒன்றுக்கொன்று போரிடுவதைப் போன்று வெளிப்படுகிறது. அதனையடுத்து புலி ஒன்று தான் வேட்டையாடிய மானினை உண்பது போன்ற காட்சியில், மானின் உடல் விரைத்து இறந்து போன, உயிரினத்தின்



அவ்வோவியங்கள் சாட்சியாகிறது என்றால் அது மிகையன்று. அக்காலத்தில் எவ்வித மூலிகைச் சாறுக் கொண்டு இவ்வோவியங்களைத் தீட்டினார்கள் என்பது பல இடங்களில் அறியப் படாத ஒன்றாகவே இன்றளவும் நம் முன்னே அழகாகப் பிரதிபலிக்கிறது. மேலும்,வெண் சுதையின் மீது தீட்டப் பட்டுள்ள ஓவியங்கள் பல ஓவியக் கலைஞர்களின் திறமையையும் அவர்களின் உயர்ந்த கலைத் தரத்தையும் உணர்த்துகின்றதாகவே உள்ளன.

மற்றொரு ஓவியத்தில் அன்னப் பறவைகள் இரண்டும் அருகருகே எதிரெதிராக நின்று கொண்டு தனது தோகை இறகுகளை விரித்துக்கொண்டு அவையிரண்டும் அன்னியோன்னியமாக பேசுதல் போன்று தீட்டப்பட்டுள்ளது. அதனைச் சுற்றி பூ இலைகளைக் கொண்ட படர்ந்த கொடியானது இரு பறவைகளும் தனது வாயினில் கவ்விக் கொண்டிருப்பது போன்றும் வடிவமைக்கப்பட்டுள்ளது. அப்பறவைகள் பூ மற்றும் இலைகள் மற்றுமின்றி ஒவ்வொரு பாகத்திற்கும் மிகப் பொருத்தமான வண்ணங்களைத் தீட்டி ஓவியத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு காட்சியையும் தனித்துவப் படுத்தப்பட்டுள்ளது. மேலும் திருவண்ணாமலைக் கோயிலில் யானை கட்டும் மண்டபத்தில் சிவபெருமான் உமையாளை மணந்த வரலாறும் பாற்கடல் கடையும் காட்சியும் வண்ண ஓவியமாக உள்ளன. இது போன்ற ஓவியங்கள் அக்காலத்தில் தமிழகத்தை ஆண்ட சோழ பாண்டிய மன்னர்களின் கால ஓவியங்களாக இன்றும் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறது. எல்லாக் காலத்து ஓவியங்களும் அக்கால மக்களின் ஆடை, ஆபரணங்கள், பழக்க வழக்கங்கள், தொழில்கள், சமூக மரபுகள், சமய மரபுகள், அரசியல் நிகழ்வுகள் ஆகியவற்றைத் தெரிவிக்கும் காலக் கண்ணாடியாக விளங்குகின்றன.

இதுபோன்ற கண்கவர் ஓவியங்கள் அண்ணாமலையாரின் ஆலயத்தில் மட்டுமின்றி அதனைச் சுற்றியுள்ள மற்ற பகுதிகளிலும், பல கலைகளின் பல்வேறு வடிவத்தில் கைவினைக் கலைகளாகவும், சிற்பக் கலைகளாகவும் மிகச் சிறப்புற்று இன்றும் விளங்குகிறது. அவ்வழியே இவ்வகைக் கலைகளின் மற்றுமொரு பரிமாணத்தைக் காண உளியின் மொழியோடு தொடர்ந்து பயணியுங்கள்.

*(உளிபேசும் மொழி தொடரும்)*

# அறிவாற்றல் நூல்தானடி!



பெரிதென்றே மலரினைப் பாரடி – அதில்
பேரின்பம் மணம்தானடி
பெரிதென்றே நீபடிடி;
பெரியநீர்த் துறைநீ பாரடி – ஆழம்
பெரிதுணர்ந்து நீசெல்லடி
பேருயிர் காப்பாயடி!

அறிஞர்கள் வலிமை பாரடி – அவர்கள்
அறிவாற்றல் நூல்தானடி
அறிவிலாரில் வினாயேனடி?;
அறிவினிலே சிறியவர்ப் பாரடி – அவரை
அழித்திடும் சினமேனடி
அன்பினிலே நீஓங்கடி!

**வாழ்வியல் கவி சா.நாகூர் பிச்சை**
துபாய்

## பிறரைக் காயப்படுத்தி உன்னை நியாயப்படுத்தாதே

அறவழியே நில்லென ஆன்றோர் சொன்னாரே!
புறந்தள்ளிச் செல்லாதே புவிவாழ்வும் சிறிதே!
இறவாதப் புகழ்பெற்று ஈண்டிங்கு வாழவே
பிறரைக் காயப்படுத்தி உன்னை நியாயப்படுத்தா

மறவாதே இச்சொல்லை மாற்றிடு நின்செயலை!
உறவாக்கு உள்ளங்களை உடன்முடி நற்செயலை
ஆறாதப் புண்ணையும் ஆற்றிடும் கனிச்சொல்!
மாறாதப் பெருமைக்கு மறந்திடுநீ காய்ச்சொல்!



**கவிஞர் மாலதி இராமலிங்கம்,**
புதுச்சேரி.





# ஹாப்பி எண்டிங்

## (HAPPY ENDING)

டே பிரசாத் நீ எப்பவுமே நீ எழுதுற கதைக்கு ஹாப்பி எண்டிங் கொடுக்க மாட்டியா?

எப்ப பாரு ஒரே சோகமா தான் எழுதுற?

உன் கதையெல்லாம் நல்லா தான் இருக்கு ஆனா இருக்குற டென்ஷன்ல்ல உன் கதையெல்லாம் படிச்சா ரொம்ப மூட் ஆஃப் ஆவுதுடா

இங்க பாரு சௌமியா வாழ்க்கை ஒண்ணும் சினிமா இல்லை ஹாப்பி எண்டிங் கொடுப்பதற்கு. நிஜ வாழ்க்கையில் வாழுற நாமெல்லாம் கதாநாயகன், கதாநாயகி இல்லை ஜெயித்து மட்டும் கொண்டிருப்பதற்கு. இங்க இன்பமும், துன்பமும் கலந்து தான் இருக்கு சில நேரங்களில் சில பேருக்கு துன்பம் மட்டுமே நிகழ்வதற்கும் வாய்ப்புண்டு. ஒரு படைப்பு நிஜமா உண்மைக்கு பக்கத்துல இருக்கணும்னு நினைக்குறேன்.

இது தப்பா?

அய்ய அய்யயே கொஞ்சம் ரிலாக்ஸ்ஸா படிக்கிற மாதிரி கதை எழுதுடான்னு சொன்னா ஓவரா பிலாஸபி பேசுறியே, உனக்கென்ன மனசுல டைரக்டர் பாலான்னு நினைப்பா?

உன் சௌமியா சொல்றேன் எனக்காக ஹாப்பி எண்டிங் வர்ற மாதிரி கதை எழுதுவியா? மாட்டேயா?

ஓகே கூல் சௌமியா உனக்காக எழுதுறேன்னு சொன்னான் பிரசாத்

சின்ன வயசுல இருந்து பழகுற தோழி அது மட்டுமில்லாம சௌமியான்னா அவனுக்கு ரொம்ப உசுரு

இதுவரைக்கும் மனசுல உள்ள காதல்ல சொன்னதே இல்லை. தன் காதல்ல மனசுல வச்சுக்கிட்டு ஒரு கதை எழுதுனான். வாழ்வில் முதன் முதலாக ஹாப்பி எண்டிங் வைத்து கதை எழுதுவது இதுதான் முதல்முறை.

தன் சொல்லாத பொல்லாத காதலை சொல்வதற்காக கோயிலுக்கு அவளை கூப்பிட்டு இருந்தான் .

டே பிரசாத் நானே உன்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் சர்பிரைஸா சொல்லணும்னு நினைச்சேன் ஆனா அதுக்குள்ள நீயே கூப்பிட்டுடே?

சொல்லுடா என்ன விஷயம் ?

நீயும் ஏதோ முக்கியமான விஷயம் சொல்லணும்னு சொல்றே லேடீஸ் பர்ஸ்ட் நீயே சொல்லு?

வீட்ல நிச்சயதார்த்தம் பண்ணிட்டாங்க டா, வர்ற ஆடி கழிச்சு கல்யாணம் தான் . மாப்பிள்ளை அஜித் மாதிரி இருக்கிறார்டா எனக்கும் ரொம்ப பிடிச்சு போச்சு என்றாள்.

அவன் கண்களில் வர இருந்த கண்ணீரை வர விடாமல் அடக்கி கொண்டான். சௌமியா கோயில் பிரகாரத்தை சுற்றி வரும் வேளையில் தான் எழுதிய சிறுகதையின் ஹாப்பி எண்டிங் கிளைமாக்ஸை மூலையில் தூக்கி எறிந்தான். அப்போது கோயில் நந்தி இவனை பார்த்து புன்னகைத்தது.

**நௌஷாத் கான்.லி - அபுதாபி**

# அம்மா என்றால் அம்மா தான்

பள்ளிசெல்லத் தயாராகும் என்னைப் பார்த்துப்
பார்த்துப்போ இருபக்க சாலை தன்னை
துள்ளிநீயும் தெருநடுவில் ஓடி டாதே
துரத்திவரும் வண்டிமோதும் என்பார் பாட்டி !
பள்ளியிலே யாரிடமும் சண்டை போட்டும்
பக்கத்தில் இருப்போனைச் சீண்டிப் பார்த்தும்
தள்ளுமுள்ளு செய்துவிளை யாடிக் கொண்டும்
தறுதலையாய் ஆயிடாதே என்பார் தாத்தா !

புத்தகத்தைப் பேனாவைத் தொலைத்தி டாமல்
புதுப்பேனா தனைப்பார்த்துத் திருடி டாமல்
வித்தையினிக் காட்டுகின்ற குரங்கா காமல்
வினையமுடன் நடந்திடுவாய் என்பார் அண்ணன் !
புத்தியோடு விளையாடி மைதா னத்துப்
புழுதியிலே சட்டையினை அழுக்காக் காமல்
பத்திரமாய் வரவேண்டும் என்றே அக்கா
பாடத்தை எடுத்திடுவாள் அருகில் வந்தே !

எல்லோரும் எதைஎதையோ சொல்லு வார்கள்
எப்படிநான் நடக்கவேண்டும் என்று ரைப்பர்
வல்லவனாய் ஆவதற்குப் படிக்க வேண்டும்
வயதிதுதான் போனாலோ வாரா தென்பர் !
எல்லோரைப் போலன்றி அம்மா மட்டும்
எடுத்துவைத்த சாப்பாட்டை மிச்ச மின்றி
நல்லபடி நீஉண்ண வேண்டு மென்று
நயமாகச் சொல்லிடுவார் முத்த மிட்டே !



**பாவலர் கருமலைத்தமிழாழன்**

# சிறகுகள் சிறைபடுவதில்லை

எழுத்தாக்கம்:

**குயில்.மு.இரசியா பேகம்** தஞ்சை

புவனாவின் உடலை தர போலீஸ் மறுப்பதாகவும், அவளது கணவன் வந்து கையெழுத்து போட வேண்டுமென செல்வதாகவும் ,தங்கராசு இருக்கும்மிடம் கண்டுபிடிக்க முடியவில்லை என்று சொல்லி காமாட்சி அழுதாள்.

கயலின் அப்பா சமாதானம் சொல்லி தான் பேசுவதாக சொல்லி அனுப்புகிறார்..

இந்த விசயத்தை செவி மடுத்த இந்து இளங்கோவிடம் சொல்ல,இளங்கோ மூலமாக சந்திரனுக்கு செய்தி போகிறது...

சந்திரன் ஊருக்கு வந்து எல்லா பேப்பர் வேலைகளையும் தானே முன்னின்று முடித்தான். உடலை வாங்கி காமாட்சி இடம் ஒப்படைத்துவிட்டு மீண்டும் சென்னை திரும்பினார்.

செல்லத்தை சந்தித்த இந்து இளங்கோ , சந்திரன் சந்திப்பையும்,கோபாலின் கோல்மால் வேலைகளையும் எடுத்துரைத்தாள்.

உங்கள் வீட்டில் நடப்பதெல்லாம் செய்வினை சுண்டக்காய் ஏதுமில்லை, இது ஆசாமிகள் செய்யும் அட்டூழியம் என்றாள்.


குயில்.மு.இரசியா பேகம்

பூசாரிகளை நம்ப வேண்டாம், விலைக்கு

வாங்கப்பட்டுள்ளனர் என்பதையும் சொன்னாள்.

விசயம் அறிந்த சேகர் அரண்மனை தோட்டத்து பொறுப்புகளை அபிராமியிடமே திருப்பித் தந்து விட்டார்.

அவர்வீட்டில் மீண்டும் அமைதி திரும்பியது.

# 16. பாஸ்கரன் (சந்திரன் அப்பா)

பாஸ்கருக்கு இதெல்லாம் ஏன் நடக்குது என்று எதற்கு நடக்குது என்றும் தெரியவில்லை.

ஆருயிர் மச்சான் ஆகாமல் போனார் .அன்பு மனைவி பாராமுகமாக.,ஒரே வீட்டில் இரண்டு துருவங்களாக இருந்தனர்..

என்ன இது

வாழ்க்கை! விரக்தி வியாபிக்க, வியாகூலத்தில் மனப் போராட்டம் மிக அதிகமானது.

சந்திரனை நினைத்து மிகவும் கவலைக்கொண்டார்.அவனது வாழ்க்கையை நேர்படுத்த வேண்டும் என்று நினைத்தார்.

ஆச்சு இந்தவருடம் சட்டப்படிப்பு முடியுது.எனது வீட்டில் இரண்டு வக்கீல்கள் நினைக்கும் போது இனந்தெரியாத சந்தோசம் பொங்குகிறது.இதுதான் அவர் வாழ்க்கையின் ஒரே நிறைவு.

சரி சந்திரனை மேற்படிப்புக்கு

இலண்டன் அனுப்பி பாரிஸ்ட்டர் பட்டம் படிக்க வைத்து பெரிய இடத்தில் பெண்பார்த்து முடிக்க முடிவுசெய்தார்.

அதற்கு முன் மனயமைதிக்காக காசி ராமேஸ்வரம் போய் தனது பாவங்களை கழுவிவிட்டு வந்தால்,எல்லா மனக்குழப்பம் தீருமென்று நினைத்தார்.

ஆனால் மனிதன் ஒன்று நினைக்க தெய்வம் வேறொன்று நினைக்கிறது.....

# 17.கயல்

கயல் வாழ்வு உப்பு சப்பில்லாது உயிர்ப்பில்லாமல் கழிந்தது.மொத்தக் குடும்பமும் எதிர்த்த வீட்டினரை ஜன்ம எதிரிகளாக நினைக்க ஆரம்பித்து விட்டனர். கயலுக்கும் அவர்கள் மீது கோபம்தான் ஆனால் ஏதோ ஒன்று அவளை வாய்த்திறக்க விடவில்லை.

கண்ணீர் வழிந்தோடியது இதயத்தை ஏதோ கசக்கிப் பிழிந்தது.

மனம் பழைய நாட்களை நாடி ஓடியது...

ஒருநாள் சிறுவர்கள் பட்டாளம் சேர்ந்து ஆட்டம் ஆட்டம் அப்படியொரு ஆட்டம்.

எதிர்த்த வீட்டு கொள்ளையில் மலைப்போல் குவிந்திருந்த வைக்கோல் போரில் எல்லோரும் ஏற,ஆக சின்னவளான கயல் மிகுந்த சிரமத்தில் தான் ஏறினாள்.

ஏறி அமர்ந்து அப்படியே படுத்துவிட்டாள். ஏதோ ஒரு விசம சிறுவன் கோவில் மணிக்கேட்க..

'அய்யோ பேயி' என்று அலறிக் கொண்டு குதித்து ஓட கயலால் பயத்தில் இறங்க முடியவில்லை. அழுகையின் ஊடே நடுங்கலானாள்..

ஓடிக் கொண்டிருந்த சந்திரன் திரும்பி வந்து நிமிடத்தில் ஏறி கைப்பிடித்து மெதுவாய் இறக்கி வீட்டில் விட்டுப் போனான்.

பின்னால் உடம்பெல்லாம் அரிக்க அம்மாவிடம் அடிவாங்கி அழுது குளித்து தூங்கினாள்.

எதை நினைப்பது எதை விடுவது என்றும் தெரியாமல் அவள் கதை தொடர்ந்தது.....

## சந்திரன்

இது தான் சட்டக் கல்லூரியில் கடைசி வருடம் .அடுத்த மாதம் பரிட்சை . அப்பாவின் கணக்குப்பிள்ளை மதராஸ் வந்திருந்தார்.

'தம்பி !அப்பா புனித யாத்திரைக்கு கிளம்புகிறார். அம்மாவுக்கு உடம்பு சரியில்லை.உன்னை பார்க்க விரும்புகிறார்'.

அதைக் கேட்ட சந்திரனுக்கு இருக்க முடியவில்லை.முக்கிய வகுப்பை எல்லாம் விடுத்து ஓடிவந்தார் இராசேந்திரம்.

அம்மா ஓயாமல் சந்திரனின் திருமணத்தை பற்றித்தான் பேசினார்.சந்திரன் பதில் சொல்ல விரும்பவில்லை.

ஆற்றில் ஆடிப் பெருக்கு அக்கக்கோ குருவி கூவி தன் துணை அழைத்துக் கொண்டிருந்தது.

குயில் கூவிக் கொண்டிருந்தது...

அம்மா சாமி கும்பிட போயிருந்தார். நேரமாக சந்திரன் அம்மாவைத்தேடி வர எதிரில் எதேச்சையாகக் கயல்.

சந்திரனைப் கண்டதும் திரும்பிக் கொண்டு விருட்டென்று மறைந்துப் போனாள்.

சந்திரனுக்கு மிகுந்த அவமானம் ஏற்பட்டது.இதைக் கவனித்துக் கொண்டே வந்த அம்மா சொன்னாள்.'வேண்டாம் சந்திரா உனக்கு மிக பிரகாசமான எதிர்காலம் காத்திருக்கு,வேறுயிடம் பார்க்கிறேன் என்றார்'

அந்த கோபத்திலும் சந்திரனால் பதில் சொல்ல முடியவில்லை....

மதராஸ் திரும்பிவிட்டார் சந்திரன்.முக்கியமான பல வகுப்புகளை விட்டுவிட்டார்.என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தபோது.....

நளினா அவரிடம் வந்தாள் ,முக்கியமான நோட்ஸ்,புத்தக குறிப்புகள் எல்லாம் தந்து உதவினாள். அவளின் ஆங்கில அறிவு , தெளிவு ,கனிவு சந்திரனை தடுமாற வைத்தது உண்மை ஆனால் எதுவோ ஒன்று அவர் தடமாறாமல் தடைப்போட்டது.

இறுதி பரிட்சை முடித்து ஊர் திரும்ப உடைகளை எடுத்து வைத்துக் கொண்டிருந்தார் சந்திரன்.அப்போது அவரது நண்பர் பாலு

'என்ன சந்திரா ஒரு பட்சி ஒன்று உன்னை சுற்றுது'

'என்னப்பா உளறுகிறாய்'

'ஆமாம் காலேஜ் லன்ஜ் ஹாலில் உனக்காக நளினா காத்திருக்கிறாள்,போய்

பாரென்று' 'சொல்லிச் சென்றான்.

சந்திரன் கிளம்பிப் போனார்.

நளினி எப்போதும் காட்டன் ஆடைகளை மடிப்பு கலையாது அணிபவள்,அழகி,நல்ல நிறம்.

சந்திரனை ஏறிடும் பார்வையில் எதையோ உணர்ந்த சந்திரன்.அவள் பார்வையைத் தவிர்த்து,' வா காண்டீன் போவோம்'

வடையும் டீயும் சொல்லிவிட்டு அவளெதிரில் நிமிர்ந்து அமர்ந்தார்.

' என்ன உனது எதிர்கால பிளான் என்றார்'

'வீட்டில் வரன் பார்க்கிறார்கள்.' என்றாள்.

'ஓ' என்றார் சந்திரன்.

'எனக்கு பத்திரிகை வைப்பாயல்லவா'

அடிப்பட்டதுப்போல நிமிர்ந்தவளிடம்..

'என்ன பதிலில்லை நளினா?'

'உங்கள் பிளான் என்ன வென்று கேட்க வேண்டுமல்லவா'

நளினி கண்களால் வினவ...

சந்திரன் ஆதிமுதல் எல்லாவற்றையும் சொன்னார்.

நளினா கேட்டுவிட்டு ஒரே வார்த்தைப் சொன்னாள்.

'பால் விவாக் இஸ் அ கிரைம்.'



'எஸ் அப்கோர்ஸ்'

'ஆனால் பெரியவங்க பண்ண வேலை. இப்போ அவர்களுக்குள் சண்டை.அவள் மனம் என்ன வென்று எனக்குத் தெரியவில்லை'.

'எங்க வீட்டில் வேறு பெண் பார்க்கும் முனைப்பில் இருக்கிறார்கள்'

' டு பி பிராங்'

'எங்களுக்குள் காதல் கத்தரிக்காய் எதுவுமில்லை,ஆனால் எது தடுக்குதுன்னு தெரியவில்லை'.

'சரியாக தெரிந்துக் கொண்டு அம்மாவை உங்கள் வீட்டுக்கு அனுப்புகிறேன்.'

' சரி ஹாப்பி ஹாலி டேஸ்' சொல்லி இருவரும் பிரிந்தனர்.

தொடரும்...



# சந்தேகம்

இந்த அறையை மாற்றி அடுத்த ஒரு அறையில் படுக்கையைப் போடவேண்டும். எனக்காக எனது பிள்ளைகள் இவ்வளவு பெரிய வீட்டை பல அறைகளுடன் கட்டித் தந்தும் இந்தச் சுத்தம் இல்லாத தூசிகள் படிந்த அறைக்குள் காலத்தை கடத்த வேண்டியுள்ளது. என்னைப் பார்த்துக் கொள்வதற்காக சிறிது நேரம் ஒருவன் வந்தாலும் அவனும் மேலோட்டமாகவே இந்த அறையைச் சுத்தம் செய்துவிட்டு அவசர அவசரமாக ஓடுகிறான். அவனும் தான் என்ன செய்வான் குடும்பம் குழந்தைகள் என்று இருப்பவன் எப்படியோ எங்கோ ஓடி உழைக்கத் தானே வேண்டும். நான் கொடுக்கும் இந்தச் சிறு துளி சம்பளத்திற்கு இதைவிட எப்படி எனக்காக நேரத்தை ஒதுக்குவான். ஆனாலும் எனக்காக பொருட்கள் வாங்கக் கொடுக்கும் பணத்தில் ஏதாவது கள்ளக் கணக்கெழுதி என்னை ஏமாற்றுகிறானோ என்ற சந்தேகம் எனக்குள் சில நாட்களாகவே எழுந்த வண்ணம் உள்ளது அதை எப்படியும் பிடிக்க வேண்டும். வரும் நேரமெல்லாம் நன்றாகப் பேசி சிறப்பாகவே எல்லாவற்றையும் செய்து முடிக்கிறான். இருந்தாலும் குடும்ப வறுமையில் கடைக்காரரின் கணக்கில் பொய் சொல்லி ஏதாவது எடுக்கும் சந்தர்ப்பமும் உண்டு அல்லவா.

இன்னும் எவ்வளவு காலம் தான் எனது வாழ்வும் தெரியவில்லை, வயதும் இறுதி நாட்களை நோக்கி வந்துவிட்டது. உடலும் நோய்களோடு வலிமையிழந்து கொண்டே போகிறது. அவள் இருக்கும் வரைக்கும் எல்லாப் பொறுப்புகளையும் தானே இழுத்துப்போட்டு என்னை ஒரு ராஜா மாதிரி வைத்திருந்தாள். நானும் அப்பப்போ சண்டைகள் போட்டுப் பிடிவாதமாக இருந்தாலும் அதனைப் பொருட்படுத்தாது சமாளித்து என்னை கடைசிவரைக்கும் சந்தோசமாகவே வைத்திருந்தாள். நானும் அவளுக்கு முந்தி நான் தானே போவேன் என்ற எண்ணத்தில் நிறையவே ஆடிவிட்டேன். ஆனாலும் என்ன? நிறையப் புண்ணியம் செய்த சீமாட்டி திடீரென்று யாருக்கும் பாரமின்றிப் போய்விட்டாள்.



அவளுக்கு இறுதிக் கடமைகள் செய்ய வந்த பிள்ளைகள் இங்கு இருக்கும்வரை எனக்கும் தனிமை பெரிதாகத் தெரியவில்லை. ஓரிரு வாரங்களில் அவர்களும் விடுமுறையை நீடிக்க முடியாதென்றும் பிள்ளைகளின் படிப்பு என்றும் போன பின்தான் வெறுமையாகிய வீட்டையும் தனிமையையும் உணர முடிந்தது. அதன் பின்னரான ஒரு மாத நிகழ்விலிருந்து இந்த நான்கைந்து வருடங்களாக இவன் தான் என்னுடன் கூடவிருந்து ஒரு தந்தையைப் பார்ப்பது போல என்னைக் கவனமாகப் பார்க்கிறான்.

நான் விவசாயம் செய்தே அதில் வரும் வருமானத்தில் என் பிள்ளைகள் மூவரையும் நகர்ப்புறப் பாடசாலைகளுக்கு அனுப்பிப் படிப்பித்தேன். இதற்காகவே எனது ஒரு பக்க வாழ்வை இழந்தேன். இருந்தாலும் அவர்கள் படிப்பில் உயர்நிலையை அடைந்து உயர் பதவிகளில் இருந்தபோது இனி எனக்கு எந்தக் குறையுமில்லை என எண்ணினேன். ஆனாலும் என்ன ஒருவர் பின் ஒருவராக எல்லோருமே இந்த வீட்டைத் தவிர எனது எல்லாக் காணிகளையும் விற்று வெளிநாடு போய்விட்டார்கள். இப்போ எனக்கு வசதிகளுக்கு எந்தக் குறையும் வைக்கவில்லை ஆனாலும் உரிமையோடு எனது தேவைகளைச் சொல்லவும், மனதின் ஆதங்கங்களைப் பகிர்ந்துகொள்ளவும் ஒருவரும் அருகிலில்லை என்பது வேதனையே. அம்மா இறந்து சில காலங்கள் அலைபேசியில் கதைத்ததும் இப்போ குறைந்து போய்விட்டது. அவர்களும் தான் என்ன செய்வது குடும்பம் குழந்தைகளென்று தங்கள் வாழ்வையும் பார்க்கவேண்டும் அல்லவா.

இவன்தான் நேற்றும் சில சாமான்களை கடையிலிருந்து வாங்கிவந்தான். கடைக்காரர் கையால் எழுதிக் கொடுக்கும் கணக்கை சமர்ப்பித்து மீதிப் பணத்தையும் தந்துவிட்டுப் போனான். கையால் எழுதுவதுதானே தானாகவே எழுதித் தருகிறானோ! எதற்கும் ஒருமுறை சோதனை செய்துதான் பார்க்கவேண்டும். இவன் களவு செய்வதாக அறிந்தால் இவனை நீக்கி வேறு யாரையாவது தேடிப் பிடிக்கவேண்டும். என்ற எண்ணம் மேலிட பக்கத்து வீட்டுப் பையனிடம் கடைக்காரரின் அலைபேசி இலக்கத்தைப் பெற்றுப் பேசினேன். கணக்கெல்லாமே சரியாகத்தான் இருந்தது. பால்மாவுக்கு மட்டும் தனது பணத்தைக் கொடுத்து என்னக்காக வாங்கித் தருகிறான் என்று கடைக்காரர் சொன்னார். ஒன்றுமே விளங்கவில்லை. வரவிட்டு அவனிடமே கேட்பதாக முடிவு செய்து காத்திருந்தேன்.

ஒருபக்கம் நிம்மதி நான் ஏமாற்றப்படவில்லை என்பதில், இன்னொரு பக்கம் நெருடல் ஏன் இவன் பால்மாவுக்காகத் தனது பணத்தைக் கொடுக்கிறான். சஞ்சலத்தில் இருக்க அவனே வந்துவிட்டான். அவனைக் கூப்பிட்டுப் பக்கத்தில் இருத்தி விளக்கத்தைக் கேட்டேன். எனது பெற்றோர் இப்போது உயிருடனில்லை. அதனால் உங்களை எனது தந்தையாக நினைத்து அதனை எனது செலவில் உங்களுக்காக வாங்கிவருகிறேன். இது எனது குடும்பத்திற்கும் தெரியும். உங்கள் தேவையை முழுமையாக என்னால் நிறைவேற்ற முடியாவிட்டாலும் மகன் என்ற உணர்வில் இதையாவது செய்ய அனுமதியுங்கள் என்றான்.

அவனைக் கட்டித் தழுவி கண்ணீர் விட்டேன். என் முன்னால் அவன் உயர்ந்த இடத்தில் இருந்தான். எனக்கு நீதான் மகனே கொள்ளிவை என்று சொல்லவேண்டும் போல் இருந்ததை உள்ளே விழுங்கிக் கொண்டு அறையைப் பார்க்கிறேன். ஏன் மாற்றவேண்டும். இதுவரையில் சுத்தமின்றியிருந்தது அறையல்ல! இப்போ அதுவும்... தெளிவுபெற்றேன்.



**அப்புத்துரை ஜெகன்**
**சுவிஸ்**




ரஸ்னா ரம்ஸான்
இலங்கை, அக்குறணை

# பிரிவின்றிய தூய அன்பின் நேசம்

ஐஸ்வர்யா வீடு

ராகினி 'அக்கா அதோ பாருங்க கார் ஒன்று நம்ம வீட்டு அருகில் வந்து இருக்கு. பிரியா, சாலினி, அருணாலாம் தான் வந்திருப்பாங்க போல! வாங்க போய் பார்க்கலாம்!'

ஐஸ்வர்யா 'சரி நீ போய் பாரு மா. நா செய்த டிஷ்ஷ எடுத்துனு வாரேன்.'

ராகினி ' சரி கா!'

ராகினி கார் நிறுத்தியிருக்கும் இடத்திற்கு வர முன்பே சாலினி காரிலிருந்து இறங்கி வீட்டு ஹோலிற்கு வந்தாள். அவளது முகத்தில் உற்சாகமும், கண்களில் ஐஸ்வர்யா ராகினியுடன் பயணிக்கும் ஆர்வமும் மின்னின.

சாலினி 'ஹாய் ராகினி! நீ இந்த ட்ரெஸ்ல ரொம்ப அழகா இருக்க!'

ராகினி 'தேங்க்ஸ். நீயும் ரொம்ப அழகா இருக்க!'

சாலினி 'ம்ம் சரி. ஐஸ்வர்யா கா எங்க?

இன்னும் ரெடியாகலயா அவங்க?'

ராகினி 'அக்கா ரெடிலாம் ஆகிட்டாங்க.

இன்னக்கி அந்த பார்ட்டிக்கி அக்காக்கும் ஒரு டிஷ் செய்ய சொல்லி இருக்காங்க. அக்கா அத எடுக்க போயிருக்காங்க.'

சாலினி 'வாவ்! ஐஸ்வர்யக்கா சமப்பாங்களா?'

ராகினி 'என்னோட அக்கா கை பக்குவம் ரொம்ப பெஸ்ட்!'

சாலினி 'வாவ்! அப்போ அவங்க செஃப்பா?'

ராகினி 'இ.. இல்ல, சேர்வன்ட்டா தான் வேர்க் பன்றாங்க. ஆனா நல்லா சமப்பாங்க.'

அப்போது வந்த ஐஸ்வர்யா காதில் இவர்களின் உரையாடல் விழ, தன் கையில் நேர்த்தியாக மூடி வைக்கப்பட்டிருந்த உணவுக் பெட்டியை ஒரு கணம் நிறுத்திப் பார்த்தாள். பின்

ஐஸ்வர்யா 'அப்டிலாம் இல்லமா. எங்களோட அம்மா நல்லா சமப்பாங்க. சோ, எனக்கும் அவங்க அளவு இல்லாட்டிம் ஓரளவு ஏலும்.'

சாலினி 'வாவ் அப்டியா! அவங்கள கண்டிப்பா ஒரு நாளக்கி மீட் பண்ணணும்!'

சாலினி இப்படி சொன்னதுமே ஐஸ்வர்யாவின் கண்களும் ராகினியின் கண்களும் ஒரே நேரத்தில் கலங்குகின்றன. உதடுகளைக் கடித்துக்கொண்டு அந்தக் கணம் வலி கடந்து போகக் காத்திருந்தனர்.

அதே நேரம், அவினாஷ் காரில் இருந்து அவசரமாய் அழைப்பதாகக் கையசைக்க, பிரியா சாலினி அருகில் வரவும் சரியாக இருந்தது.

பிரியா மெதுவாக சாலினி செவி அருகில், 'சாலு, அவங்க அப்பா அம்மா விபத்துல இறடந்துட்டாங்க' எனக்கூற, சாலினிக்கு தான் கேட்ட கேள்வியின் ஆழம் அப்போதுதான் உறைத்தது.

சாலினி' ஐயம் வெரி சோரி.'

ஐஸ்வர்யா தன் கண்ணீரை விரைந்து அடக்கியவாறே ஒரு மெல்லிய புன்னகையுடன், 'இட்ஸ் ஓகே மா,' என்றாள். அந்தப் புன்னகையில் வலியை மறைக்கும் பக்குவம் தெரிந்தது.

சாலினி அப்போது தான் ஐஸ்வர்யாவை கவணித்தாள். ஐஸ் ப்ளூ நிறப் பட்டுப் புடவையில், எளிமையான ஒரு சிறிய நகை ஜொலிக்க, பேரழகுடன் ஐஸ்வர்யா நின்றிருந்தாள். சூழ்நிலையை சரி செய்வதற்காக சாலினி விரைந்து பேசினாள்.

'அக்கா, நீங்க இந்த சாரில பிரின்ஸஸ் போல ரொம்ப அழகா இருக்கீங்க! நா இனி ஒங்கள பிரின்ஸஸ்ன்டே கூப்பிட்ரன்.'

ராகினி' என்னோட அக்கா எப்பவுமே பிரின்ஸஸ் தான்!'

சாலினி' சரி பிரின்ஸஸ், உங்களுக்கு எப்டி என்னோட அண்ணாவோட ஹோட்டல்ல நடக்குற வெடிங் பார்ட்டிக்கி சமக்கிற சான்ஸ் கிடச்சது?'

ஐஸ்வர்யா' அது எங்க ஹோட்டல் மேனஜர் மஹிரா அக்கானு ஒருத்தங்க இருக்காங்க. அவங்க மூலமா தான் கிடச்சசது.'

பிரியா ' சரி சரி வாங்க போலாம்! லேட் ஆவுது காய்ஸ்!'

ஐஸ்வர்யா, ராகினி, சாலினி, அருணா, பிரியா ஐந்து பேரும் அவினாஷின் காரில், ஐஸ்வர்யா செய்த உணவையும் எடுத்துக் கொண்டு அஷ்வினின் ஹோட்டலை நோக்கி பயணிக்கின்றனர்.

வெளிச்சமும் காற்றும் நிரம்பிய அந்தக் குளிர்சாதனக் காருக்குள், ஐந்து விதமான மனநிலைகளில் ஒவ்வொருவரும் இருந்தனர்.

அருணா மெல்லிய புன்னகையுடன் ஜன்னல் வழியே வெளியே வேடிக்கை

பார்த்துக் கொண்டே வருகிறாள். சாலையில் கடந்து செல்லும் மரங்களும், கட்டிடங்களும் அவள் கண்களுக்குள் புதிய அர்த்தங்களைத் தந்தன. தன்னிடம் எப்போதும் எரிந்து விழும் தன் அண்ணாக்கு தன் மேல் பாசம் இல்லையோ என்ற கேள்வி எழுந்தாலும், எப்படியோ பிரியா இந்த திருமண நிகழ்விற்கு செல்ல தன் அண்ணனை பேசியே சம்மதிக்க வைத்ததை நினைக்கையில் ஏதோ ஒரு தெளிவு அவளில் பிறந்ததுல்அது அண்ணன் மீதான எதிர்பாராத பாசமா? அல்லது பிரியாவின் சாமர்த்தியமா?

பிரியாவோ, கடிகாரத்தை அடிக்கடி பார்த்தவாறு, அவினாஷை அவசரப்படுத்திக் கொண்டே வருகிறாள். ஒரு கணம் கூட அமைதியில் அமையாத அவளது துள்ளலான குணம், மற்றவர்களின் மனநிலையை மெல்ல மாற்றியது.

பின்புறத்தில் அமர்ந்திருந்த ஐஸ்வர்யா, தன் பட்டுப்புடவையின் மென்மையை உணர்ந்தவாறே, தான் செல்லவிருக்கும் இடத்தை நினைத்துத் தயங்கினாள். அத்தயக்கம் ஏனென்று அவளுக்கே புரியவில்லை. இது ஒரு புதிய துவக்கமா? அல்லது, பழைய வலியின் நினைவை மீண்டும் ஆரம்பிக்கும் புது அத்தியாயமா ? கண்களை மூடி தன்னை சரிப்படுத்தி, இயல்பாயிருக்க முயற்சி செய்கிறாள்.

அவினாஷ், அமைதியாக கார் ஓட்டிக் கொண்டிருந்தான். வெளியில் அவன் அணுவும் அசையாத கருங்கல் சிலை போலிருந்தாலும், அவன் கவனம், கண்ணாடி பின்னால் தெரியும் சாலினியிடம் தான் இருந்தது.

சாலினிக்கோ, அவனது நிழல் போன்ற அமைதியைக் காண, அவன் மீது இனம் புரியாத, ஒருவித ஈர்ப்பு தோன்றியது. அந்த உணர்வை சமாளிக்க, ஜன்னலோரம் பார்வையைத் திருப்பிக்கொள்கிறாள். வெளியே விரையும் காட்சிகள், அவளது குழப்பமான மனதின் பிரதிபலிப்பாய் விரைந்து ஓடின.

கலகலப்பின்றி அனைவரும் அமைதியில் அமிழ்வதை கவனித்த பிரியா, அந்தக் கனத்த அமைதியை உடைக்கத் தன் பேச்சை தொடங்கினாள்.

‘ஐஸ்வர்யக்கா, நீங்களும் ஏதோ டிஷ் செய்திருக்கீங்களாமே? அது என்ன டிஷ்?‘ எனக் கேட்க, ஐஸ்வர்யா பதிலளிக்க முன் குறுக்கிட்ட ராகினி,

அது சப்ரைஸ்ஸா இருக்கட்டுமே!‘ எனக்கூற, அத்தோடு மாறி மாறி, ஒருவரை ஒருவர் கிண்டலடித்தும், சிரித்தும், கலகலப்பாக கதைத்துத் கொண்டே ஹோட்டலை நோக்கி பயணிக்கின்றனர். அமைதி கலைந்து, கார் முழுவதும் சிரிப்பொலி நிரம்பியது.

மெமரீஸ் ரெஸ்டூரன்ட் எனும் ஹோட்டல்! என்றும் தனியழகில் விளங்கும் அந்தப் பிரம்மாண்டமான கட்டிடம், இன்று பேரழகில் மிளிரியது.

ஹோட்டலின் பிரதான நுழைவாயில், செயற்கை வெள்ளை தாமரை மலர்களால் மிக அழகாகவும், நேர்த்தியாகவும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இரவின் கருமையில் அந்தத் தாமரைகள் வெண்பனித் துகள்களாய்த் தோற்றமளித்தன. அதன் இரு மருங்கிலும் அமைக்கப்பட்டிருந்த மிதமான ஒளியமைப்பு, அந்த நுழைவாயிலையே சொர்க்கத்தின் வாசல் போல் காட்டியது.

மண்டபத்தின் உள்புறம், வெள்ளி (Silver) நிறமும், ஐஸ் ப்ளூ (Ice blue) நிறமும் கொண்ட அலங்காரங்களினால் விண்ணுலகின் பிரதிபலிப்பாய் இருந்தது. கூரையிலிருந்து தொங்கிய ஸ்படிக சண்டிலியர்களின் ஒளியில், அந்த அலங்காரங்கள் மின்னின. அந்த கூரையிலிருந்து தொங்கும் அலங்காரங்கள்,

மெல்லிய காற்றிற்கு அசைந்து, நட்சத்திரங்கள் பூமிக்குக் குதிப்பது போல், ஒளியை ஆங்காங்கேச் சிதறவிட்டன. நாற்காலிகளில் பதிக்கப்பட்டிருந்த நீல நிறத் துணிகளும், மேஜை விளக்குகளின் அணைந்தும் பிரகாசித்தும் ஒளிரும் தன்மையும், திருமணத்தின் புதுமையையும், புனிதத்தையும் ஒருங்கே பிரதிபலித்தன.

மண்டபத்தின் உட்புறத்தில்...

அஷ்வின், நிகழ்வு சிறப்பாக அமைய வேண்டும் என்பதில் அதிக கவனம் செலுத்தினான். அவன் வெள்ளை நிற டிசர்ட்டும், கரு நீல நிற கோர்ட்டும் அணிந்து, கம்பீரத்துடன் மண்டபத்தில் நடமாடினான். அவனது ஒவ்வொரு அசைவிலும், ஒரு தலைமைப் பண்பு இருந்தது. கைகள் சட்டைப் பாக்கெட்டுகளுக்குள் இருந்தபோதும், கண்களில் கூர்மை குறையவில்லை.

திருமண நிகழ்வு ஆரம்பிக்க இன்னும் சில நிமிடங்களே இருந்தன. பெண் வீட்டார், மாப்பிள்ளை வீட்டார் வருகை தந்து கொண்டிருந்தனர். விருந்தினர்களை வரவேற்க, ஹோட்டலின் சேரவன்ட் அனைவரும், அணிந்து நேர்த்தியாக ஒரே நிற உடையில் கைகளை பின்னியவாறு, கனிவான புன்னகையுடன் வந்தவர்களை வரவேற்றுக் கொண்டிருந்தனர். மாப்பிள்ளையின் நெருங்கிய நண்பனான ரிஷாந்த், தனது நண்பர்களுடன் வந்து சேர்ந்து, சந்தோஷமான அரட்டையடித்துக் கொண்டிருந்தான்.

அஷ்வின், தன் ஹோட்டலின் மேலாளரும் நண்பனுமான கவினிடம்,

கவின், எல்லாமே சரியாக இருக்கிறதா? உணவு ஏற்பாடுகள் உட்பட எல்லாவற்றையும் சரிபார்த்துவிடு. நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் எல்லாம் பெஸ்ட்டா நடக்கனும்.ல்

கவின்‘ எல்லாம் ஓகே. மஹிரா சிஸ்டர் ஏற்பாடு பண்ணிண டிஷ் மட்டும் இன்னும் வரல்ல. அது ஒன் த வே ல இருக்காம். சோ ஓல் ஓகே!‘

அருகில் புதிதாக வேலைக்குச் சேர்ந்த தன் வகுப்புத் தோழியான ப்ரீத்தியிடம் திரும்பிய அஷ்வின், ல்ப்ரீத்தி, நீயும் கவினுக்கு உறுதுணையாக இரு. எந்தக் குறையும் இருக்கக் கூடாதுல் என்று கூறி, அனைத்தும் தயாராக இருக்கிறதா என மேலோட்டமாய்க் கவனிக்கச் சொன்னான். அவனது குரலில், சிறிதும் கண்டிப்பு இல்லை என்றாலும், பணியில் சறுக்கல் இருக்கக் கூடாது என்ற எதிர்பார்ப்பு அழுத்தமாய் இருந்தது. சில நிமிடங்களில், அவினாஷின் கார், ஹோட்டலை வந்தடைய...

அவினாஷ் உட்பட ஐஸ்வர்யா, அருணா, சாலினி, பிரியா அனைவரும் காரிலிருந்து இறங்கினர்.

ஐஸ்வர்யாவும் ராகினியும் அந்த ஹோட்டலின் வெளி அழகைக் கண்டே பிரமித்து நின்றனர். கட்டிடத்தின் பிரம்மாண்டமும், தாமரை அலங்காரத்தின் நேர்த்தியும், அவர்களை பிரமிக்க வைக்கும் உணர்வை ஏற்படுத்தியது. அவர்களின் கண்கள் முழுவதும், அந்த ஒளியின் பிரகாசத்தைப் பிரதிபலித்தது.

அப்போது, ஐஸ்வர்யாவின் ஹோட்டலின் மேனேஜர் மஹிரா, சீக்கிரம் வந்து, ஐஸ்வர்யா செய்த டிஷ்ஷையும் எடுத்துக் கொண்டு, அவளையும் உடன் வேறு பக்கமாக, சமையலறைப் பக்கம்கூட்டிச் செல்ல, மற்றவர்கள் ஹோட்டல் முன் வாசலினூடாக உள் நுழைந்தனர்.


ஐஸ்வர்யாவின் மனதில், ஒருவித எதிர்பார்ப்பும், பதட்டமும் நிரம்பியிருக்க, ராகினி உள்ளே சென்ற தனது அக்காவையே பார்த்தவாறு, உள்ளே நுழையும் மற்றவர்களைப் பின்தொடர்ந்தாள்.

(நேசம் தொடரும்)

வடுகப்பட்டி எனும் ஊரைச் சார்ந்த

# திரு சங்கரபாண்டியன்

ஒரு சாதாரண தையல் தொழிலாளியாக இருந்து மரபுக் கவிஞராக பரிணமித்துள்ளார். இரண்டே அடிகளில் திருக்குறளுக்கு அதே செய்யுள் வடிவத் திருக்குறளை உரையாக எழுதியவர். கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் நெருங்கிய நண்பர். இவர் எழுதிய ஒவ்வொரு நூலும் வைரமுத்து அவர்களால் வெளியிடப் பட்டது குறிப்பிடத் தக்கது.



## தையல் காரர் செய்யுள் காரராக ஆனார்...

- **வணக்கம் ஐயா..**

தமிழையும் தமிழ் படைப்பாளிகளையும் தாலாட்டிச் சீராட்டும் தமிழ் நெஞ்சத்திற்கும் தங்களுக்கும் வணக்கம் ஐயா.

- **நண்பர் என்ற முறையில் கவிப்பேரரசு அவர்களின் சிறப்புதனை சுருக்கமாகச் சொல்லவும்?**

கவிஞர் வைரமுத்து எங்கள் ஊருக்குத் தமிழால் பெருமை சேர்த்தவர், புகழின் உச்சத்தில் இருந்தபோதும் மயக்கத்தால் பழைமையை மறவாத மனம் படைத்தவர் எழுபதுக்கு மேலான அகவையிலும் உடலும் உள்ளமும் உறுதியிழக்காதவர். சாகித்திய அகாடமி, சாதனா சம்மான், பத்மஸ்ரீ பத்மபூசண், மூன்றுமுறை பல்கலைக் கழகங்களின் டாக்டர் பட்டம், திரையிசைப் பாடல்களுக்கு ஏழுமுறை தேசிய விருது. இப்படி வேறெவரும் பெறாத சிறப்புகளைப் பெற்றவர் கவிஞர் வைரமுத்து.

- **தங்களின் 'திருக்குறளும் பொருட் குறளும்' நூலை வாசித்தேன் இந்த யோசனை எப்படி வந்தது?**

திருக்குறளைப் பொருளோடு வாசிக்கும் ஆர்வம் வளர்ந்த போது உரையாசிரியர்களின் உரைபோல் என்னாலும் எழுத இயலுமா எனப் பயிற்சித்தபோது, வெண்பா இலக்கணம் கற்றுக் கொண்டிருக்கும் போது இயல்பாகவே ஒரு குறளுக்கு குறள் வெண்பா வடிவத்திலேயே வந்துவிட்ட ஓர் உரையே என்னை இப்படி எழுதத் தூண்டியது.

- **அனைத்துத் திருக்குறளுக்கும் பொருட் குறள் செய்துள்ளீர்கள் தங்களுக்குப் பிடித்த ஓரிரு பொருட் குறள்களைச் சொல்லலாமா?**

எல்லாப் பொருட்குறளும் பிடித்தவை தான் ஒன்றிரண்டு சொல்ல வேண்டுமெனில் குறள் எண் 2.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
'நற்றாள் தொழாஅர் எனின்' என்ற குறளுக்கும் பொருளாக ..

படைத்தவன் தாளை வணங்காதார் பல்நூல்
படித்ததனால் என்ன பயன்?

குறள்எண் 475.

'பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம் சால மிகுத்துப் பெயின்' என்ற குறளுக்குப் பொருளாக

மயிலிற காயினும் மிக்கவே ஏற்றின்
இயல்பறும் சக்கரத் தச்சு

குறள் எண் 1212.

'கயலுண்கண் யானிரப்பத் துஞ்சின் கலந்தார்க்
குயலன்மை சாற்றுவேன் மன்' என்ற குறளுக்குப் பொருளாக

உயிரிருக்கும் உண்மை உரைப்பேன் கயற்கண்நான்
வேண்டி உறங்க அவர்க்கு.

- **ஒரு சாதாரண தையல் தொழிலாளி மரபுக் கவிஞராய் பரணமித்தி எப்படி எனச் சொல்ல இயலுமா?**

ஐயா, சாதாரண தையல் தொழிலாளி அல்ல நான், அதிலும் வெண்பா இலக்கணத்தைப் போல நுணுக்கத்தைப் பயன்படுத்திக் கலை செய்யும் தையல் தொழிலாளியாவேன் நான். அதனால் என் தொழிலுக்கும் மதிப்பு உண்டு. தமிழார்வம் அத்துடன் உங்களைப் போன்ற இலக்கியவாதிகளுடன் வாய்த்த நட்பு என்னாலும் எழுத முடியுமா? என்று என்னுள் எழுந்த கேள்விகள் என்னை மரபுக்கவிஞனாய் வளர்த்திருக்கிறது எனலாம்.

- **வைரமுத்துவின் உரையைப் பற்றி சில சிறப்புகள் சுருக்கமாக?**

கவிஞர் வைரமுத்து அவர்களின் ஒவ்வோர் உரையிலும் ஏதேனும் ஒரு புதிய சேதியை அறிமுகம் செய்வார் உதாரணமாக, ஒன்று, ஒரு நூலக விழாவில் பேசும்போது, ஆதிகாலத்தில் களிமண்ணில் செய்த சிலேட்டில் படைப்புகளைச் சேகரித்து முதன்முதலாக நூலகம் அமைத்தவர் யாரெனத் தேடி அந்த மூலவரின் சிறப்பை அழுத்தமாக அவ்விழாவில் அறிமுகம் செய்து விடுவார். இப்படி எந்த மேடையாயினும்



தன்னுடைய உரைக்கான தேடலை இன்றுவரை அவர் நிறுத்தவே இல்லை, மற்றும் உணர்ச்சியும் உச்சரிப்பும் குரல்வளமும் அவையோரைத் தன்பால் ஈர்க்கும் சக்தியாக இருக்கின்றன.

- **கவிஞர் வைரமுத்துவின் எளிமையைப் பற்றிச் சில வார்த்தைகள்?**

கம்பீரமான தோற்றம் எளிமையான உள்ளம் தோற்றம் வெளியே தெரியும் உள்ளம் வெளியே தெரியாது. எப்போதும் இயற்கையான பழைய எளிய உணவுகளே விரும்பி உண்பார் அம்மியில் மசால் அரைத்து வைத்த நாட்டுக் கோழிக் குழம்பு அவர் வடுகபட்டி வரும் போதெல்லாம் செய்வதை நான் அறிந்திருக்கிறேன். சளி பிடித்தாலும் துளசிக் கசாயமே குடிப்பார். பள்ளிப் பருவத்து நண்பர்கள் ஆறுதலாய்ச் சாய்ந்துகொள்ளத் தோள்தந்த பெரியவர்கள் என பேதம் பாராமல் அனைத்து சமூகத்தினரிடமும் ஒன்றிப் பழகுதல் அவரின் எளிமைக்கு அடையாளம் மேலும் அவர் தங்கச் சங்கிலி வைரமோதிரம் போன்ற ஆடம்பர வெளிச்சத்தை அவர் அணிந்து நான் பார்த்ததில்லை.

- **திருக்குறளுக்கு பொருட்குறள் எழுதி முடித்து விட்டீர்கள். அடுத்து உங்கள் இலக்கு?**

திருக்குறளும் பொருட்குறளும் கவிஞர் வைரமுத்து அவர்கள் நான்குபக்க அணிந்துரையோடும் பாவலர் அறிவுமதி அவர்கள்ர் ஒரு பக்க வாழ்த்துரையோடும் வெளியாகிவிட்டது.

இலக்கண இலக்கியத்தின் உச்சமாகச் சொல்லப்படும் வெண்பா வடிவங்களில் வள்ளுவரும் புகழேந்தியும் சிறப்புப் பெற்றவர்கள்.

வள்ளுவரின் குறளுக்கு உரை செய்ததுபோல் புகழேந்தியின் நள வெண்பாவிற்கும் வெண்பாவில் உரை எழுதும் முயற்சியில் எண்பது வெண்பாக்களை நெருங்கிக் கொண்டிருக்கிறேன்.

உதாரணமாக,

நளவெண்பா பாடல் - 22- மக்களின் சிறப்பு.

வஞ்சிலையே கோடுவன மென்குழலே சோருவன
அஞ்சிலம் பேவாய்விட் டாற்றுவன - கஞ்சம்
கலங்குவன மாளிகைமேல் காரிகையர் கண்ணே
விலங்குவன மெய்நெறியை விட்டு. (புகழேந்தி)

பொருள் வெண்பா

வில்லே வளையும் விழியிரண்டே பொய்பேசும்
சொல்லாடல் மங்கைச் சிலம்பேயாம் - முல்லைமணக்
கூந்தலே இங்கு கலையும் கலங்குதலும்
நீந்துநீரன் றில்லாத நாடு.

நளவெண்பாவிற்கான வெண்பா உரையும் எழுதி நிறைவு செய்ய காலந்தான் அனுமதிக்க வேண்டும் பார்க்கலாம்.

- ***தாங்கள் பெற்ற விருதுகள் சிலவற்றைக் கூறுங்கள்?***

விருதுகள் என்றால்.. சிறுகதைக்கான ஜெயகாந்தன் விருது, .

குங்குமம் கவிதைப் போட்டியில் கவிஞர் வைரமுத்து கையில் வாங்கிய விருது,

முகநூல் குழுமத்தின் போட்டிகளில் பல வெற்றியாளர் சான்றிதல்கள், வெண்பா மணி, விருத்தப்பா வித்தகர்,

தமிழ் நெஞ்சம் வழங்கிய வெண்பா வித்தகர் போன்றவைகள் அடங்கும்.

- ***தங்களுக்குப் பிடித்த திருக்குறள் எது? ஏன்?***

எல்லாமே பிடிக்கும் அதில் ஒன்று.

'பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின் '.

உருவத்தில் என்ன இருக்கிறது உறுதியான உள்ளமும் செயல்திறனும் வேகமும் வெற்றி தரும். என்னும் நம்பிக்கை ஊட்டும் குறள் எனக்கு மிகவும் பிடிக்கும்.

- ***தாங்கள் எழுதிய முதல் கவிதை / நினைவில் நின்ற கவிதை ?***

நான் எழுதிய முதல் கவிதை எதுவென நினைவில்லை ஆனால் என் மனதில் முதலில் நிலைத்த கவிதை என் அம்மா இறந்த சம்பவம் பற்றி நான் எழுதியது

காணாமப் போயிட்டா!
பத்து வயசுப் பையன் நான் அவமேல கால்போடாமத் தூங்கினதில்ல எப்பவும்
தூங்கவிட்டுத் தூங்கி முழிக்கு முன்னே முழிச்சுருவா
இப்போ,
தட்டி எழுப்பியும் எ(ழு)ந்திரிக்கல
கொட்டுச் சத்தமும் காதுல ஏறல
கத்தி அழுதுபார்த்தேன்
கண்ணத் தெறக்கல
ஊரக் கூப்பிட்டு ஒப்பிச்சு அழுதேன்
ஊரும் என்னோட சேர்ந்து அழுதுச்சு



காதுகுத்தப் பொறுக்க மாட்டா
இப்போ கத்திகிழிச்சும் ஒறைக்கல
குடங்குடமா தண்ணி ஊத்திக் குளிக்கவச்சும்
பாத்தாக
கொஞ்சமும் அசையல
மாலபோட்டு அமர்த்தி கும்பிட்டுக் கூப்பிட்டும்
மனசக் கல்லாக்கிக்கிட்டா
தேருல வச்சு வடக்க போயி
தீய வச்சும் பார்த்தாக
திரும்பிக்கூடப் படுக்கல
'போனாப் போறாடா
பொழுது விடியும் வா'ன்னு அழுத என்னை இழுத்து
வந்தாக
மறுநாளும் போய்ப் பார்த்தோம் எலும்பப் போட்டுட்டு
எங்கேயோ போயிட்டா
சுற்றியிருந்த சொந்த பந்தம் சொல்லாமப் போயிருச்சு..
வயிறும் கண்ணும் பசிக்குதிப்போ
யாரைக் கேட்பேன் சோறு
யார்மேல போட்டுத் தூங்குவேன் காலு

பத்து வயசுப் பையன் நான்.

- ***தங்கள் காதல் மனையாள் பற்றிச் சிலவரிகள்***

*என் மனையாளின் பெயர் இந்திராணி. அன்னை தயையும் அடியாள் பணியும் மலர்ப் பொண்ணின் அழகும் புவிப்பொறையும் வேசி துயிலும் விறல் மந்திரியும் என மேலோர் சொன்ன மாதிரி குணம் ஆறும் கொண்டவள் என் மனைவி. எனக்குத் தாயில்லாக் குறையைத் தகர்த்தவள் எனக்கும் என் பிள்ளைகளுக்காகவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவள் தனக்கென வாழாத் தெரியாத தயவாளி குடும்பமே அவள் அவளே குடும்பம்!*

- ***உங்கள் குடும்பத்தைப் பற்றிச் சிலவரிகள் சொல்லவும்?***

*என்னால் உருவான குடும்பதில் நான், என்மனைவி, எங்களுக்கு 4 பிள்ளைகள்.*

*என் மனைவி இந்திராணி, என் மகன்கள், தாழேஸ்வரன் காவல் துறை. அகிலேஷ்வர் காவல் துறை, பார்த்திபன் இளங்கலை பயின்று இப்போது பொது அறிவுத் தேர்வுக்குப் படித்துக் கொண்டிருக்கிறான் என் மகள். இராகவித இளங்கலை பயின்று இப்போது பொது அறிவுத் தேர்வுக்குப் படித்துக் கொண்டிருக்கிறாள். எல்லோரும் நலம்.*

*நான் பிறந்த குடும்பத்தில் அம்மா அப்பா தங்கை தம்பி எல்லோருமே பூமிக்கு விடையிறுத்த பிறகு . நான் மட்டும் இன்னும் புவிக்கு அறுபத்துநான்கு கிலோ பாரமாக இருக்கிறேன்.*

- ***வளர்ந்து வரும் பாவலர்களுக்குத் தங்கள் அறிவுரை என்ன?***

*நானென்ன சொல்ல? முன்னோர் சொன்னதுதான்.. நிறைய படிக்க வேண்டும் பெற்ற கல்வியை முறையாக அறவழியில் எழுத வேண்டும் உண்மைக்கு மாறான மனத்திற்கு உடன்படாத கருத்துகளைச் சுயநலத்திற்காக மொழியாதிருக்க வேண்டும் தம்மைக் காலம் கவனித்துக் கொண்டிருக்கிறது என்ற எண்ணம் வேண்டும் தமிழுக்குப் புதிய பெருமையைச் சேர்க்க வேண்டும் வேறென்ன?.*

- ***தங்களைப் பேட்டி காணும் தமிழ் நெஞ்சம் மாத இதழ் பற்றி தங்களின் மேலான கருத்துகளைச் சில வார்த்தைகள் சொல்லலாமா?***

*தமிழ் நெஞ்சம் மாத இதழ் தமிழின் அறத்தை படைப்புத் திறத்தை மரபின் மேன்மையை உலகெல்லாம் பரப்புரை செய்யும் ஓர் இலக்கியஇதழ்.*

*பொருள் தேடாமல் தமிழின் புகழோங்க உழைக்கும் அமின் ஐயாவை கைக்கொண்ட இதழ்.*

*இராம, வேல்முருகன், ஏ.டி.வரதராஜன், அன்புவல்லி தங்கவேலர், தென்றல்கவி போன்றவர்களைத் தூணாகக் கொண்டிலங்கும் இதழ்.*

*படைப்பாளிகளின் திறனை வெளிக் கொணர பயிற்சியளித்து விருதளித்து அவர்களுக்குப் பெருமை வழங்கும் இதழ்*

*தற்காலத்தில் தமிழை இன்னும்*



ஓரடி மேலேற்றி வைத்த புகழ் தமிழ் நெஞ்சத்திற்குண்டு என்று நான் சொல்வதில் மிகையில்லை.

- **சமகாலக் கவிஞர்களில் தங்களுக்குப் பிடித்த கவிஞர் யார்?**

கவிஞர்கள் எல்லோரையும் எனக்குப் பிடிக்கும் எனினும் நேரிடையாகப் பார்த்து நான் பயின்று வளர்ந்த கவிஞரென்றால் அது எங்கள் மண்ணின் மைந்தர் கவிஞர் வைரமுத்து, அவரின் எழுத்தில் கிராமத்து மக்களின் வியர்வை வாசமும்

மண்ணின் மணமும் வெயிலின் வெப்பமும் மழையின் குளிர்ச்சியும் எனக்கு மிகவும் பிடிக்கும்.

- **தங்களின் நண்பர்கள் தங்கள் எழுத்துக்கு எவ்வாறு துணையிருக்கிறார்கள்?**

என் நண்பர்கள் பெரும்பாலும் கல்லூரி சென்று படித்தவர்கள்

நான் மட்டுமே ஆறாம் வகுப்பு தாண்டாதவன். இருப்பினும் என் எழுத்தை முழுமையாக உணர முடியாவிட்டாலும் அவர்கள் தம் பொருளை உழைப்பைத் தந்து என் நூலைத் தலைமேல் வைத்துக் கொண்டாடத் தவறியதில்லை. ஒரு மனிதனின் உயர்வுக்கு நல்ல நட்பு மிக அவசியம் அது எனக்கு வாய்த்திருக்கிறது.

- **தமிழர்வம் உங்களுக்கு வந்தது பற்றி?**

அப்பா படிக்காதவர் எனினும் கேள்விஞானத்தால் உள்வாங்கிப் பொருளறிந்து பாடக்கூடியவர். அவரிடமிருந்து நாட்டுப்புற பாடல் பழைய திரைப்பாடல்கள் கேட்டறிந்தேன். அதன் தொடர்ச்சியாக தமிழார்வம் கவிதை கட்டுரை சிறுகதை வெண்பா என என்னைக் காலம் வளர்த்து வந்திருக்கிறது.

- **தங்களின் தற்போதைய சூழல்?**

இப்போது எனக்கு வயது 58 ஆகிவிட்டது. பத்து வயதிலிருந்து ஓயாத வேலை, வறுமை வாழ்க்கை. என் அத்தைக்குத் திருமணம் முடித்ததிலிருது என் தங்கை திருமணம் அவர்களின் பிள்ளைகள் பராமரிப்பு, என் திருமணம் அடுத்து என் தம்பி திருமணம்த என் பிள்ளைகள் வளர்ப்பு என வேறெந்தப்பக்கமும் போக முடியாத வாழ்க்கைச் சூழலிருந்து மீண்டு தற்போது பொறுப்புகளிலிருந்து விடுபட்டு இப்போது பிள்ளைகள் வேலைக்குச் செல்வதாலும் என் மனைவி குடும்பப் பொறுப்புகளைச் சுமப்பதாலும் வந்தவேலையைச் செய்து வெந்த உணவை உண்டு மகிழ்வாக இருக்கிறேன்.











**D. கார்த்திகேயன்**
முதலாமாண்டு,
பி. ஏ. எல் எல் பி,
தனலட்சுமி ஸ்ரீனிவாசன்
பல்கலைக்கழகம் திருச்சி.


# அன்பின் பாலம்

## ஸில்மா ஹிதாாயத்துல்லா

பீறிட்ட அழுகையை அடக்க முடியாமல், தள்ளாடியபடி ஸ்ட்ரச்சரை நெருங்கிக் கொண்டிருந்த ஹிஸ்னாவின் முகத்தில் சோக ரேகைகள் மட்டுமல்ல விம்மலும் சேர்ந்து கொண்டு ஓலம் இட ஆரம்பித்தன.

தாயின் முக மாற்றத்தை அவதானித்த மூத்த மகன், 'உம்மா... எங்க போறோம்...? ஏன் இங்கு வந்திருக்கிறோம்....? யாருக்கு என்ன நடந்த....? மொத நான் கேட்டதுக்கும் நீங்க ஒண்டும் செல்லல்ல....' என்று அடுக்கடுக்கான கேள்விகளைத் தொடுத்துக் கொண்டே போனான்.

'மக.....ன்' குனிந்து மகனின் தோளில் முகத்தைப் புதைத்து கஷ்டப்பட்டு வந்த அழுகையை அடக்கிக்கொண்டு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கினாள் அவள்.



'இவனுக்கு எட்டு வயது தான் ஆகிறது. சந்தர்ப்ப சூழ்நிலைகளின் விபரீதம் அறியாத வயது. எதைச் சொல்லி என்ன புரிய வைக்க முடியும்...? வேண்டாம்... சொல்ல வேண்டாம்....'

உடனே சொல்ல வந்ததை சொல்லாமல் தாழ்ப்பாள் போட்டாள்.

'ஒன்..டுமில்ல.. மகன்... உம்மாக்கு தல நோவு மாதி.. அதான் மருந்தெடுக்க வந்த...' மழுப்பளாய் பதிலளித்தாள்.

'ஓ.... அப்படியா....? ஓகே.. உம்மா...' அவன் புருவத்தை உயர்த்திக் கேட்டதும் ஹிஸ்னாவுக்கு நவாஸின் முகம் தான் கண்களில் கேமரா பிளாஷ்போல பளிச்சிட்டது.

அவரும் அப்படித்தான்...

புருவத்தை உயர்த்தித்தான் ஆச்சரியப் படுவார்... அப்போது... அவர் எவ்வளவு அழகாக இருப்பார்... யோசிக்கும் போதே இப்போது அவர் இல்லையே என மீண்டும் நவாஸுக்காக அவள் மனம் துடிக்க ஆரம்பித்தது.

அதே பதட்டத்தோடும் ஒரு கண நிதானத்தோடும் திரும்பினாள் அவள்...

அங்கே...

அங்கே...

அந்த ஸ்ட்ரச்சரைத் தள்ளியபடி.. வாட் பாய் இருவர், முன்னோக்கிப் போய்க் கொண்டிருந்தனர்...

ஓடிப்போய் விசாரிக்க எத்தனித்தவளைத் தடுக்கும் விதமாகவோ தெரியவில்லை... அவர்களின் பின்னே....

பின்னே வாயை மூடியபடியும் கத்திக்கொண்டும் ஒப்பாரி வைத்தபடி ஒரு கூட்டம் செல்வதைக் கண்டாள்.

'ஆக, அது என் நவாஸ் இல்லை.. நவாஸாக இருக்க வாய்ப்பே இல்லை... நவாஸின் கையில் இருந்த மோதிரம் போல.. அந்தக் கையிலும் இருந்ததே...' சந்தேக கேள்வி உள் எழும்பியது.

'உலகத்தில் ஒரே மோடலில் ஒரே ஒரு மோதிரமா செய்வார்கள்...?' என்ற கேள்வி தோன்றவே அதுவும் உள்ளுக்குள் அமுங்கிப் போனது.

மச்சானுக்குத் திரும்பவும் கால் எடுத்தாள். முழுதாகவே ரிங் போய் நின்றது. மீண்டும் முயற்சித்துப் பலனில்லை என்று விட்டுவிட்டாள்.

நவாஸின் நம்பருக்கும் முயற்சித்தாள்.

அம்முயற்சியும் தோல்வியையே தழுவியது.

'உள்ளே போயாவது விசாரிப்போமா' என்றுதான் தோன்றியது அவளுக்கு. பிள்ளைகளைப் பத்திரமாக எங்காவது அமர வைக்க வேண்டுமே என சுற்றும் முற்றும் தலையைத் திருப்பித் தேடிப் பார்த்தாள்.

பக்கத்தில் ஒரு வயதான பெண் அமர்ந்திருந்தார். அவரின் அருகில் யாரும் இல்லாத அனாதை போல மூன்று நாற்காலிகள் இவளுக்கெனவே வைக்கப்பட்டாற்போல அவளைப் பார்த்துச் சிரித்தன.

'அப்பாடா...' என்றிருந்தது அவளுக்கு.

பிள்ளைகளைக் கதிரைகளில் அமர்த்தி, தான் வரும்வரை பத்திரமாக இங்கேயே இருக்க வேண்டும் எனச் சொல்லிவிட்டு, பக்கத்தில் அந்த முதிய பெண்மணியிடமும் கொஞ்சம் பார்த்துக் கொள்ளுமாறு செய்கை செய்தாள்.

அவர் தலையால் ஆமோதித்ததை வராத புன்னகையைக் கஷ்டப்பட்டு வரவழைத்து ஏற்றுக் கொண்டாள்.

எந்த சூழ்நிலையிலும் குழந்தைகளின் நலன் பெரிது எனத் தாயாகிய அவளுக்கு விளங்காமல் இல்லை.

ஆனால் நவாஸுக்கு என்ன நடந்திருக்கும் என்ற எண்ணம் அவள் நெஞ்சத்தில் பாரங்கல் போல ஊண்றிப் போயிருந்தது.

'விறுவிறு' என நடந்து கண்ணாடிக் கதவை உள்ளே தள்ளியபடி முன்னேறினாள் ஹிஸ்னா.

தாதியர் உடையில் நின்றிருந்த ஒருவரிடம் 'நவாஸ்.... நவாஸ்....' வார்த்தை வராமல் பிதற்றினாள்.

மென்மையாக அவளைப் பார்த்து புன்னகைத்தபடி, 'யார் மிஸ்..?' என சிங்களத்தில் கேட்டாள் அந்தத் தாதி.

அவள் பதட்டம் கலந்த பரிதவிப்புடன் அடையாளங்களைச் சொல்லி இன்னார் எனக் கேட்க, 'இல்லை... அப்படி யாரும் இன்று சேர்க்கப்படவில்லை...' என்றாள்.

அத்தோடு, இன்று 30 வயதிலிருந்து 35 வயதுக்குட்பட்ட ஆண்கள் யாரும் எமெர்ஜென்சி யுனிட்டில் சேர்க்கப் படவில்லை என்று கூடுதல் தகவலும் தந்தாள்.

ஒருவித நிம்மதி ரேகை அவளை அறியாமல் அவளுக்குள் படரத் தொடங்கியது. கண்களில் சொட்டு சொட்டாய் கண்ணீர் பெருக்கெடுத்தது...

'அல்ஹம்துலில்லாஹ்......' கொஞ்சம் சத்தமாகவே சொல்லிக் கொண்டாள்...

மெழுகுவர்த்தி அணையும் போது பிரகாசமாக எரியும் என்பார்களே...

அதுபோலவா இதுவும்...

நவாஸுக்கு என்ன நடந்திருக்கும்...

அன்பின் பாலம் தொடரும்...

இளையவன் சிவா

# கவிதைகள்



1
ரசிக்கும் குறும்புகளுக்குள்
மழலையாகி விடுகிறாய்
சிணுங்கும் வெட்கத்திற்குள்
யுவதியாகி விடுகிறாய்
அணுகும் பணிகளுக்குள்
தாயாகி விடுகிறாய்
கணநேரக் காத்திருப்பில்
கூடுவிட்டு கூடு பாயும்
வித்தையை
எங்கிருந்து இறக்குகிறாய்
என்னிதயத்தில்..

2
கண்களைத் தூதுவிடுகிறாய்
மூடிக்கொள்கிறேன் இதயத்தை
வில்லும் துளைத்திடும்
அம்பாகிவிடுவதால்.

3
இசையைத் தேடி
வனத்திற்குள்
நுழைந்தவனுக்கு
உடலெங்கும்
ஊர்ந்து கொண்டிருந்தன
ராகங்களின் கலவை.

4
ஊறிக் கிடந்த
மணலுக்குள் தான்
ஒளித்திருக்கிறது
இனிப்பு நீரை
கடற்கரையெங்கும்
அலையடிக்கும்
கடலும்.

5
விளைந்து வானம் பார்க்க நின்ற
முருங்கையின் மீதுதான்
ஏறிக் கொண்டிருந்தன
கம்பளிப் பூச்சிகள்.

6
எறும்பு ஊர்கிறது
புலி ஏறுகிறது
வெட்டுபவனும் ஏறுகிறான்
எல்லாவற்றையும்
ஏற்றுக்கொள்ளும்
மரத்தின் இயல்பே
கோடரியின் கூர்மைக்கும்
மௌனமாகிவிடுதலே.

7

ஏறியவனுக்குத்தான் தெரியும் என
வேடிக்கையே பார்த்தபடி
அடிவாரத்தில் இருந்தால்
நீ ஏறுவதைப் பார்க்க
தயாராக வேண்டாமா
இன்னொரு கூட்டம்

8

தூக்கி எறிந்தாலும்
வணங்கப்பட வேண்டுமானால்
விதையாக இரு

9

நீங்கள் கல்லறைகளைத்
தேடித் தேடி
அழித்துக் கொண்டிருக்கும் போதுதான்
உங்களுக்கான கல்லறைகளும்
யாரோ ஒருவரால்
தோண்டப்படத் துவங்கிவிடும்.

10

வரம் வேண்டி உயர்ந்த கரங்களோ கோடி
தவமென தன்னையே ஒப்படைத்து
விடுதலையை நாடி
தேசமெங்கும் நிலைபெற்றிட
ஓடிய கால்களுக்கு
ஓய்வும் நிம்மதியுமற்றே
விடுதலை கொடுத்த விடை
துப்பாக்கிச்சூடென்ற பரிசுதானே.
எல்லோரும் புன்னகைக்க
தன்னுயிர் ஈந்தவன்
எப்போதும் சிரித்தே கிடக்கிறான்
மனிதனின் கரங்களில் தவழும்
பணத்தில்.

11

**உயிர் காக்கும் முதற்படி**

விலைமதிப்பிலா உயிரின் பயணத்தில்
வெல்வதும் வீழ்வதும்
மனநிலை பாய்ச்சும்
சொல்லிலும் செயலிலும் நிற்க
பாதைகளின் தடைகளில்
பயமும் பரிதவிப்பும் சேர்கையில்
நொடிக்கும் கீழே
நொடிந்து விடக்கூடும்
உயிரின் மூச்சு.
ஆபத்தின் எல்லையில்
ஆயத்தங்களை எதிர்பாராது
அறிந்திடும் உதவியின் வழியே
அச்சத்தைப் போக்குதல்
அத்தியாவசியமாகிறது.
எதிர்பாரா இடரினில்
யாருமற்ற பொழுதினில்
தேகத்தின் இயக்கத்தில்
சேதாரம் விளையுமென்றால்
உயிர் காக்கும் உதவியினை
உடனடியாய்ச் செய்திடின்
நடமாடும் தெய்வமென
நம்பிக்கை வார்த்தைகளில்
உலகம் நகரத் துவங்கும்.



# கற்பகத்தின் கல்யாணம்



**அன்புச்செல்வி சுப்புராஜு**
பட்டாபிராம், சென்னை

9

பேருந்து கிளம்பிய சிறிது நேரத்தில் ஊர் சுற்றிய அலுப்பில் அனைவரும் உறங்கிவிட, கற்பகத்திற்குதான் தூக்கம் வருவேனா என்றது. பயமும், பதட்டமுமாக ஊருல இருக்கிற சாமிக்கு எல்லாம் 'எங்கப்பா உங்களைக் கும்புடலைனு கை விட்டுறாதீக... எஞ்சாமிகளா... எங்காப்பாவ காப்பாத்தி தருவீகளா... அவருகிட்ட கெஞ்சியாவது உங்க இடத்துக்கு கூட்டியாரேன். உங்களக் கும்புட வைக்கிறேன்னு' மனமுருகி, கண்ணீர் வழிய வேண்டுதல் வைத்தாள்.

திங்கக்கிழமை காலைல ஊருக்குள்ள பஸ் நுழையும் போதே, 'நிமிச நேரம் பஸ்ஸ நிப்பாட்டுங்கனு' கற்பகம் சொல்லவும், எல்லோரும் என்னாச்சு கற்பகமுனு' கேட்டாங்க.

'டிரைவர் அண்ணா.... பஸ்ஸ நிறுத்துங்க அண்ணா...' தொண்டையடைக்க கற்பகம் கேட்கவும் ஒரு ஓரமா டிரைவர் பஸ்ஸை நிறுத்தினார்.

எதுக்கால வந்தவுககிட்ட 'ஊருக்குள்ள ஏதும் தகவலிருக்கானு' விசாரிச்ச கற்பித்துக்கிட்ட 'ஒன்னுமில்லையேமா, என்னா தகவலுனு' அவங்க திரும்ப கேட்கவும் 'சும்மா கேட்டேனு...' சிரிச்சாள்.

பஸ்ஸை விட்டிறங்கி வீட்டுக்குள் நுழையும் பொழுதே ' ஒரே அலுப்பா இருக்கு, சுடுதண்ணி போட்டு குளிக்கணும். தண்ணி இறைச்சு தா' தம்பியிடம் தங்கச்சி வம்பிழுக்க 'ஏய்... ஒட்டைப்பல்லி, நீ போய் இறைச்சுக் குளி...' தம்பி சத்தம் போட 'போடா... லூசுப்பயலே...' னு சொல்லியபடியே தங்கச்சி ஓடுவதைப் பார்த்தபடியே அம்மாவிடம் சென்ற கற்பகம் 'அப்பாவுக்கு எப்படிமா இருக்கு?' என்று கேட்டாள்.

'ஏதோ இருக்கு பாப்பா, இன்னைக்கு போகணும்' னு அம்மா சொல்லவும் 'நானும் வரேன் மா' என்றவாறு கிளம்பினாள்.

வீட்டுல எல்லாம் போட்டது போட்டபடி கெடக்கு, நீ. சோறாக்கிட்டு, வீட்டை சுத்தம் பண்ணிடு, பொறவு முடிஞ்சா தையல் ஸ்கூலுக்குப் போயி சொல்லித் தா, கொஞ்சம் துணிக தைக்காம கெடக்கு, தைக்கப் பாரு. நான் போயிட்டு வரேன்' பேசியபடியே விபூதி, பிரசாதம் எடுத்து கிட்ட அம்மா 'அப்பாவுக்கு பூசலாமுனு நெனைக்கிறேன். மனுசன் என்ன சொல்லுவாரோ...' முணங்கியபடியே கெளம்பவும் 'நா அப்பாவுக்கு சரியான கோவிலுக்குக் கூட்டிக்கிட்டு வரேன்னு வேண்டியிருக்கேன் மா' கற்பகம் சொல்லவும் சிரித்தபடியே கிளம்பிட்டாங்க...

சமையல் முடித்ததும் சாப்பிட்ட தம்பிக பள்ளிக்கூடம் போகவும் தங்கச்சி கிட்ட 'நீ ஸ்கூல் போகலையானு' கற்பகம் கேட்க 'இராமேஸ்வரம் போயிட்டு வந்தது அலுப்பா இருக்குக்கா.. இன்னைக்கு ஒரு நாள் நான் லீவுனு' தங்கச்சி சொல்லவும், முறைத்தபடியே 'சரி... அப்படினா ரேசன் கடைல சீமெண்ணை ஊத்தறாங்க...வாங்கி வச்சிட்டு தூங்குனு' சொன்னாள் கற்பகம்..

'சரிக்கா...' மண்ணெண்ணெய் கேனோட தங்கச்சி ரேசன் கடை போனதும், பரபரன்னு வீட்டு வேலைகள முடிச்சிடலாமுனு அழுக்கு

துணிகளெல்லாம் எடுத்து ஊறவச்சிட்டு, வெளக்குமாறு (துடைப்பம்) எடுத்து வீடு கூட்டத் தொடங்கியவள் வாசலில் நிழலாடவும் நிமிர்ந்து பார்த்தாள்..

வாசலில் வெள்ளை பேண்ட், இளநீல சட்டை, காலில் ஷூவுடன் ஒருவர் நிற்க... முழங்கை வரை மடக்கி விட்ட சட்டை, பாவாடை, கையில் வெளக்குமாறுடன், வெராந்தாவில் நின்றவரைக் கேள்வியாகப் பார்த்தாள் கற்பகம்.

'நல்ல வரவேற்பு...' என்று அவர் சிரிக்கவும் வெளக்குமாறை அவசரமா கதவுக்கு பின்னாடி மறச்சி வச்சிட்டு... 'யாரு நீங்க... அனுமதி கேட்காத உள்ளார வந்தா இப்படித்தா இருக்கும். வாசலுக்கு போங்க... நா இதோ வரேன்' கோபத்துடன் கற்பகம் பேசவும் 'தெரிஞ்சவுகதே பாப்பா... உள்ளார கூப்பிடு' சித்தப்பாவின் குரல் கேட்டது.

வாசலில் சித்தப்பாவும், இரண்டு பெரியவர்களும் நிற்பதைப் பார்த்தவள் 'வாங்க சித்தப்பா, வாங்க ஐயா 'என்று வரவேற்றவள் 'நீங்களும் வாங்க' என்று அவரையும் அழைக்க' அடி விழாம தப்பிச்சேன்' ஷூவைக் கழட்டியபடியே சொல்லியதைக் கேட்டு 'சொந்தக்காரவுகளா... அப்பாவுக்குத் தெரிஞ்சவுகளா எதுக்கு வந்திருக்காக... ஒன்னும் புரியலையே' தனக்குள் பேசியபடி வந்தவுக உட்கார வாட்டமா சேர்களைத் தூக்கிப் போட்டுக்கிட்டே... 'அப்பா ஆஸ்பத்திரியில் இருக்காங்க.. பெரிய தம்பி அப்பாவிற்கு தொணையா தங்கியிருக்காக...சின்ன தம்பி பள்ளிக்கூடம் போயிருக்கான், அம்மா அப்பாவ பார்த்துட்டு வர போயிருக்காங்கனு' சித்தப்பாகிட்ட கடகடனு ஒப்பிச்சா...

'கொஞ்சம் மூச்சு விட்டுப் பேசுங்க ' வந்தவர் சொல்ல அவரை முறைத்துப் பார்த்தாள்.

அதற்குள் அவர்கள் உட்காரவும், குடிக்கத் தண்ணீர் கொடுத்தாள்.

வந்த பெரியவர்களில் ஒருவர் 'தெரியும் தாயி.. நாங்க இறங்கிய மதுரை பஸ்ஸிலதான் ஒங்கம்மா ஏறினாங்க... அவங்ககிட்ட பேச முடியல.. அதான் உங்க சித்தப்பா வீட்டுக்குப் போயி, அவரைக் கூப்பிட்டுக்கிட்டு நேரே இங்க வந்துட்டோமுனு' சொன்னாரு.. அவர் சொன்னதும் எதுக்கு வந்திருக்காங்கனு கேள்விக்குறியோட சித்தப்பாவ கற்பகம் பார்த்தாள்.



# ஏக்கம்



மாலைப் பொழுதின் வெள்ளைப்
பூக்களில் உன்,
சுவாசத்தை உணர்கிறேன்.

நிறை மாதக் கர்ப்பிணி..
நிலாவின் பூரணையில்…
உன்னுடன் நானிருந்த நொடிகளின்,
சுவாசத்தை நினைக்கிறேன்.

பட்டப் பகலிலும்
பித்துப் பிடித்தவளாய்
உன்னைத் தொலைத்த
பித்துக்குளியாகின்றேன்.

இரத்தம் தோய்ந்த
மாலைச் சூரியனின்
மரண வாசலில்..
நான் மட்டும் ஏக்கத்தோடு….
ஏங்கியிருப்பேன்.

இளமைப் படகில் ஏற்றிய இன்பத் துகள்கள்
சுமைகளாகி…
சுமக்க முடியாமல்…
கண்ணீர்க் கடலில்
மூழ்கியே விடுகிறது.
என் வசந்த காலம்
இலையுதிர்க்கும்..
இரவாகி விட்டது.

துன்பம் என் கதையாகி..
விடை தெரியாமல் போன…
விடுகதையாகி விட்டது.

சண்டையை எதிர்க்கும் பலஸ்தீனைப்
போல..
கம்பீரமாய் நிற்க..
நானும் முயல்கிறேன்.

இருளும் ஒளியும்
இரண்டரக் கலந்த இரவின் மடியில்…
உன் வருகைக்காய்..
கண் வளர்க்காமல்
காத்திருக்கிறேன்.

ஏக்கம் தொடர்கிறது..
ஏமாற்றியவனே!!!!
ஏங்கி ஏங்கியே…
மெதுவாய் எழுகிறேன்….
எனக்குள் நானே….
உறங்கி மடிவதற்கு.

**பாவலஊராள் பஸ்லியா.**

# அம்மா வீடு



வெளி நாடுகளில் வேறுபட்டு இருக்கலாம், ஆனால் இங்கு இன்னும் மாறியதாக தெரியவில்லை, திருமணத்திற்கு பின் மறு வீடு செல்லும் பெண் ஓரிடத்தில் இருந்து பிடுங்கி வேறிடத்தில் நடும் பயிர் வேர் பிடிக்க எவ்வளவு இன்னல்கள் இருக்கின்றதோ அவ்வளவு சிரமம் இருக்கின்றது அவருக்கு, இன்னமும் பல அடக்கு முறைக்கு ஆளாக்கப்படுகிறார், உடல் ஏதும் சரியில்லையென்றால் அங்கேயே ஓய்வெடுத்து குணமாகும் வாய்ப்பு கூட குறைவாகவே உள்ளது,

பெண்ணுக்கு உடல் நலக்குறைவு ஏற் பட்டால் தாய் வீட்டிற்கு அனுப்பி வைப்பதும், அல்லது அவளின் தாய் இங்கு வந்து அவளை பார்த்துக்கொள்வதும் இயல்பாக உள்ளது. பெண் என்பவளின் நிலை பெரும்பாலும் இப்படித்தான் இருக்கின்றது, இப்பொழுது அப்படி இல்லை என்று நீங்கள் சொன்னால், நீங்கள் அதை கடந்தவர் என்று வேண்டுமானால் எடுத்துக்கொள்ளலாம், ஆனாலும் இந்த 2025 லும் இன்னமும் இப்படித்தான் இருக்கின்றது.

ஒரு பெண் குழந்தை பெற்றுக் கொள்ளக் கூட அவள் தாய் வீட்டிற்க்கு அனுப்பி வைக்கப்படாத நிலை உருவாக வேண்டும்,

ஒவ்வொரு ஆபத்து காலங்களிலும் அவள் பிறந்த வீட்டிற்க்கு அனுப்பப்படுகிறாள் என்றால் அதன் அர்த்தம் தான் என்ன?

அங்கிருந்து வேறு யாரும் எங்கும் அனுப்பப்டுவதில்லையே இது எப்படி, இங்கு பெண்களின் நிலை மோசமாகத் தான் இருக்கின்றது. சிலருக்கு பெற்றோர் இருக்கலாம் சிலருக்கு இல்லாமல் கூட போகலாம் சிலருக்கு இருந்தும் ஆதரவு இல்லாமல் இருக்கலாம்.

பொதுவாக தாயாகும் காலங்களில் தான் அப்பெண் பெரிதான மன உளைச்சலுக்கு ஆளாகிறார். அவர் ஒரு வித பய உணர்வோடு கூடவே பிரசவ காலத்தையும் சேர்த்து வைத்து கவலை பட தொடங்கி விடுவாள், இந்த நேரத்தில் அவளுக்கு கிடைக்க வேண்டிய சத்தான உணவு, ஓய்வு நிம்மதி எல்லா பெண்களுக்கும் கிடைப்பதில்லை.

அநேக இடங்களில் அப்பொழுதுதான் உங்க வீட்டில் என்ன இப்படி செய்கிறார்கள் அப்படி செய்கிறார்கள் என்றும், எங்கள் வழக்கம் இதுவல்ல இங்கு நாங்கள் இப்படி அப்படித்தான் வாழ்கிறோம் என்ற வசைபாடுகளும் உண்டு,

இந்த நேரம் மிகவும் முக்கியம் இப்படியெல்லாம் பேசுவது வெறுப்பையே உண்டாக்கும்,

ஒரு பெண் அவள் குடும்பதுத்துக்காக காலை முதல் இரவு வரை அவள் மீது சுமத்தப்படும் வேலைகள் ஏராளம் அதுவும்

வேலைக்கு போகும் பெண்களின் நிலை இன்னும் சொல்வதற்கில்லை, தொடர்ந்து இவ்வாறாக போய்கொண்டு இருக்கும் திடீரென உடல் நலிந்தால் ஓய்வு எடுக்க விரும்புவாள் ஆனால் முடியாது, எதுவானாலும் சமைத்து மட்டும் வைத்துவிடு என்று கேட்கும் மனிதர்களும் உண்டு,

அவளால் எழுந்து நிற்பது கூட முடியாது ஆனால் ஒவ்வொன்றிற்கும் அவளையே எதிர்பார்க்கும் குடும்பம்.

அவளிடம் நீ ஓய்வெடு, நான் பார்த்துக் கொள்கிறேன் என்னும் குரல் கொடுக்கும் மனிதர்கள் மிகக்குறைவு,

சில இடங்களில் அவள் அவளின் தாய் வீட்டிற்கு அனுப்பப்படுவாள் குணமானதும் வா என,இங்கு இப்பொழுது பார்த்தேன் தாய்க்கு காய்ச்சல் ஒரு வேலையும் செய்ய முடியவில்லை, வேலை இருக்கிறது அதுமட்டுமில்லாமல் பிள்ளைகளுக்கும் காய்ச்சல் தொற்றிக்கொள்ளும் என்று கூறி அவளின் பெற்றோர்களை வரவழைத்து அவர்களுடன் அனுப்பி வைக்கப்பட்டாள், உடல் சரியில்லை என்றால் அலுவலகத்தில் விடுப்பு எடுப்பது போல், அப்பெண் 3 நாட்களில் குணமாகிவிட்டாள், ஆனால் வர விருப்பமில்லை என்று சொல்லி விட்டு இப்பொழுது வேலைக்கு செல்கிறார்,

இதெல்லாம் இங்கு சாதாரணம், எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு பெண்களின் மனம் பழக்கப் படுத்தப்பட்டுள்ளது,

எல்லா நேரக்களிலும் பெண்ணாய் பிறந்தால் அனுசரித்து தான் போக வேண்டும் என போதிக்கப்படுகிறது அதுவும் பெண்களால், இதுவே கணவனுக்கோ பிள்ளைகளுக்கோ ஏன் அந்த மாமியார் மாமனார் என்று யாருக்கு எது வந்தாலும் யாரும் எங்கும் அனுப்பபப்படுவதில்லை, அவர்களுக்கும் இவள்தான் சேவை செய்ய வேண்டும், இதுவும் எழுதப்படாத விதி,

ஆணுக்கு ஒரு வீடு

பெண்ணுக்கு இரு வீடு

அதாவது பிறந்த வீடு புகுந்த வீடு என பெருமையுடன் பேசுகிறார்கள், உண்மை என்னவென்றால் ஆணுக்கு ஒரு வீடு, பெண்ணுக்கு ஒன்றும் இல்லை என்பதுதான் உண்மை,

இவள் அங்கும் இங்கும் அனுப்பப் படுகிறாள், மற்ற நேரங்களில் இதுதான் உன் குடும்பம் இதுதான் உன் சொந்தம் என்று பேசும் இடத்தில்தான் நலிந்தால் மட்டும் அனுப்பப்படுகிறாள். இந்த நிலை மாற அப்பெண்ணிற்கு குறைந்த பட்சம் 20 வருடங்கள் ஆகிறது.

அதாவது தன் பிள்ளைகள் வளர்ந்திருக்க வேண்டும். இரண்டாவது சில நபர்கள் இல்லாமல் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் மாறுகிறது,

இது காலங்காலமாய் நடக்கிறது.

அதனால் தான் என்னவோ அநேகப் பெண்கள் புகுத்த வீட்டோடு ஒட்டவே பயப்படுகிறார்கள்.

இந்த அனுபவம் என் பாட்டிக்கும் உண்டு, என் அம்மாவிற்கும் உண்டு, எனக்கும் உண்டு, நாளை என் மகளுக்கு எப்படி என்று தெரியவில்லை,

வெளிநாட்டு தோழர்கள், இங்கு பெண்களை மதிக்க வேண்டும் அவர்களுக்கான உரிமையோடு அவர்கள் இருக்க இடையூறு செய்தால் தண்டணை உண்டு என்று சொல்வதை கேட்கையில் மகிழ்ச்சியாக உள்ளது.

இங்கு இதெல்லாம் பேசினால் அதற்கு நீ திருமணம் செய்யாமல் இரு என ஒற்றை வார்த்தையில் முடித்துவிடுவார்கள்.

இது நான் நாகரீகமாக சொல்ல முடிந்த சிவற்றை மட்டுமே சொல்லி இருக்கின்றேன்

இங்கு பெரும்பாலும் பெண்கள்

அவர்களின் துன்பங்களை வெளியே சொல்வதில்லை, சொன்னாலும் கேட்பதாக இல்லை, அப்படியே மீறி வெளிவந்து சொன்னாலும் அவளை அப்பெண்ணை யாரும் சரியாக பார்ப்பதில்லை, அதனாலே யாரும் முன்வருவதில்லை. சரி போ என போய்விடுகிறார்கள்.

இது வீடுகளில் நடக்கும் ஒரு உரிமையை மட்டுமே எழுதியிருக்கிறன், வீடு, குடும்பம் என்பது பெண்ணில்லாமல் இல்லை, ஆனால் அவளை ஒரு ஒன்றுமில்லாதவளாகவே இன்னும் வைத்திருக்கிறது, எங்கு எப்படியோ இங்கு எங்கள் தமிழ் நாட்டில் பெண்களின் நிலை இதுதான், இதில் படித்தவர் படிக்காதவர் என் எல்லோரும் அடங்குவர்,

மற்றபடி உரிமையோடு வாழும் பெண்களுக்கு வாழ்த்துகள்,

இது உங்களுக்கான பதிவல்ல.

மற்றுமொரு பதிவில் சந்திக்கலாம்,

நன்றி

நல்வாழ்த்துகள்

**நாகேஸ்வரி கருவாச்சி**

திரைத்துறை, சென்னை, தமிழ்நாடு.



# துளிப்பாக்கள்

நிறைந்து வழிந்தது
கோவில் உண்டியல்
மக்கள் வேண்டுதல்கள்.
********************

குடிசைக்குள் மழை
கோணிச் சாக்கு
குடிசைவாசிக்கு குடை
********************

முன்னும் பின்னும் போய்
தறி நூல் சோறு போடுகிறது
நெய்யும் நெசவாளிக்கு
********************

அழகிய ரோஜா இதழ்களை
முத்தமிட்டு செல்கிறது
தென்றல்காற்று
********************

ஓவியத்தில் கிளி
பேசிக் கொண்டிருந்தது
குழந்தையின் மனதோடு

**பூ.சுப்ரமணியன்**

பள்ளிக்கரணை, சென்னை





# சிறுவர் சங்கமம்



## நம் நண்பன்



**செ.ப.கமல்சங்கர்** - சென்னை

‘அப்பா வாங்க போகலாம், அம்மா நீங்க ரெடியா? லேட்டாகுது கிளம்புங்க‘ என்று ஆணையிட்டுக் கொண்டிருந்தான் வருண்.

நெதர்லாந்து நகரத்தில் உள்ள பள்ளியில் ஆறாம் வகுப்பு படித்துக் கொண்டு இருந்தான் வருண். அந்த நகரத்தில் ஒரு சில வேலைகள் செய்ய ரோபோக்கள் தான் பயன்படுத்தப்பட்டன. குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் ஆன்லைனில் ஷாப்பிங் செய்யும் பொருளை டெலிவரி செய்ய ரோபோக்கள் பயன்படுத்தப்பட்டது. அதைப்போல நிறைய செய்திகள் சேகரிக்கவும் அவை உதவின.

வருண் அவன் அம்மா, அப்பாவுடன் காட்டுக்கு பிகினிக் செல்ல கிளம்புகிறான். ஆனால் ஒரு விஷயம் என்னவென்றால் அவனுக்குக் காடு என்றாலே பிடிக்காது. அப்புறம் எதற்கு அம்மா, அப்பாவை இவ்வளவு அவசரப்படுத்துகிறான் தெரியுமா? அவன் அம்மா, அப்பாவின் கட்டாயத்துக்காக மட்டுமே கிளம்புகிறான்.

அவன் ஐடியா என்னவென்று தெரியுமா, அவர்கள் சொல்லும் படி சீக்கிரமாகக் கிளம்பிவிட்டு, அப்புறம் அங்கே சென்றதும் தலைவலிக்கிறது, முடியவில்லை என்று சொல்லி வீட்டுக்கு வந்து விடலாம் என நினைத்தான் வருண்.

அவனுக்குக் காடு மரங்கள் என்றாலே ஏன் பிடிக்காது என்று தெரியுமா? ஒருசமயம் அவன் மரத்தடியில் பேருந்துக்காக நிற்கும்

பொழுது ஒரு பலத்த காற்று அடித்தது. அப்படி அடித்த காற்றில் மரத்தின் கிளை முறிந்து அவன் மேலே விழ பார்த்தது அதிர்ஷ்டவசமாக அவன் தப்பிவிட்டான்.

அதில் இருந்து அவனுக்கு மரங்கள் என்றாலே பயம். அதுமட்டுமல்லாமல் ஒருமுறை மற்றொரு மரத்தின் கீழ் இருந்த எறும்பு புற்றில் இருந்து வந்த பெரிய எறும்புகள் கடித்து அவன் பக்கத்து வீட்டு குழந்தைக்கு உடல் முழுவதும் தடிப்பு ஏற்பட்டு அந்த குழந்தை அழுதுகொண்டே இருந்தது. இதையெல்லாம் பார்த்த வருணுக்கு மரத்தின் மேல் மற்றும் காடுகளின் மேல் பயம் அதிகம் ஆகியது. இதை வெளியில் சொன்னால் எல்லாரும் சிரிப்பார்கள் என்று அவன் யாரிடமும் சொன்னது கிடையாது.

எல்லோரும் 8 மணிக்கு காரில் புறப் பட்டு, காட்டுக்கு பிக்னிக் கிளம்பினர். செல்லும் வழிநெடுக வந்த மரங்களை எல்லாம் வருணின் அம்மாவும், அப்பாவும் இரசித்துக் கொண்டும், புகைப்படம் எடுத்துக் கொண்டும் வந்தார்கள். ஆனால் வருணுக்கு மட்டும் பயம் குறையவே இல்லை.

காட்டுக்கு வந்ததும் கேம்பிங் போட்டு விட்டு குளிர்காய மரக்குச்சிகளைக் கொண்டு வந்து நெருப்பு மூட்டலாம் என்று வருணின் அம்மா சொன்னதும் அதற்கான குச்சிகளைச் சேகரிக்க வருணும், அவன் அப்பாவும் சென்றனர்.

வருண் ஒரு பக்கமும், அவன் அப்பா ஒரு பக்கமும் சென்று குச்சிகளை சேகரிக்கத் தொடங்கினர். விறகுகளை சேகரித்து விட்டு திரும்பும் பொழுது வந்த வழியை மறந்து விட்டான் வருண்.

ஐயோ, எப்படி அம்மா, அப்பாவிடம் செல்வது என யோசித்தான். அம்மா... அப்பா என்று கத்தினான். ஆனால் அவன் இருக்கும் இடம் யாருக்கும் தெரியவில்லை. அந்த நேரத்தில் ஒரு பெரிய சத்தம் கேட்டது அங்கே இருந்த புதருக்குள் இருந்து ஏதோ அசைவது போல தெரிந்தது.


‘ஐயோ, யார் அது? எனக்கு ரொம்ப பயமா இருக்கு என்ன எதுவும் பண்ணிடாதீங்க?‘ என்று கத்தினான் வருண்

‘பயப்படாதே! நாங்கள் உன்னை காப்பாற்றுகிறோம்’ என்று வெளியே வந்தது குரங்கு மற்றும் அதன் நண்பன் மான்.

வருண் அந்த விலங்குகளிடம் ‘எனக்கு ஒரு சந்தேகம் என்றான். உங்களுக்கு நான் பேசுவது எப்படி புரிகின்றது?’

‘இங்கு மனிதர்கள் அடிக்கடி வருவதால் அவர்கள் பேசுவது எங்களுக்கு புரியும்.’

‘சரிதான், நல்லவேளை நீங்கள் இங்கு வந்தீர்கள். எனக்கு மரங்கள் என்றாலே



பயம்' என்றான் வருண்.

'உனக்கு ஒன்று தெரியுமா?, நீ ஆபத்தில் இருப்பதை இந்த மரங்கள் தான் எங்களுக்குக் கூறின. அவைகளின் அசைவுகளை வைத்து எங்களுக்கு உணர்த்தும். அதன்படி தான் நானும், என் நண்பனும் உன்னைக் காப்பாற்ற வந்தோம்'.

'மரங்கள் அப்படி உங்களுக்கு என்ன செய்கின்றன?' என்றான் வருண்

'எங்களுக்கு சாப்பிடப் பழங்கள், காய்கறிகள் தருகின்றன மற்றும் பல பறவைகளுக்கும் இவை வீடாக உள்ளன'

'உங்க நகரத்தில் என்ன உள்ளது?' என்று குரங்கு கேட்டது. 'எங்கள் நகரத்தில் தொழில்நுட்பம் அதிகமாக உள்ளது. அதன் மூலம் சாப்பிடும் உணவு எங்களைத் தேடி வரும்'

'அதுசரி, உணவு உங்களைத் தேடி வருவது போல ஆக்சிஜன் உங்களைத் தேடி வருமா? எல்லோரும் உயிர் வாழ நல்ல ஆக்சிஜன் அவசியம். அதை மரங்களால் மட்டுமே தர முடியும். அதை உங்கள் விஞ்ஞானத்தாலும், தொழில்நுட்பதாலும் முடியாது கண்ணா'

'காடு மற்றும் மரங்கள் இல்லை என்றால் நீங்கள் சுவாசிப்பதும் கஷ்டமாகி விடும். இன்று குடிக்கத் தண்ணீரை விலைக்கு வாங்குவது போலக் காற்றையும் வாங்கும் நிலைவந்து விடும்' என்றது மான்

'நன்றாக சொன்னாய் நண்பா, இப்பொழுது புரிந்ததா வருண்? மரங்களை வெறுக்காதே. அவைகளை நேசிக்கக் கற்றுக் கொள். அவைகளும் உன்னுடன் பேசும் சரிதானே!'

'சரி வா, உன் அப்பா, அம்மா தேடுவார்கள் செல்லலாம் வா' என்று அவனை அழைத்துச் சென்று அவன் அம்மா, அப்பாவிடம் சேர்த்து விட்டன.

வருண் அவைகளுக்கு நன்றி கூறி விட்டு முதல் முறையாக அவன் காட்டின் அழகை இரசிக்கத் தொடங்கினான்.

# மழையும் மழலையும்

கருகருன்னு வானத்தில்
மேகக் கூட்டம் கூடுதே
பளீருன்னு மின்னலும்
வெட்டி வெட்டிப் போகுதே!
மடமடன்னு இடியும்
இடிச்சி மழை பெய்யுதே!

சாரல் மழை பெய்யுது!
சரசரன்னு பெய்யுது!
வெள்ளி மணியைப் போலவே
உருவில் வருது மண்ணுக்கே!
அள்ளிக் கோர்க்க முடியுமா?
அழகு மழையை ரசிப்போமா?

ஊதக் காத்து வீசுது!
ஊசிப் போல குத்துது!
குளுகுளுன்னு வீசுது!
சிலுசிலுன்னு இருக்குது!
மழைத் தண்ணி ஊறியே
மண் குளிர்ந்தது பூமியே!

**கவிஞர் மாலதி இராமலிங்கம்,**
புதுச்சேரி.









ரா.சோபிகா




ஜீ.தேஜேஷ்







பி. ராம்கோபி ராகவி



தி.காயத்ரி





# பச்சைக்கிளியின் இயற்கை உரம்

**ஜீ.மைத்ரேயி - வந்தவாசி**

கூடு செய்யத் தொடங்கிய கிளியொன்று சிறு சிறு குச்சிகளை எடுத்துச் சென்று அழகான கூடு மரக்கிளையில் கட்டி முடித்தது.

அதில் முட்டையிட்டு, அடைகாத்து வந்தது. ஒன்று அல்ல ஆறு முட்டை இட்டது. 28 முதல் 30 நாள் அடை காக்க குஞ்சுக் கிளிகள் பிறந்தது. மரத்தில் உள்ள மற்ற பறவைகள் குஞ்சுகளின் குரலைக் கேட்டு ஆச்சரியப்பட்டன.

குஞ்சுகள் பசியில் கத்திக்கொண்டே இருந்தன. 'கிச்சுகிச்சு' என்று அம்மா கிளி இல்லை என ஒலி எழுப்பிக் கொண்டே இருந்தன. அப்போது அங்கு இருந்த குருவி 'ஏன் இவ்வாறு கத்திக்கொண்டே இருக்கீங்க?' என்று கேட்டது.

'பசியா இருக்கிறது...' எனவும் குருவி சாப்பிட புழுக்களைக் கொடுத்தது. அதை சாப்பிடத் தொடங்கியதும் கத்துவதை நிறுத்தின குட்டி கிளிகள்.

அப்பொழுது அம்மா கிளி வந்தது அதைச் சாப்பிடக்கூடாது என்று சொல்லியது. இதைக் கேட்ட குருவி மிகவும் கோபப்பட்டது. 'ஏன் கிளி உன் பிள்ளைகளுக்கு நான் உணவு கொடுக்க கூடாதா?' எனக் கேட்டது.

'இல்லை குருவி... நீங்கள் கொடுத்ததற்கு நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால், நீங்க கொடுத்த புழுவில் சத்து இருக்காது. குருவி அத்தை கொடுத்த மண்புழு

சத்துக் குறைவாக தான் இருக்கும்' என்றது அம்மா கிளி.

இதை அருகில் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்த குருவி, கிளியின் கூட்டின் அருகே பறந்து வந்து அமர்ந்தது. 'என்ன? கிளி நான் கொடுத்த புழுவில் மட்டும் சத்து இருக்காது! ஆனால் நீ கொண்டு வந்த புழுக்கு மட்டும் சத்து இருக்கிறதோ?' எனக் கோபமாக கேட்டது குருவி.

'ஐயோ! குருவி என்னை தவறாக புரிந்து கொள்ள வேண்டாம். நீங்க கொடுத்த புழுவில் சத்துக் குறைவாக இருக்கும்.'

'எனக்கு நீ சொல்வது புரியவில்லை! புரியும்படி சொல்' என்று கேட்டது குருவி.


' குருவி அக்கா நமது மரத்தின் பக்கத்தில் உள்ள வயலில் உள்ள பயிர் வகைகளை பயிரிட்டு உள்ளார்கள். அதுவும் மிக செழிப்பாக வளர்ந்து கொண்டிருக்கிறது. நமக்கு அருகிலேயே கிடைக்கிறது என்பதால், நாமும் அதை உண்டு மகிழலாம். ஆனால் இவை அனைத்திலும் சத்து கிடையாது'

கிளியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தது குருவி.'செயற்கை உரம், இரசாயன மருந்துகள் இதை எப்படி கண்டுபிடிக்கிறது?' என ஆர்வமாக கேட்டது குருவி.

'இங்கு செழிப்பாக வளர்ந்திருக்கும் செடியிலும் இலைகளிலும் கூட பூச்சி அரிக்கவே இல்லை. இதில் வெட்டுக்கிளி கூட வரவில்லை. அதைவிட எந்த வயலிலும் எவ்வளவு நேரம் நீங்கள் மண்ணை கிளறினாலும் ஒரு மண்புழு கூட வராது'.


'ஆனால் கொஞ்ச தூரம் தள்ளி பயிரிட்ட பட்டுள்ள வகைகளில் இயற்கை உரம் என்பதால் மண்புழுகள் நிறைந்து இருக்கும் அவைகளை உண்பதற்காக வெட்டுக்கிளிகள் நிறைய வரும்'.

கிளியும், குருவியும் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்ட மற்ற பறவைகளும் 'அடடா! இது தெரியாமல் நாம் இவ்வளவு நாட்களாக சாப்பிட்டுக் கொண்டிருந்தோமே!' என நினைத்து, 'ஆமா! ஆமா! இனி நாங்களும் செயற்கை உரம் சாப்பிடாமல், இயற்கை உரமே சாப்பிடுவோம்' என்று அனைத்து பறவைகளும் பச்சைக்கிளியிடம் கூறின.





ரா. ஷிவானி



ஜீ.நறுமுகை

# மானின் பேராசையும் சிங்கத்தின் தண்டனையும்



ஒரு அடர்ந்த காட்டுக்குள்ள ஒரு சிங்கம் இரை தேடி வேட்டையாடி நல்லா சாப்பிட்டு தன்னோட குகைக்கு வந்துச்சாம். அப்போ அதோட குகைக்குள்ள ஒரு மானும், இரண்டு மான் குட்டிகளும் இருந்துச்சாம்.

சிங்கத்தைப் பார்த்தவுடனே மான் ரொம்ப பயந்துடுச்சாம். 'பயப்படாத நான் எதுவும் பண்ண மாட்டேன். எதுக்காக என்னோட வீட்டுக்கு வந்திருக்கன்னு' கேட்டுச்சாம்.

'சாப்பாடு தேடி தான் வந்தேன். ஆனா எனக்கு கால் ரொம்ப வலிக்குது, சுத்தமா நடக்கவே முடியல. அதான் கொஞ்சம் ஓய்வெடுக்கலாம்னு வந்தேன். உங்க வீடுன்னு தெரியாது' ன்னு சொன்னுச்சாம்.

'சரி இப்போ நீ என்னோட விருந்தாளி, உனக்கும், உன்னோட குட்டிகளுக்கும் நானே சாப்பாடு கொண்டு வரேன்' னு மானோட உணவுகளைக் கொண்டு வந்து குடுத்துச்சாம்.

அதுக்கப்புறம் மான், 'உங்கள எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. நான் ரெண்டு மூணு நாள் இங்க தங்கிட்டுப் போலாமா?' ன்னு கேட்டுச்சாம். சிங்கமும் சரின்னு சொல்லி, தினமும் அது சாப்பிட்டுட்டு, மானுக்கும் அதோட உணவுகளைக் கொண்டு வந்து குடுத்துச்சாம்.

அப்போ மான், 'அட இந்த சிங்கத்தை ஈசியா ஏமாத்தலாம் போலயே, இப்படியே ஏதாவது சொல்லி இங்கேயே இருந்துட்டா, சிங்கமே நமக்கு சாப்பாடை தினமும் கொண்டு வந்து குடுத்துடும். நாம ஜாலியா இருக்கலாம்'னு நெனச்சு அதை மான் குட்டிகள்கிட்ட சொன்னுச்சாம்.

அதை சிங்கமும் கேட்டுடுச்சாம். 'ஏய், பாவம் முடிமயாம என் வீட்டுக்கு வந்தியேன்னு பார்த்து உதவி செஞ்சா, நீ என்னையே ஏமாத்தப் பாக்குறியா. நீயா உழைச்சு சாப்பிடாம, என் உழைப்பை சுரண்டி சாப்பிடுறியா? கஷ்டப்பட்டு உழைக்காம உக்காந்து சாப்பிடணும்னு

நெனக்கிற நீ வாழத் தகுதியே இல்லாத ஆளு. இப்போ நீதான் என்னோட இரை' ன்னு சொல்லி மான் மேல் ஒரே பாய்ச்சல், அடிச்சு சாப்பிட்டுச்சாம்.

மான் குட்டிகள் ரெண்டும் பயந்து குகையோட ஓரமா ஒண்டிக்குச்சுங்களாம். 'நமக்குத் தேவையானதை நாம தான் தேடிப் பெறணும். உங்கம்மா மாதிரி அடுத்தவங்க உழைப்பை சுரண்ட நெனச்சா இது தான் கதி. உங்கள மன்னிச்சு விடறேன். போங்க போய் உழைச்சு சாப்பிடுங்க' மான் குட்டிகளைப் பார்த்து சிங்கம் கோபமா சொன்னதும், மான் குட்டிகள் ரெண்டும்

'சிங்க ராஜா! ரொம்ப நன்றி, நாங்க யாரையும் ஏமாத்த மாட்டோம்னு. அப்படி நெனச்சா என்ன நடக்கும்னு சரியான பாடம் புகட்டிடீங்க' சொல்லிட்டு குடுகுடுன்னு வெளிய ஓடிப் போய்டுச்சுங்களாம்.

நீதி:

நாம் அடுத்தவர்களை ஏமாற்றி, அவர்களின் உழைப்பை திருட நினைத்தால் நமக்கு அழிவு உறுதி. நம் உழைப்பே நமது உயர்வு

**பி. ரிதன்யா**
ஒன்றாம் வகுப்பு
முசிறி



# தம்பி

அதிகாலை விடியலிலே
விழிதிறந்திடு தம்பி
அழகான பொழுதினிலே
முகம்கழுவு தம்பி

பக்குவமாய் இறைவனைத்
தொழுதிடு தம்பி
பள்ளி செல்லும்
புத்தகங்கள் திறந்திடு தம்பி

பசுங்கிளிபோல் சந்தோசமாய்
இருந்திடு தம்பி
பாவை போல
சொல்வதையும் கேட்டிடு தம்பி

அன்பு அம்மா
தருமுணவை உண்ணு தம்பி
ஆரோக்கியம் நிறையுணவு
பாரு தம்பி

அகிலமெல்லாம் உன்புகழ் சேரு தம்பி
அக்கறையாய் அனுதினமும்
வாழு தம்பி



**சேஹ" மொஹம்மது பெனாஸிரா**
முஸ்லிம் ஹல்மில்லாவ.

# காட்டுக்குள் வீடு

ஒரு காட்டில் நிறைய விலங்குகள் ஒற்றுமையோடு வாழ்ந்து வந்தன.

ஒரு நாள் மிருகக்காட்சிசாலையிலிருந்து தப்பி வந்த யானை அந்த காட்டிற்கு வந்து சேர்ந்தது. எல்லோரிடமும் அன்பாக தோழமையோடு இருந்தது.

இன்னுமொரு நாள் விலங்குகள் எல்லாம் பேசிக் கொண்டிருக்கும்போது புதிதாக வந்த யானை ல்நான் மனிதர்கள் வாழும் ஊர்களுக்குப் பயணப் பட்டிருக்கிறேன். அங்கு பெரிய பெரிய வீடுகளும் மாளிகை போன்ற பங்களாக்களையும் பார்த்திருக்கிறேன். மனிதர்கள் அதற்குள் வசிக்கிறார்கள். வெயில், மழை எல்லாவற்றிலும் அவர்களால் பாதுகாப்புடன் இருக்க முடிகிறது. நாம் ஏன் அப்படியொரு வீட்டை நமக்காக கட்டி கொண்டு நாம்



எல்லோரும் சேர்ந்து ஓரேயிடத்தில் வசிக்கக்கூடாது?' என்று தன்னுடைய எண்ணத்தை வெளிப்படுத்தியது. மற்ற விலங்குகள் சிறிது யோசித்தாலும் பிறகு செய்துதான் பார்க்கலாமே என்று முடிவெடுத்தன.

தந்திரத்திற்கு பேர் போன நரி, புதுக் கட்டிடத்திற்கான வரைபடத்தை தயார் செய்தது. வாசற்படி உயரமாகவும், நுழை வாயில் அகலமாகவும், அறை விசாலமாகவும் வடிவமைத்தது.

யானை காட்டில் உள்ள உடைந்த மரங்களை சேகரித்து வந்தது. மரங்கொத்தி அதனை கட்டமைப்பிற்கு தகுந்தவாறு செதுக்கித் தந்தது. முயல், அடி தளத்திற்கான குழிகளை தோண்டிக் கொடுத்தது. கரடியின் மேற்பார்வையில் கட்டிடம் கடகடவென வளர்ந்தது. மேல்தளம் கட்டவும் கூரை போட்டு முடிக்கவும் ஒட்டகச் சிவிங்கி உதவி செய்தது. பெரிய மாளிகையாக, பிரம்மாண்டமாக உருவானது மிருகங் களுக்கான வீடு.

நல்ல நாள் பார்த்து காட்டு ராஜாவான சிங்கத்தை சிறப்பு விருந்தினராக அழைத்து கிரகப்பிரவேசமும் முடிந்தது.

அன்று இரவு வீடு கட்டிக்கொண்ட மிருகங்கள் அனைத்தும் சேர்ந்து தங்க முடிவெடுத்தன.

'நீங்கள் எல்லோரும் வீட்டிற்குள் படுக்கச் செல்லுங்கள். எனக்கு இரவில் தூக்கம் வராது. நான் வெளியே இருந்து கொண்டு காவல் காக்கிறேன்ல்' என்றது ஆந்தை.

யானை, கரடி, ஒட்டகச்சிவிங்கி,முயல், முள்ளம்பன்றி. இப்படி வரிசையாக படுத்து கொண்டது.

யானைக்கு புரண்டு படுக்க இடம் போதவில்லை. முள்ளம்பன்றிக்கு இரவுத் தூக்கம் பழக்கமில்லாததால் புரண்டது. பக்கத்தில் படுத்திருந்த ஒட்டகச்சிவிங்கியின் உடலில் முள்ளம்பன்றியின் உடலில் உள்ள முட்கள் குத்தியது. ஒட்டகச்சிவிங்கி முள்ளம்பன்றியைத் திட்டியது. மண்ணில் குழி தோண்டி பதுங்கும் முயலால் வீட்டில் படுக்க முடியவில்லை. கரடி விட்ட குறட்டையில் வீடே அதிர்ந்தது.

அப்போது தான் மிருகங்களுக்கு புரிந்தது. தன்னுடைய இருப்பிடத்திலும் இயல்பிலும் இருப்பது தான் அழகு அவசியம் என்று.

அடுத்த நொடி அனைத்தும் தன்னுடைய இருப்பிடங்களைத் தேடி நகரத் தொடங்கியது.

இன்றும் அந்தக் காட்டில் அந்த யாருமில்லாத மாளிகை பராமரிப்பில்லாமல் கிடக்கிறது..

சரி, அந்த வீடு எங்கிருக்கிறது? யோசிக்க தோணுகிறது அல்லவா.?

கற்பனைக்கென்ன வேலி? எங்கே வேண்டுமென்றாலும் வீடு கட்டிக் கொள்ளலாம் தானே!!

என்ன குட்டிஸ் உங்களுக்கு இந்த கதை பிடித்ததா?

**செ.ஸ்ரீதேவி**



# வெண்பா போட்டி 46

**காலம் : அக்டோபர் 2025**

வெடிகளை கையில் வெடிக்கவைக்க வேண்டா
அடிப்படை காப்புமுறை ஆக - துடிப்புமிகு
பிள்ளையரை தூரவைத்துப் பின்னர் களிப்புடன்
துள்ளல்கொண் டாட்டம் தொடர்.

**பக்ருதீன் இபு ஹம்துன்**

.

அரிய  வகைவெடி  அத்துணையும் நஞ்சைத்
துரிதமாய்த் தாக்கித் தொலைக்கும் - விரைந்து
வெடிப்பக்கம்  சென்று விளையாடும் பிள்ளை
அடிபட்டு வீழும் அறி!

**பாவலர் கோவதன்,  மலேசியா**

.

பட்டாடை தீப்பற்றும் பாதுகாப்பைப் பின்பற்று
சட்டென ஆபத்தால் சங்கடம் எட்டிவிடும்
விட்டுவிடு வேடிக்கை வீண்விரயம் தேவையில்லை
நட்டமே இல்லை நமக்கு.

**கவிஞர் க.தங்கவேலு, கிருட்டிணகிரி**

.

தரையிலே வைத்தபின் தள்ளியே நிற்போம்!
விரைவாய் வெடிக்கும் வெடிகள் - விரைவினில்
காயங்கள் செய்யும்! கவனமது கொள்வோமே
தீயதைத் தீண்டாம லே.

**இரா . சம்பந்தன் - யேர்மனி**

.

அச்சம் அகற்றி அழகாக எவ்வெடியும்
வச்சுவெடி வாராது எத்துயரும்... மெச்சிடவே
வானவெடி மத்தாப்பு வண்ணச் சரவெடிகள்
காணவே பத்திரமா வை.

**பாவலர் தாழை ந. இளவழகன், மணப்பாறை.**

.

திருமாலைப் போலெண்ணித் தீப்பறக்கக் கையில்
ஒருபோதும் சக்கரமேந் தாதீர் - அருமைமிகு
நல்லுடல் வெந்து நலமிழக்கும் மூத்தவர்
சொல்வதைக் கேட்டால் சுகம்

**இரா அழகர்சாமி**

.

பின்னல் சடையில்லை பிள்ளையே நீகவனம்
சின்ன அணுகுண்டும் சீர்குலைக்கும் - இன்பம்
குலைத்திடும் இன்னல் குவிக்கும் மகிழ்ச்சி
தொலைத்திடும் விழாக்களில்க வனம்

**பாண்டிச் செல்வி கருப்பசாமி, கோவை**

.

கையிலே வைத்துக் கருந்திரி பற்றவைத்தால்
மெய்யிலே தீப்புண்ணும் மேவிடலாம் - கையெட்டுந்
தூரத்தில் வாணத் திரியேற்று தீயொடு
வீரத்தைக் காட்டுதல் வீண்.

**க. சங்கரபாண்டியன்**

.

பட்டாசு மத்தாப்பால் பாதிப்பு தோன்றும்பின்
துட்டப் படுவானேன் தூக்கியெறி - பட்டதுயர்
போதும் இனிவேண்டாம் பொன்னான நாளன்று;
பீதியது வேண்டாம் பிறகு !

**எம்.ஆர்.தனசேகரன், மலேசியா**

.

காலிலே மத்தாப்புக் கம்பிகள் சுட்டுவிடும்
காலில் அணிந்துகொள் காலணி - பாலன்
வெடித்துச் சிதறும் வெடிக்க ருகிலே
துடிப்புடன் நிற்க துயர்!

**கீதா அருண்ராஜ்**

.

ஊமை வெடிதனை ஊதாதே ஓர்நொடியில்
தீமை நிகழ்திடும் தீயனைத்தும் - பூமியில்
ஆராய்ந்தார் வாழ்ந்திடுவார் ஆபத்தும் வாராதே
சீரான வாழ்வே சிறப்பு.

**ப. முருகன் யோகீஸ்வரர்**

.

மத்தாப்பும் பட்டாசும் மொத்தமாய் வாணமுமே
மெத்தவும் ஆபத்தே மேதினிக்கே - தித்திப்பும்
வத்திரமும் கொண்டேநீ வக்கணையாய்க் கொண்டாடு
வத்தியாலே தீபா வளி.

**சி. செல்லமுத்து, மேல்மங்கலம்**

.

காசைக் கரியாக்கி வாணம் விடாதேடா
மாசுபடுத்தாதே மன்றமெலாம் ஏசிப்
பெரியோர் புலம்பப் பிதுங்கும்உதடு
சரி சரி வந்து வெடி

**அன்புவல்லி தங்கவேலன்**

.

முத்தாய்ப்பாய்ச் சொல்கின்றேன் முன்மதிக் கண்மணி
மத்தாப்புப் பற்றிட மண்மீது - மொத்தமாய்க்
குச்சிகளைப் போட்டுப்பின் குற்றமற்ற தண்ணீரில்
உச்சிமுதல் மூழ்கடிக்கப் பார்!

**சோ. சுந்தரேசுவரி**

.பட்டாசு பற்றவைத்தால் பற்றும் பெருந்துன்பம்
கிட்ட நெருங்குவதால் தேர்ந்தறிவீர் - நட்டநடு
வீதியிலும் செய்யாதீர் வீணே நடைபயில்வோர்
காதினுக்குந் தீங்காகுங் காண்

**ஜின்னாஹ் (இலங்கை)**

.

வெடிக்காதக் குப்பைகளை வேகமாகச் சேர்த்து
அடிதூள்.. மருந்து அழகாய்ப் பிடித்து
பிரித்துநீ பூத்திரிசெய் பின்னர்பூ வாகப்
சிரிக்கும் அழகோ சிறப்பு.

**தென்றல் கவி**

.

நெரிசல் இடத்தில் நெருப்பை வளர்க்கும்
திரிசல் வெடியிலே தீயினை வைத்து
வெடிக்கும் செயலது வீணே உணர்வாய்
படித்த விதியைப் பழகு.

**கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி.**

.

வெடிகள் வெடிக்க வெடிக்காமல் போக
வெடிக்க முயல வினையே! - படித்துப்
பலமாய் உரைக்கின்றேன் பார்த்து நடப்பாய்
நலமாய் உடலினை நாடு.

**பாவலர்மணி வா.சண்முகம்**

.

விதிமுறைக் குட்பட்டு நேர்த்தியாய்ச் செய்த
பதிவெண்கள் உள்ளதா பார்ப்பீர்? - மதிப்புடன்
நல்லதையே வாங்கினால் நாட்டுக்கும் நல்லதாம்
எல்லோர்க்கும் நல்லதாம் இங்கு!

**செ. இராசா**

குப்பியில் வாணத்தைக்  குத்தி வெடித்திட
எப்புறமும் தீப்பொறிகள் ஏற்படத் - தப்பாமல்
பக்கக் குடிசையும் பற்றியே சாம்பலாகும்
பக்குவமாய்க்  கொண்டாடிப்  பார் .

**கவிஞர் கவி நிலா மோகன்,  தஞ்சாவூர்.**

.

பட்டாசும் வேண்டாமே பாதிப்பும் வேண்டாமே
தொட்டாலே சீறும் தொடவேண்டா ... பட்டாசை
தீபங்க ளேற்றி திருநாளைக் கொண்டாடு
சாபங்கள் தேடாதே சான்று .

**ஜெ வசந்தி, பளை**

.

வெடிகள் திறனாய் வெடித்திட வேண்டும்
வெடியால் நிகழும் விபத்து - முடிவெடு
பண்டிகையில் மூத்தோர்சொல் பாதுகாப்பைப் பின்பற்று
கண்டிடு உள்ளக் களிப்பு.

**ஓசூர் மணிமேகலை**

.

தூங்கும்  குழந்தைகள் தொல்லையின்றி தூங்கட்டும்,
ஏங்கும் எளியவர்கள் ஏக்கமும் நீங்கட்டும்,
ஆங்கு  அனைவருட(ன்) அன்பில் விளையாடு
தீங்கில்லாத் தீபவொளி தீ.

**குயில்.மு.இரசியா பேகம்.**

.

பட்டாசு வேட்டொலியும் பற்றவைத்த தீப்பொறியால்
சிட்டாகச் சூழ்ந்த சிறிசுகளின் பேரொலியில்
முற்றாய்க் களிப்பினிலே மூழ்கினாலும் நூல்களிலே
கற்றவழி முன்னேசெய் காப்பு.

**அ. சி. தியாகராசன்.**

.

வெடிகள் வெடித்தல் விபத்தைத் தருமே
முடிந்த வரைக்கும் முறையாய்க் - கடிதாய்
அதிரும் ஒலியுள் அணுகுண்டு போன்ற
புதிராம் வெடிகளே புண்.

**பொ.முத்துராக்கு**

.

பட்டாசைப் பத்திரமாய்ப் பார்த்து வெடித்திடுக
கிட்டப்போய்க் காலில் கிளறாதே - கட்டாய்ச்
சுருள்வெடியைச் சுற்றிவந்து ஆடிநீ வீழ்ந்தால்
இருளாமுன் தீவாளி இங்கு

**முனைவர். சுந்தரராசன் தயாளன், பெங்களூரு**

.

வெடிக்காத பட்டாசை வேடிக்கை மட்டும்பார்
வெடிக்காமல் உன்முன் வெகுவாய் - நடிக்கும்பார்
பட்டென ஓடாது பாதுகாப் பாய்த்தடியில்
தட்டிப்பார்த் தூற்றிடு தண்ணீர்

**ம.பழனிச்சாமி, திருப்பூர்**

.

வெடிதன்னைக் கைகளில் வைக்காதீர் நீண்ட
தடிஊது வத்தியால் தீவை - வெடிக்காத
மத்தாப்பைத் தாய்தந்தை மற்றோர் உதவியுடன்
பத்திரமாய் வைப்பாய் மகிழ்ந்து !

**பாவலர் கருமலைத்தமிழாழன், ஒசூர்**

.

தீப திருநாளில் தேவை விழிப்புணர்வு
கோபம் அடையாமல் கூறிடும் ஆபத்(து)
அறிந்து வெடிப்பாய்! அனைவரும் இன்பம்
செறிய மகிழ்வுறலாம் சேர்ந்து.

**மாலதி திரு**

.

வெடியும் வெடித்தலை வீணென யெண்ணி
படிப்பினைகள் கூறிப் பகிர்வார் - முடிவில்
பிடிவாதம் செய்திடா பேரின்ப வாழ்வைக்
கடிதாக்கா வெல்வாய்க் களிப்பு.

**நிறைமதி நீலமேகம்**

வெடியை ஒழுங்காய் விடியும் வரையில்;
வெடிக்கும் பொழுது; விழுந்து - கிடக்கும்,
வெடியை மறந்துநீ மீண்டும் எடுத்தால்;
வெடிக்கும் அதுவுமே மீண்டு!!!

**முனைவர். பாவலர்.சா.தமிழ்க்குமரன்,
புதுச்சேரி**

விண்ணில் ஒளிரும் வெடியின் அழகையே
கண்களில் கண்டு களிக்கும் குழந்தாய்
பதமாய் வெடிகளை பாங்காய் வெடித்தே
இதமாய் மகிழ்வாய் இனி

**வளர்மதி முருகன், புதுச்சேரி**

நெரிசல் இடத்தில் நெருப்பை வளர்க்கும்
திரிசல் வெடியையா வைப்பாய் ல் புரிந்தே
வெடிக்கும் செயலது வீணே உணர்வாய்
படித்த விதியைப் பழகு.

**கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி**

# வெண்பாப் போட்டி (பயணம்) 47

**போட்டியின் கால அளவு :** நவம்பர் **01** முதல் **12** வரை **2025**

**இம்மாதப் போட்டி....**

**இம்முறை சற்று நுணுக்கமான போட்டி**

**என்னவென்றால்....**

## "இனிமேல்"

.

இந்த 'இனிமேல்' என்ற சொல்லைத் தனிச்சொல்லாகக் கொண்டு ஆளுக்கொரு வெண்பா எழுத வேண்டும்.

இது நம் கவிஞர்களுக்கு ஆகச் சுலபமான தலைப்பு என்பதால் இம்மாதம் எடுத்துக்காட்டுப்பாடல் கொடுக்கப்படவில்லை.

**ஒருவர் ஒரு வெண்பா மட்டுமே எழுதவும்.**

நன்றி🙏

.

பொதுவான விதிகள் :- ஒருவர் பயன்படுத்திய பாடுபொருளை இன்னொருவர் பயன்படுத்த வேண்டாம். வெண்பாவிற்குக் கீழ் எழுதியவர்கள் தங்கள் பெயரினை தமிழில் எழுதுதல் அவசியம்.

அசத்துங்கள் கவிஞர்களே....

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் ப ட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே... உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகிருங்கள் போதும். காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்.

தளர்வுகள் :-

தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டா யம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்தைகளோ, அல்லது வட்டா' வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

என்றும் தமிழுடன்....

**தமிழ்நெஞ்சம் ஆசிரியர்**

மற்றும்

தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு




புத்தக வடிவமைப்பு மற்றும் அச்சக வேலைகள்
அனைத்திற்கும் அனுகவும்
குறிப்பிட்ட காலத்தில் கால தாமதமின்றி
குறைந்த கட்டணத்தில் செய்துத் தருகிறோம்